மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

TIRUNELVELI

தொலைநெறி தொடர்கல்வி இயக்கம்

DIRECTORATE DISTANCE & CONTINUING EDUCATION

TIRUNELVELI


# உரையாசிரியர்கள்

முதுகலை முதலாமாண்டு

இரண்டாம் பருவம்


2024

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி – 627 012

# உரையாசிரியர்கள்

அலகு 1

உரை - பொது விளக்கம் - உரை வகைகள் - இலக்கண,இலக்கிய உரைகள்- அதன் உள் வகைகள்

அலகு 2

இலக்கண உரைகள்

வகைமை அடிப்படையில் உரையாசிரியர்- ஐவகை இலக்கண உரைகள்- நூல் அடிப்படையில் உரை- தொல்காப்பியம், நன்னூல் முதலான இலக்கண உரைகளுக்கு இடையே உள்ள பொதுத்தன்மைகள்- இலக்கண உரை வரலாறு

அலகு 3

இலக்கிய உரைகள்

வகைமை அடிப்படையில் உரைகள்- சங்க இலக்கியம்- அற இலக்கியம்- காப்பியம்- புராணம் பக்தி, சிற்றிலக்கிய உரைகள்- சமய இலக்கிய உரைகள்- நூல் அடிப்படை வகை- புறநானூறு, சிலப்பதிகாரம், திருக்குறள் முதலான உரைகள், தத்துவ உரைகள்

அலகு 4

உரை ஆய்வுகள்

உரை வளம், உரை கொத்து, தொகுப்புரைகள்- மதிப்பீடுகள் -உரையில் வரலாற்று பின்னணி- உரையாசிரியரின் பல உரைகள் பற்றிய ஆய்வு வரலாறு- உரைகளைப் பற்றி ஆராய்ந்தவர்கள்

அலகு 5

உரை ஆளுமைகள் தனித்தன்மைகள்

இலக்கண உரையாசிரியர்கள்- இலக்கிய உரையாசிரியர்கள்

அலகு 1

## உரை - பொது விளக்கம்

இலக்கியம் என்பது படைக்கப்படுவது. அது ஒரு கலைவடிவம். உரை என்பது அறிவு சார்ந்தது ; இலக்கியத்தைப் பிறர்க்கு விளக்குவது ; இலக்கியம் பற்றிப் பேசுவது. உரை என்ற சொல், வளம் நிறைந்தது. அது, மூன்று நிலைகளில் பயன்படுகிறது அல்லது பொருள்படுகிறது. தமிழின் மிகப் பழைய இலக்கணமாகிய தொல்காப்பியத்திலேயே இதனைக் காணலாம். உரை - உரைத்தல் ; சொல்லுதல் (To tell); இதுதான் அடிப்படையான பொருள். அடுத்து, உரை - உரைநடை (prose) . மூன்றாவதாக உரை - விளக்கம் ; இலக்கியம் அல்லது இலக்கணத்தை விளக்குவது (Commentary).

நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்

- (தொல்காப்பியம்,கற்பியல்-12)

சொல்லு-கூறு என்ற பொருளில் உரை என்ற சொல் இடம் பெறுகிறது. இதுவே பெரும்பான்மையான வழக்கு. அடுத்து, இச்சொல் உரைநடை (prose) என்ற பொருளிலும் தொல்காப்பியரால் பயன்படுத்தப்படுகிறது. செய்யுளியல் என்ற பகுதியில் (சூத்திரம் 157, 158), அடிவரையறையில்லாச் செய்யுள்கள் ஆறு என்று சொல்லி, அவற்றுள் ஒன்றாக, உரை என்பதை அவர் சொல்லுகிறார். பாடல் முழுவதும் பாட்டாக அல்லாமல் இடையிடையே குறிப்பாகவும் விரிவாகவும் இடம் பெறுவது உரை என்பது அவர் கூற்று.

பாட்டிடை

வைத்த குறிப்பி னானும்

பாவின் றெழுந்த கிளவி யானும்

பொருள்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்

பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்

உரைவகை நடையே நான்கென மொழி

- (செய்யுளியல்-166)

இவ்வாறு உரை அல்லது உரைநடை அமைகிறது என்பதுதான் உரைநடையின் தொடக்கப் பண்பு ஆகும். சிலப்பதிகாரம், 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்று அதன் பதிகம் கூறுகிறது. உரைநடையின் வரலாறு இவ்வாறு அமைகிறது.

உரை என்பது, விளக்கம் அல்லது புலப்பாடு என்ற பொருளில், மரபியலில் தொல்காப்பியர் பேசுகிறார். சூத்திரத்தின் உட்பொருளைப் பேசுவது உரை; உட்பொருள் மட்டுமல்லாது, இன்றியமையாத கருத்துகளையும் பேசுவது உரை ; மேலும் 'ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்குவது உரை' என்று தொல்காப்பியர் சொல்கிறார் (மரபியல் 105, 106).

இம்மூன்று பொருள்களையும் தொகுத்து, "உரைத்தல் - உரைநடையில் உரைத்தல் - இலக்கியம் அல்லது இலக்கணத்தின் உட்பொருளையும் அதனைச் சார்ந்த வேறுபொருட்களையும் செவ்விதின் உரைத்தல் அல்லது விளக்குதல்" உரை என்று சொல்லலாம். உண்மையில் இதுதான் திறனாய்வுக்கும் உரிய அடிப்படையான வரையறையாகும்.

**உரை வகைகள்**

இலக்கியம் பல தோன்றியபின், அவற்றின் இயல்புகளை ஆராய்ந்து கூறும் இலக்கணம் தோன்றுகிறது.

எள்ளினுள் எண்ணெய் எடுப்பது போல

இலக்கியத் தினின்றும் எடுபடும் இலக்கணம்

என்பது ஆராய்ந்து கூறிய உண்மையாகும்.

அடி மரத்திலிருந்த கிளையும், கிளையிலிருந்து கவையும், கவையிலிருந்து கொம்பும் பிரிந்து வளர்ந்து நிற்பதுபோல நூலுக்குத் தோன்றியஉரை, விளக்கம், விரிவு ஆகியவை ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்து காலப்போக்கில் பெருகி வளர்ந்து வந்தன. உரைகளின் பல்வேறு வகைகளையும்அவற்றின் இயல்புகளையும் ஆராய்ந்து அறிந்த புலவர்கள், அவற்றிற்குஇலக்கணம்

வகுத்தனர். உரையின் இலக்கணத்தை உரையாசிரியர்களேகூறினர். உரைத்திறம் உணர்த்துதலும் உரையின் இயல்புகளுள் ஒன்றானது.

வயிர ஊசியும், மயன்வினை இரும்பும்

செயிரறு பொன்னைச் செம்மைசெய் ஆணியும்

தமக்கமை கருவியும் தாம்ஆம்; அவைபோல்

உரைத்திறம் உணர்த்தலும் உரையது தொழிலே.(அகத்தியம்.258)

என்ற பாடல் உரையின் சிறப்பினை எடுத்துரைக்கின்றது.

**பாயிரம்**

நூலுக்கு உரை எழுதத் தொடங்குமுன், உரையாசிரியர்கள் நூலைப் பற்றிய பொதுவான செய்திகளைத் தொகுத்துக் கூறினர். நூல் உரைக்கும்ஆசிரியன் இயல்பு, நூல்கேட்கும் மாணாக்கன் தகுதி, பாடம் சொல்லும்முறை, பாடம் கேட்கும் முறை ஆகியவற்றையும், நூலின் வரலாறு, ஆசிரியர்வரலாறு ஆகியவற்றையும் விளக்கமாகக் கூறியபின் நூலுக்கு உரை எழுதத்தொடங்கினர். இவற்றோடு உலையின் வகைகளையும் அவற்றின்இயல்புகளையும் விளக்கினர். தம் கருத்துகளைச் சூத்திரங்களாக இயற்றிஉரையின் இடையில் தாமே சேர்த்து வழங்கினர். உரையாசிரியர்கள்இயற்றியவை உரைச் சூத்திரங்கள் எனப்பட்டன. நூலுக்கு உரை எழுதத்தொடங்குமுன், உரையாசிரியர்கள் எழுதிய பொதுவிளக்கம் பாயிரம் என்று பெயர் பெற்றது.

**பாயிர வகை**

பாயிரம் பொது, சிறப்பு என இரண்டாய்த் தொடக்கத்தில் இருந்தது. பின் சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் நூற்சிறப்புப் பாயிரம் என இரண்டாயிற்று. உரையாசிரியர்கள் நூலுக்குமுன், எழுதிய முகவுரை உரைப் பாயிரம் என்றும், உரையாசிரியர்களையும் உரைகளையும் சிறப்பிக்கும் பாயிரம் உரைச் சிறப்புப் பாயிரம் என்றும் வழங்கப் பெற்றது. பொருளைத் திரட்டிக் கூறுவது நூற்பாயிரம் அல்லது பதிகம் என்றும் வழங்கலாயிற்று.

உரை வகை

தொல்காப்பியர் செய்யுளியலில்,

நூல்எனப் படுவது நுவலும் காலை
முதலும் முடிவும் மாறுகோள் இன்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உள்நின்று அகன்ற உரையொடு புணர்ந்து
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே,

(செய். 159)

என்று கூறுகின்றார். "உள் நின்று அகன்ற உரை" என்று கூறி இருப்பது உற்று நோக்கத் தக்கது. செய்யுளியலில் 'அகன்ற உரை' என்று கூறினரே அன்றி உரையின் வகைகளைக் கூறவில்லை. ஆனால் மரபியலில் உள்ள சூத்திரங்கள் உரையினைக் காண்டிகை, உரை என இரண்டாகக் கூறி விளக்குகின்றன. உரை என்ற சொல், விருத்தி என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது.

பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பிற்
கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும்

(மர. 102)

விட்டகல் வின்றி விரிவொடு பொருந்திச்
சுட்டின சூத்திரம் முடித்தற் பொருட்டா
ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்
மேவாங்கு அமைந்த மெய்ந்நெறித் ததுவே

(மர.104)

என்ற சூத்திரங்கள் இரண்டும் காண்டிகை உரையின் இயல்பினைக் கூறுகின்றன.

சூத்திரத்து உட்பொருள் அன்றியும் யாப்புற
இன்றி யமையாது இயைபவை எல்லாம்
ஒன்ற உரைப்பது உரைஎனப் படுமே.

(மர. 105)

மறுதலைக் கடாஅ மாற்றமும் உடைத்தாய்த்
தன்னூ லானும் முடிந்தநூ லானும்
ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித்
தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவோடு நிற்றல் என்மனார் புலவர்.

(மர. 106)

- இவை (விருத்தி) உரை பற்றியவை.

இச்சூத்திரங்கள் நான்கிற்கும் பேராசிரியர் எழுதியுள்ள விளக்கம் படித்து இன்புறத் தக்கதாகும்.

இறையனார் களவியலுரை, உரை நான்கு வகைப்படும் என்று கூறுகின்றது:

"சூத்திரம் உரைக்கின் அது நான்கு வகையான் உரைக்கப்படும்:

கருத்துரைத்து, கண்ணழித்து, பொழிப்புத் திரட்டி அகலம் கூறல் என".

நம்பியகப்பொருள் உரை நான்கு வகை உரைகளின் தன்மையையும் பின்வருமாறு விளக்குகின்றது:

"பொருளுரை நான்கு வகைப்படும்: கருத்து உரைத்தலும், கண்ணழித்து உரைத்தலும், பொழிப்புத் திரட்டலும், அகலங் கூறலும் என.

"அவற்றுள் கருத்து உரைத்தலாவது, சூத்திரத்தின் உட்கோள் உரைத்தல்.

"கண்ணழித்தலாவது, சூத்திரத்துள் சொற்றோறும் பொருள் உரைத்தல்.

"பொழிப்புத் திரட்டலாவது, சூத்திரப் பொருளை எல்லாம் தொகுத்து உரைத்தல்.

"அகலங் கூறலாவது, சூத்திரப் பொருளைத் தூய்மை செய்தற்குக் கடாவும் விடையும் உள்ளுறுத்து விரித்து உரைத்தல்".

நாலடியார், ஒரு நூலுக்குச் சிறந்தவுரை எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பதை,

பொழிப்புஅகலம் நுட்பம்நூல் எச்சம்என்று ஆற்றக்
கொழித்துஅகலம் காட்டாதார் சொற்கள் - பழிப்பில்
நிரைஆமா சேக்கும் நெடுங்குன்ற நாட!
உரைஆமோ நூலிற்கு நன்று

(நாலடி . 319)

என்று கூறுகின்றது. இச் செய்யுளுக்குப் பழைய வுரையாசிரியராகிய பதுமனார்,

“திரண்ட பொருளைச் சொல்லலும் விரித்து உரைத்தலும், கடாவும் விடையுமாகச் சொல்லுதலும், இலேசானே பொருளை உரைத்தலும், எச்சவும்மைகளால் எஞ்சிய பொருளை உரைத்தலும் ஆகிய இந் நான்கு வகையானும் ஆராய்ந்து, விரிவான பொருளைக் காட்ட மாட்டாதார் சொற்கள், காட்டுப் பசுக்கள் நிரை நிரையாகத் தங்கும் உயர்ந்த மலை நாடனே! நூலிற்குப் பழிப்பில்லாத நல்ல உரையாமோ என்றவாறு” என்று பொருள் கூறுகின்றார்.

நீதி நூலாகிய நாலடியார், ஒரு நூலிற்கு அமைய வேண்டிய உரையின் சிறப்பியல்புகளைக் கூறுவது வியப்பாக உள்ளது. உரையின் பல்வேறு இயல்புகளைப் பொதுவாக எல்லோரும் அறிந்திருந்தினர்; சிந்தித்து வந்தனர் என்று கருத நாலடியார் இடந்தருகின்றது.

நன்னூலின் பொதுப்பாயிரம் உரையின் பொது இலக்கணத்தைப் பின் வருமாறு கூறுகின்றது:

பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்
விரிவு அதிகாரம் துணிவு பயனோடு
ஆசிரிய வசனம்என்று ஈரேழ் உரையே.

(பொதுப்-20)

இச் சூத்திரத்திற்கு மயிலைநாதர் பின்வருமாறு பொருள் கூறுகின்றார்:

“பாடம் சொல்லலும், கருத்துரைத்தலும், சொல்வகுத்தலும், சொற்பொருள் உரைத்தலும், பொழிப்புரைத்தலும், உதாரணம் காட்டலும், வினாத் தோற்றலும்,

விடை கொடுத்தலும், விசேடம் காட்டலும், விரிவு காட்டலும், அதிகார வரவு காட்டலும், துணிவு கூறலும், பயனொடு படுத்தலும், ஆசிரிய வசனம் காட்டலும் என்னும் இப்பதினான்கு பகுதியானும் உரைக்கப்படும் சூத்திரப் பொருள்”

இவற்றுள் சிலவற்றைச் சங்கர நமசிவாயர் விளக்குகின்றார். அவர் விளக்கம் பின்வருமாறு:

“இவற்றுள், விசேடமாவது - சூத்திரத்து உட்பொருளன்றி ஆண்டைக்கு விரிவாவது - வேற்றுமை முதலிய தொக்கு நிற்பனவற்றை விரிக்க வேண்டுழி விரித்து உரைத்தல்.

அதிகாரமாவது-எடுத்துக்கொண்ட அதிகாரம் இதுவாதலின், இச் சூத்திரத்து அதிகரித்த பொருள் இது என அவ்வதிகாரத்தோடு பொருந்த உரைக்க வேண்டுழி உரைத்தல்.

துணிவானது - ஐயுறக் கிடந்துழி இதற்கு இதுவே பொருள் என உரைத்தல்.ஏனை, பொருள் விளங்கிக் கிடந்தன”

மேலே காட்டிய ‘பாடம் கருத்தே’ என்ற சூத்திரவுரையின் கீழ் மயிலைநாதர் உரையின் வேறு வகைகளைத் தொகுத்துக் கூறுகின்றார். அவர் உரை பின்வருமாறு:

1. “தொகுத்துக் கண்ணழித்தல், விரித்துக் கொணர்ந்து உரைத்தல்

என்றும் இரு கூறும்;

2. பொழிப்பு, அகலம், நுட்பம் என்னும் மூவகையும்;

3. எடுத்துக் கோடல், பதங் காட்டல், பதம் விரித்தல், பதப்பொருள் உரைத்தல், வினாதல், விடுத்தல் என்னும் அறுகூறும்;

4. பொழிப்பு, அகலம், நுட்பம், நூல்எச்சம், பதப் பொருள், உரைத்தல், ஏற்புழிக் கோடல், எண்ணல் என்னும் ஏழும்;

5. சொல்லே, சொல்வகை, சொற்பொருள், சோதனை, மறை நிலை, இலேசு, எச்சம், நோக்கே, துணிவே, கருத்தே செலுத்தல் என்று ஈரைந்து கிளவியும் நெறிப்பட வருவது பனுவல் உரையே என்னும் இப்பத்தும்:

6. சூத்திரம் தோற்றல், சொல் வகுத்தல், சொற்பொருள் உரைத்தல், வினாதல், விடுத்தல், விசேடங் காட்டல், உதாரணங்காட்டல், ஆசிரிய வசனங் காட்டல், அதிகார வரவு காட்டல், தொகுத்து முடித்தல், விரித்துக் காட்டல், துணிவு கூறல், பயனோடு புணர்த்தல் என்னும் இப் பதின் முப்பகுதியுமான - இம்மத விகற்பம் எல்லாம் இப் பதினான்கினுள்ளே ('பாடம் கருத்தே' என்னும் சூத்திரத்தில் கூறப்பட்டவை) அடங்கும் எனக் கொள்க."

மயிலைநாதர் மேலே ஆறாவதாகக் கூறிய சூத்திரம் தோற்றல், சொல்வகுத்தல் முதலிய பதின்மூன்றினோடு கருத்துரைத்தல் என்ற ஒன்றைக்கூட்டிஉரை பதினான்கு வகைப்படும் என்று வீரசோழியம் கூறுகின்றது (வீர-178).வேண்டுவன தந்து உரைத்தல். யாப்பருங்கல விருத்தியுரை உரையின் வகைகளை,

முத்திறத் தானும், மூவிரு விகற்பினும்,

பத்து விதத்தானும், பதின்மூன்று திறத்தானும்,

எழுவகை யானும், இரண்டு கூற்றானும்,

வழுவுநனி நீங்க, மாண்பொடும், மதத்தொடும்

யாப்புறுத்து உரைப்பது சூத்திர வுரையே

என்று உரைக்கின்றது. பின்னர், முத்திறம் மூவிரு விகற்பம் முதலியவற்றை மயிலைநாதர் விளக்கியது போல, விளக்கிச் செல்லுகின்றது. வழு என்பது குன்றக் கூறல் முதலியபத்துக் குற்றம் என்றும், மாண்பு என்பது சுருங்கச் சொல்லல் முதலிய பத்து அழகு என்றும், மதம் என்பது உடன்படல் மறுத்தல் முதலிய ஏழுவகை என்றும் யாப்பருங்கல விருத்தியுரை விளக்குகின்றது.

நன்னூலில் பாயிரத்தில் உள்ள இரு சூத்திரங்கள், காண்டிகையுரை விருத்தியுரை என்பனவற்றை விளக்குகின்றன.

கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்

அவற்றொடு வினாவிடை ஆக்க லானும்

சூத்திரத்து உட்பொருள் தோற்றுவ காண்டிகை

(பொதுப்பாயிரம்-21)

என்பது காண்டிகை யுரையை விளக்கும் சூத்திரம்.

சூத்திரத்து உட்பொருள் அன்றியும் ஆண்டைக்கு

இன்றி யமையா யாவையும் விளங்கத்

தன்னுரை யானும் பிறநூ லானும்

ஐயம் அகலஐங் காண்டிகை உறுப்பொடு

மெய்யினை எஞ்சாது இசைப்பது விருத்தி

(பொதுப்பாயிரம்-22)

என்பது விருத்தியுரையின் இலக்கணம் கூறும் சூத்திரம்.

பலவேறு நூலாசிரியர்களும் உரையாசிரியர்களும் உரையின் வகைகளைப் பற்றிக் கூறியுள்ள விளக்கங்கள் நமக்கு மலைப்பைத் தரலாம்; மிகுதியானவை என்று எண்ணத் தூண்டலாம். ஆனால் உரை செய்யும் முயற்சியில் மிகுதியாக ஈடுபட்டுப் பெரிதும் உழைத்தவர்கள், நுணுகி நுணுகிச் செய்த ஒப்பற்ற கலைக் கருவூலமே உரை நூல்கள் என்ற எண்ணத்தையும் அவை உண்டாக்காமல் இல்லை.

**இலக்கண,இலக்கிய உரைகள்**

உரையாசிரியர்கள் வெறும் சொற்பொருள் விளக்கம் தருவதோடு நின்று விடாமல் இலக்கணக் குறிப்புத் தருதல், எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குதல், திறனாய்வு முறையில் விளக்குதல், வினாவிடை முறையில் விளக்குதல், எதனையும் வரிசை முறைப்படியும் ஒழுங்கு முறையிலும் எழுதுதல் என்று பல்வேறு உத்திகளைக் கையாண்டு விளக்கம் செய்வர். இவ்வுரை இவ்வாறான உரை நூல்களை எழுதிய உரை ஆசிரியர்களை

இலக்கண உரையாசிரியர்கள்

இலக்கிய உரையாசிரியர்கள்

வைணவ உரையாசிரியர்கள்

சைவ சித்தாந்த உரையாசிரியர்கள்

எனப் பகுத்துக் காண்பர். உரையாசிரியர்களின் நடை 'விளக்க நடை' என்று கூறப்படுகின்றது.

இலக்கண இலக்கியங்களைப் படைத்த சமணச் சான்றோர் சிறந்த உரையாசிரியர்களாகவும் விளங்கியுள்ளனர். அவர்கள் உரையில்லையேல் பல இலக்கிய இலக்கணங்களை உரிய முறையில் புரிந்து கொள்ள இயலாமற் போயிருக்கும். உரை எழுதுபவர்கள் பல துறை வல்லுநராக இருக்க வேண்டும். கூர்மையான அறிவு உடையவராகவும் அமையவேண்டும். சமண உரையாசிரியர்களின் திறனை அவர் தம் உரைகளே எடுத்துரைக்கும்.

**இலக்கண உரைகள்**

பல இலக்கணங்களை இயற்றிய சமணப் பெரியோர்கள் இலக்கியம் இலக்கணம் ஆகியவற்றிற்கு உரை எழுதி மேலும் வளம் சேர்த்தனர். தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர் இளம்பூரணர். முதல் உரையாசிரியர் இவரே. அதனால் இவரை உரையாசிரியர் என்ற பெயராலேயே அழைப்பர். இவரைத் துறவி என மயிலைநாதர் சுட்டிக் காட்டுகின்றார். நன்னூலுக்கு உரைகண்ட மயிலைநாதரும் சமண சமயத்தைச் சேர்ந்தவர். இளம்பூரணர் உரை, பின்வந்த உரையாசிரியர்கள் பலராலும் மேற்கோளாகக் காட்டப்பட்ட சிறப்பை உடையது. இவர் 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

இலக்கண உரைகளில் இரண்டு வகைகள் காணலாம். ஒன்று: எழுத்து, சொல் ஆகியவற்றின் இலக்கணங்களுக்கு அமைந்த உரைகள். இரண்டு; பொருள் (யாப்பு, பொருள், அணி) இலக்கணத்துக்கு அமைந்த உரைகள். முதலாவது வகை தொல்காப்பியத்தின் எழுத்து, சொல் அதிகாரங்களுக்கோ, அல்லது எழுத்து, சொல் மட்டுமே கொண்ட நன்னூலுக்கோ அது போன்ற பிறவற்றுக்கோ அமைந்த உரைகள்; மொழியின் அடிப்படைகள், அமைப்பு விதிகள் முதலியவற்றை மட்டும் பேசுவன இவை. இரண்டாவதாக அறியப்படும் பொருள் இலக்கணங்கள், இலக்கியம் பற்றிப் பேசுபவை; செய்யுள் இலக்கியத்தின் பல்வேறு உறுப்புகள், பாடுபொருள்கள் மற்றும் பிற பண்புகள் பற்றிப் பேசுபவை. ஒருவகையில், இலக்கியக் கொள்கை பற்றியன இவை எனலாம். தொல்காப்பியப் பொருளதிகாரம், இறையனார் களவியல், யாப்பருங்கலம், நம்பியகப் பொருள் முதலியன இத்தகையவை.

இலக்கண நூல்களுக்கு உரை எழுதியோர் இலக்கண உரையாசிரியர்கள் ஆவர்.

நக்கீரர்

இளம்பூரணர்

பேராசிரியர்

நச்சினார்க்கினியர்

சேனாவரையர்

குணசாகரர்

கல்லாடர்

மயிலைநாதர்

ஆறுமுக நாவலர்

ஆகியோர் குறிப்பிடத்தக்க உரையாசிரியர்கள் ஆவர்.

களவியற்காரிகை

இக்காலப் பகுதியில் தோன்றியது. களவியல் என்பது இறையனார் களவியல் என வழங்கப்படுகின்ற இறையனார் அகப்பொருள் நூலாகும். அகப்பொருள் இலக்கணம் இல்லையே எனக் கவலையுற்ற பாண்டிய மன்னனுக்காக மதுரை சோமசுந்தரக் கடவுள் அறுபது அகப்பொருள் சூத்திரங்களைச் செப்பேட்டில் எழுதித் தந்ததாக அந்நூல் உரையும், திருவிளையாடல் புராணமும் கூறும். இக்களவியல், நூற்பாவால் ஆன 60 சூத்திரங்களைக் கொண்டது. இந்த 60 சூத்திரங்களுக்கு நேராக 60 கட்டளைக் கலித்துறையால் அக்களவியலைத் தழுவி, மற்றோர் அகப்பொருள் இலக்கண நூலாக எழுதப்பட்டுள்ளது. அதுவே களவியற்காரிகை எனப்படும். இதற்குச் சிறப்பான உரை உண்டு. இந்நூலுக்கு ஆசிரியர் பெயரும், நூற்பெயரும் தெரியவில்லை. மரபினையொட்டியே இப்பெயர் வைக்கப்பட்டுள்ளது.

நவநீதப் பாட்டியல்

இந்நூலை இயற்றியவர் நவநீத நாடர். 13-16 நூற்றாண்டுகளிடையே பல பாட்டியல் நூல்கள் தோன்றின. அவற்றுள் இதுவும் ஒன்றாகும். பாட்டியல் என்பது பாட்டினாலான நூல்களுக்கு அமைய வேண்டிய இலக்கணங்களைத் தொகுத்துக் கூறும். கலித்துறையாப்பால் ஆனதால் இந்நூல், கலித்துறைப் பாட்டியல் என்றும் கூறப்படும். இது பொருத்தவியல், செய்யுள், மொழி இயல், பொது மொழி இயல் என்ற மூன்று பிரிவுகளை உடையது. 108 கலித்துறைகளை உடையது. இதனுள் சொல்லப்பட்ட பிரபந்தங்களின் தொகை 63 ஆகும்.

உரிச்சொல் நிகண்டு

இந்நூல் காங்கேயரால் இயற்றப்பட்டதாகும். இதன் காலம் திட்டவட்டமாகத் தெரியவில்லை. தமிழில் தோன்றிய ஆதி நிகண்டுகள், திவாகரமும், பிங்கலந்தையும் ஆகும். பின்னால் வந்த நிகண்டு நூல்களில் உரிச்சொல் நிகண்டு, கயாதர நிகண்டு, நிகண்டு சூடாமணி போன்றவை காலத்தால் பழமையானவையும் சிறப்பானவையும் ஆகும்.

**உரைமரபு**

சமண இலக்கண நூல்களுக்கு எழுதப்பட்ட உரைகள் பெரும்பாலன நூலாசிரியர் காலத்திலேயே எழுதப்பட்டிருக்கின்றன. யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை இவ்வகையுள் அடங்கும். இவற்றுக்கு உரை எழுதியவர் குணசாகரர். நேமிநாதம், வச்சணந்திமாலை ஆகிய நூல்களுக்கு உரை வகுத்தவர் குணவீரபண்டிதர்.

உரையை நூலாசிரியரைத் தவிர்த்துப் பிறர் எழுதுவது மரபு. இம்மரபு இக்காலத்தில் மாறியது.

நாற்கவிராச நம்பி, நம்பியகப் பொருளுக்கு உரைகண்டார். நூல் எழுதிய ஆசிரியரே அதற்குரிய உரையையும் எழுதுதல் புதுநெறி. இந்நெறியை குணவீர பண்டிதரும் நாற்கவிராச நம்பியும் மேற்கொண்டார்கள். பின்வந்த உரையாசிரியர்களுக்கு இம்முறை முன்னோடியாக அமைந்தது.

**இலக்கிய உரைகள்**

இலக்கணங்களுக்கு மட்டுமன்றி இலக்கியத்திற்கும் உரை கண்டவர்கள் சமணச் சான்றோர்.

இலக்கிய நூல்களுக்கு உரை எழுதியோர் இலக்கிய உரையாசிரியர்கள் ஆவர்.

அடியார்க்கு நல்லார்

அரும்பத உரையாசிரியர்

தெய்வச் சிலையார்

மணக்குடவர்

பரிதி

பரிமேலழகர்

பரிப்பெருமாள்

காலிங்கர்

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்திற்குச் சிறந்ததோர் உரை எழுதியுள்ளார். சிலப்பதிகாரத்தில் வரும் இசை, நடனம் முதலிய நுட்பங்களை விளக்கிக் கூறுதற்குப் பெரிதும் உதவுவது இவரது உரை. இவரது உரை, சொற்பொருள் கூறி நிற்பதில்லை. பொழிப்பைத் திரட்டிச் சிறப்பு உரையும் தருவது. இவர் கொங்கு மண்டலத்தைச் சார்ந்தவர். இவரைப் பாதுகாத்தவரும் சமணர். இவரது உரை விளக்கத்தினின்றும் இவர் சமணராக இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரலாம். ஆயினும் சிலர் இவர் சைவர் எனக் கூறுவர் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்

நச்சினார்க்கினியர் மதுரையில் பிறந்த வைதிக அந்தணர். தொல்காப்பியம், சிந்தாமணி, கலித்தொகை, பத்துப்பாட்டு ஆகிய நூல்களுக்கு முழுமையாகவும், குறுந்தொகையில் சில பாடல்களுக்கும் உரை எழுதிச் சிறப்புப் பெற்றவர். உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர் என்று பாராட்டப்படுபவர்.

சிந்தாமணிக்கு உரைகாண, சில காலம் சமணராகி, சமணர்களிடம் அதன் உரையை அறிந்து எழுதினார் என்றும், சமணர்களாலேயே அவ்வுரை பாராட்டப்பட்டது என்ற ஒரு செய்தியும் வழங்குகிறது.

குறளுக்குப் பதின்மர் உரை எழுதியதாகப் பழம்பாடல் ஒன்று குறிக்கிறது. ஐவரின் உரை கிடைக்கிறது. ஐவரின் உரை கிடைக்கவில்லை. அந்த ஐவரில் ஒருவர் தருமர் என்றும் அவர் சமண சமயத்தார் எனவும் குறிப்புகள் உணர்த்துகின்றன. ஆயின் அவர் குறளுக்கு எழுதிய உரை கிடைக்கவில்லை.

## அடியார்க்கு நல்லார் உரை

சிலப்பதிகாரத்துக்குப் பேருரை எழுத வந்த இவ் ஆசிரியருக்கு எல்லையில்லாத முத்தமிழ்ப் புலமையும், பயிற்சியும் அமைந்திருந்தது. அடியார்க்கு நல்லாருடைய உரையுள் வரிதோறும் இதனைக் காணமுடிகின்றது. இவருடைய உரை இல்லாதிருந்தால் சிலப்பதிகாரத்தின் சிறப்புகளை நாம் உணரவியலாத நிலை ஏற்பட்டிருக்கும். தவிரவும் பண்டைத் தமிழின் சிறப்புகளையும் அறிய வாயிலே இல்லாது போயிருக்கும். இவர், தம் காலத்திற்கு முன்பே இசைத் தமிழும், நாடகத் தமிழும் அழிந்து போனதை உணர்ந்தார். தம் காலத்தில் அவை பின்னும் அழிந்து வந்தமையையும் நேரில் கண்டார். பண்டைத் தமிழின் சிறப்புகளைத் தாமாவது உணர்த்தி வைக்க வேண்டும் என்று அவர் உணர்ந்தார். அதன் வெளிப்பாடே இந்த உரை எனலாம்.

இது உரை மட்டுமன்று. இசை, நாடகம் பற்றிய இலக்கண இலக்கியக் களஞ்சியம். மறைந்து போயிருந்த தொல்காப்பியத்தைப் பதினோராம் நூற்றாண்டில் இளம்பூரணர் கண்டார். அதைப் பயின்று உரை எழுதிச் சிறப்பித்தார். அது போல மறைந்துபோன இசை நாடகப் பொருள்களை அடியார்க்கு நல்லார் இந்த உரை மூலம் 12ஆம் நூற்றாண்டில் அளித்தார். பண்டை நாட்டுச் செய்திகளையும், இலக்கிய வரலாறுகளையும் விளக்கமாகக் கூறுபவை இரண்டு உரைகளேயாகும். அவை நக்கீரனாரது இறையனார் களவியலுரை மற்றும் சிலப்பதிகார உரை (அடியார்க்கு நல்லார்) ஆகியன. இவ்விரு உரைகளும் முன்னாள் இருந்த முச்சங்கங்கள் பற்றிய வரலாறு - தமிழ் ஆராய்ந்தார், புலவர் தொகை, பாடினார் தொகை, பாடிய நூல், மூல நூல், சங்கம் இருந்த கால எல்லை, அரசர், கவிஞர், சங்கம் இருந்த இடம் போன்ற விவரங்களைத் தருகின்றன.

இளங்கோவடிகள் சேர மரபினராயிருந்தும், தம் நாட்டுச் சார்பு சிறிதும் இல்லாமல் பிற மன்னர் இருவரையும் போற்றியுள்ளார். மூல நூலின் தன்மைகளுக்கு ஏற்ப உரை எழுதினார் என்பது அடியார்க்கு நல்லாருக்குரிய பெருமையாகும். அவருடைய மற்றொரு நோக்கம், மறைந்து போன இசைத் தமிழ், நாடகத் தமிழின் பகுதிகள் ஆகியவற்றிற்கு இயன்றவரை பின்வருவோர் உணரும்படி விரித்துரைத்தல் என்பதாகும்.

இவர், சொற்களுக்கும், தொடர்களுக்கும் பொருள் விளக்கம் தருகிறார். வடமொழிச் சொற்களையும் பயன்படுத்துகிறார். பழமொழிகள், வழக்குகள் வரும்பொழுது விளக்கம் தருகிறார். மேற்கோள் தந்தும், முன்னுள்ள உரை, பாடல்கள் ஆகியவற்றைக் குறிப்பிட்டும் எழுதுகிறார். செய்யுளோசை படும்படி எழுதுவது இவரது சிறப்பு, அணியிலக்கணத்தையும் எடுத்துக்காட்டுகிறார். இவ்வுரை கடைச்சங்க காலத்துக்கு முன்னும், பின்னும், அக்காலத்திலும் இருந்த முத்தமிழ் இலக்கிய இலக்கணத்தைத் தெளிவு பெற உணர்த்தும் அடிப்படை நூல் ஆகும்.

வினாக்கள்

1. உரை என்றால் என்ன?
2. உரை பொது விளக்கம் தருக.
3. உரை வகைகளை எழுதி விளக்குக.
4. இலக்கண உரைகள் எவை? விளக்ககுக.
5. இலக்கிய உரைகள் எவை? விளக்குக.

## அலகு 2

## இலக்கண உரைகள்

### வகைமை அடிப்படையில் உரையாசிரியர்

### இறையனார் அகப்பொருளுரை

உரைகளில் காலத்தால் முற்பட்டது ‘இறையனார் அகப் பொருளுரையாகும். இதுவே தமிழில் தோன்றிய முதல் உரைநூல். பின்னர்த் தோன்றியமற்ற எல்லா உரைகளுக்கும் இது வழிகாட்டியாய் விளங்குகின்றது. இந்தஉரையிலிருந்து, உரைகளைப் பற்றிய பல பொதுவான செய்திகளை அறிந்துகொள்ளலாம். இது மிகச் சிறந்த இலக்கியமாய் அமைந்து, கற்போர்க்குப் பேரின்பம் தருகின்றது.

‘இறையனார் அகப்பொருள்’ சிறந்த அகப் பொருள் இலக்கண நூல்.

இதனை இறையனார் களவியல் என்றும் வழங்குவதுண்டு. களவியல் என்பது சிறப்பினாற் பெற்ற பெயர் என்றும், ‘களவு கற்பு என்னும் கைகோள்

இரண்டனுள் களவினைச் சிறப்புடைத்தென்று வேண்டும் இவ்வாசிரியன்’என்றும் இந்நூலின் உரையாசிரியர் கூறுகின்றார். இந்நூல் களவு கற்பு என்றஇரு பிரிவுகளை உடையது. களவினுள் 33 நூற்பாக்களும், கற்பினுள் 27நூற்பாக்களுமாக 60 நூற்பாக்கள் உள்ளன. ஒட்டக்கூத்தர், இதனை ‘அமுத சூத்திரம் அறுபதாய்ச் சமை நூல்’ என்று போற்றியுள்ளார்.*

இந் நூலை இயற்றியவர் இறையனார். இறையனாரை இந் நூலின் உரை,

மதுரை ஆலவாய்ச் சோமசுந்தரக் கடவுள் என்று குறிப்பிடுகின்றது. நூல்தோன்றிய வரலாற்றை, “அக்காலத்துப் பாண்டியனும் சங்கத்தாரும்பொருளிலக்கணம் பெறாது, இடர்ப்படுவாரைக் கண்டு ஆலவாயிற்பெருமான்அடிகளால் வெளிப்படுத்தப்பட்டது” என்று சுருக்கமாகக் கூறுகின்றது.

இந்நூலினை இறையனார் என்னும் பெயருடைய புலவர் இயற்றி இருக்கக்கூடும். இறையனார் என்ற பெயர், நூல் தோன்றிய கதை பிறப்பதற்குக் காரணமாய் இருந்தது எனலாம். குறுந்தொகையுள் (பாடல் 2)இறையனார் என்னும் புலவர் இயற்றிய 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற அகப்பாட்டு, நக்கீரரையும் விரிசடைக் கடவுளரையும் பாண்டியனையும்இணைத்துக் கதை புனைய இடந்தந்தது. அவ்வாறே இந்நூலாசிரியர் பெயரும்கதை தோன்ற இடந்தந்தது. இக்கதை தெய்வத்தோடு தொடர்புபடுத்தி நூலின் பெருமையை மிகுதிப் படுத்த எண்ணிய காலத்தில் உருவாகி இருக்கலாம். நூல் தோன்றிய கதையை விரிவாகப் பின்வருமாறு உரை கூறுகின்றது.

"அக்காலத்துப் பாண்டியனாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது.செல்லவே பசிகடுகுதலும், அரசன் சிட்டரையெல்லாங் கூவி, "வம்மின், யான்உங்களைப் புறந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது. நீயிர்நுமக்கு அறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின ஞான்று என்னை யுள்ளி வம்மின்" என்றான். என, அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக்கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்த பின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்தபின்னர் அரசன், "இனி நாடு நாடாயிற்றாகலின், நூல்வல்லாரைக் கொணர்க" என்று எல்லாப்பக்கமும் ஆட்போக்க,எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைக் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை எங்கும்தலைப்பட்டிலேம்" என்று வந்தார். வர அரசனும் புடைபடக்கவன்று,"என்னை, எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின்பொருட்டன்றே; பொருளதிகாரம் பெறேமேயெனின், இவை பெற்றும் பெற்றிலேம்" எனச் சொல்லா நிற்ப, மதுரை ஆலவாயில் அழல்நிறக் கடவுள் சிந்திப்பான்: "என்னை பாவம்! அரசர்க்குக் கவற்சி பெரிதாயிற்று; அது தானும் ஞானத்திடைய தாகலான், யாம் அதனைத் தீர்க்கற் பாலம்" என்று இவ்வறுபது சூத்திரத்தையும் செய்து மூன்று செப்பிதழகத்து எழுதிப் பீடத்தின் கீழிட்டான்."

இவ்வாறு சோமசுந்தரக் கடவுள் அருளியதாகக் கூறி இந்நூலை, ‘முதல்நூல்’ என்றே உரை குறிப்பிடுகின்றது. ஆனால், இவ் அகப்பொருள்இலக்கணம், தொல்காப்பியத்தைப் பின்பற்றி அமைந்துள்ளது. தொல்காப்பியம்கூறும் அகப்பொருள் இலக்கணத்தைச் சுருக்கமாகவும் தெளிவாகவும்எளிமையாகவும் இந்நூல் கூறுகின்றது. எனவே, இதனைத் தொல்காப்பியத்தின் வழி நூல் என்பது பொருந்தும்.

**உரையின் இயல்புகள்**

இறையனார் அகப்பொருளுரை சிறப்பியல்புகள் பல வாய்ந்ததாகும். இவ்வுரையை நக்கீரர் இயற்றியதாக உரை தோன்றிய வரலாறு குறிப்பிடுகின்றது.இவ்வுரையைப் படிக்கும் போது, இலக்கண உரையைப் படிக்கின்றோம் என்ற நினைவே எழுவதில்லை. இனிய இலக்கியம் போல், தொட்ட இடமெங்கும் இவ்வுரையில் இலக்கியச்சுவை தேங்கிக் கிடக்கின்றது. எண்ணுந்தோறும் இனிக்கின்ற உவமை, எளிதில் பொருளுணர்ந்து மகிழத்தக்க வகையில் அமைந்த தெளிவான போக்கு, அறிவிற்கு விருந்தாய் உள்ள சிறந்த மேற்கோள், வாகை கூடி வெற்றிப் பெருமிதத்துடன் நடந்து செல்லும் வீரனின் பீடு நடை ஆகியவை யாவும் இவ்வுரையில் கடினமான மறுப்பு, தடை விடை பல எழுப்பி ஆராய்ந்து வலியுறுத்தும் கருத்து, முன்னும் பின்னும் உள்ள கருத்துக்களை நினைவில் கொண்டு பலமுறை ஆழ்ந்து கற்றுத் தெளியும் பகுதி ஆகியவை இவ்வுரையில் இல்லை.

தென்றல் தவழும் இனிய மலர்ச்சோலையுள் புகுந்து வண்ண வண்ணமலர்களையும் செடி கொடிகளையும் கண்டு மகிழும்போது ஏற்படும் இன்பஉணர்வே, இவ்வுரையைக் கற்கும்போது ஏற்படுகின்றது. இந்நூலைப்படித்துவிட்டு மூடும் போது நம் நெஞ்சத்தில் செந்தமிழ் தந்த இன்பம்மண்டிக் கிடக்கின்றது. நூல் முழுவதும் நூலாசிரியரின் குரலைவிட,உரையாசிரியரின் குரலே மேலோங்கி நிற்கின்றது; உரையாசிரியர் கூறும் கருத்தும் விளக்கமுமே கற்போர் நெஞ்சத்தில் ஆழப்பதிகின்றன. உரையாசிரியர் நம் எதிரே நின்று உரையாடுவது போன்ற மன நிலையை உரையின் வாயிலாக உண்டாக்கிவிடுகின்றார்.

இவ்வுரையின் நடையழகும், இலக்கியச் சுவையும் காலந்தோறும் புலவர் உள்ளத்தைக் கவர்ந்திருக்கின்றன. செந்தமிழ் உரைநடை எழுதுவதில்

வல்லவராய்-பிறர்க்கு வழிகாட்டியாய் விளங்கிய மறைமலையடிகள் இவ்வுரையைப் பின் வருமாறு போற்றிப் புகழ்கின்றார்:

"பளபளப்பான பல நிறச் சலவைக் கற்கள் அழுத்திப் பொன் மினுக்குப் பூசிப் பல பல அடுக்கு மாடங்கள் உடைத்தாய் வான்முகடு அளாய், காண்பார் கண்ணுங் கருத்தும் கவரும் நீர்மைத்தாய் உயர்ந்தோங்கி நிற்கும் எழுநிலை மாடம்போல், ஆசிரியர் நக்கீரனாரது உரை நிவந்து நிற்றலும்,

அம்மாடத்தின் அருகே புல் வேய்ந்த குடிலும், ஓடு மூடியதொரு சிற்றிலும் ஏழைமைத் தோற்றமும் உடையவாய்த் தாழ்ந்து நிற்றல்போல், இளம்பூரணர் பேராசிரியர் உரைகள் பீடு குறைந்து நிற்றலும், பிரிந்து இனிது விளங்கா நிற்கும்."

தமிழறிஞர் க. வெள்ளை வாரணனார், இவ்வுரையைச் சிறந்த உரைநடை இலக்கியம் என்று பாராட்டுகின்றார்:

"நூலின் பொருளை வினாவிடைகளால் விளக்கும் தருக்க நூல்மரபும், இயற்கைக் காட்சிகளையும் ஆடவர் மகளிராகிய இருபாலாரின்உள்ளத் துணர்வுகளையும் சொல்லோவியமாகப் புனைந்துரைக்கும் கற்பனைத் திறமும், பாடல்களின் பொருள்களை நயம்பெற விளக்கும் இலக்கியச்சுவை நலமும், உலக வாழ்க்கையின் நுட்பங்களைச் சிறந்த உவமைகளாலும் பழமொழிகளாலும் புலப்படுத்தும் நுட்பமும், தமிழ்மொழியின் இலக்கணங்களைத் தெளிய விளக்கும் திட்பமும் ஒருங்கே பெற்றுத் திகழும் சீரிய உரைநடை இலக்கியம் இறையனார் களவியலுரையாகும்."

**வழிகாட்டி**

இவ்வுரையாசிரியர், பின்வந்த உரையாசிரியர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்றார். பெரும்பாலும் எல்லா உரையாசிரியர்களும் பாயிரம் பற்றி இவர் கூறிய கருத்துக்களையே, இவர் கூறிய முறையிலேயே

கூறுகின்றனர். இளம்பூரணர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், மயிலை நாதர் ஆகியோர், தாம் எழுதிய உரையின் தொடக்கத்தில் எழுதும், பொதுப் பாயிர விளக்கங்களில் இவ்வுரையாசிரியர் குரலின் எதிரொலியே கேட்கின்றது. இவர் கூறிய பல உவமைகளும் சொற்பொருள் விளக்கமும் பிற்கால உரைகளில் சென்று பரவிச் செல்வாக்குடன் பொலிகின்றன. இவ்வுரையாசிரியரின் உரை நடையைப் பின்பற்றி எழுத முயன்றவர் பலர். ஆனால், அம்முயற்சியில் அவர்கள் வெற்றிபெற முடியவில்லை. பல ஆண்டுகளுக்குப் பின்னரும், இறையனார் அகப் பொருளுரை தலைமையும்பெருமையும் பெற்று, ஈடு இணையற்று விளங்குகின்றது.

'என்மனார்' என்னும் சொல்லுக்கு இவர் கூறிய இலக்கணக் குறிப்பை, இளம்பூரணர் அப்படியே மேற்கொள்ளுகின்றார்.

**உரை தோன்றிய கதை**

நூல் தோன்றியதற்குக் கதை உள்ளதுபோலவே உரை தோன்றியதற்கும் கதை உள்ளது. சோமசுந்தரக் கடவுள் வழங்கிய அகப்பொருள் இலக்கணத்தைப் பாண்டிய மன்னன் பெற்றபின், சங்கப் புலவர்களை அழைத்து, அதற்குச் சிறந்த உரை ஒன்று எழுதுமாறு வேண்டினான். சங்கத்தில் இருந்த புலவர்கள் எல்லாரும் உரை எழுதி, தாம் உரைத்த உரையே நல்லதென்று கூறினர். அதனால் நல்ல உரையினைத் தேர்ந்தெடுக்கக் காரணிகன் ஒருவனைத் தரவேண்டும் என்று புலவர்கள் பாண்டிய மன்னனை வேண்டினர். மன்னன், அப்புலவர்களுக்கு நிகராவரர் யாரும் இல்லை என்று கூறிக் காரணிகளை நியமிக்க இயலாமல் வருந்தினான். பின்னர் அப் புலவர்கள், எவ்வாறு சிறந்த உரையைத் தேர்ந்தெடுத்தனர் என்பதைப் பின்வருமாறு களவியலுரை கூறுகின்றது:

"அரசனும் இது சொல்லினான்; யாம் காரணிகனைப் பெறுமாறு என்னை கொல்? என்று சிந்திப்புழி, சூத்திரஞ் செய்தான் ஆலவாயில் அவிர்சடைக் கடவுளன்றே, அவனையே காரணிகனையும் தரல் வேண்டும் எனச் சென்று வரங்கிடத்தும் என்று வரங்கிடப்ப, இடை யாமத்து, 'இவ்வூர் உப்பூரிகுடிகிழார் மகனாவான் உருத்திரசன்மன் என்பான் பைங்கண்ணன், புன்மயிரன்,

ஐயாட்டைப் பிராயத்தான், ஒரு மூங்கைப் பிள்ளை உளன்;அவனை அன்னன் என்று இகழாது கொண்டு போந்து, ஆசனத்தின் மேல் இரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருள் உரைத்தாற் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும், மெய்யாயின உரை கேட்டவிடத்து; மெய்யல்லா உரை கேட்டவிடத்து வாளா இருக்கும். அவன் குமார தெய்வம்; அங்கோர் சாபத்தினால் தோன்றினான் என முக்கால் இசைத்த குரல் எல்லார்க்கும் உடன்பாடாயிற்று. ஆக எழுந்திருந்து, தேவர் குலத்தை வலங்கொண்டு போந்து, உப்பூரி குடி கிழாருழைச் சங்கமெல்லாம் சென்று, இவ்வார்த்தை எல்லாம் சொல்லி, 'ஐயனாவான் உருத்திர சன்மனைத் தரல் வேண்டும்'என்று வேண்டிக் கொடு போந்து, வெளியது உடீஇ, வெண்பூச் சூட்டி,வெண்சாந்து அணிந்து கல்மாப்பலகை யேற்றிக் கீழிழுந்து சூத்திரப் பொருள் உரைப்ப எல்லாரும் முறையே பொருளுரைப்பக் கேட்டு வாளா இருந்து ,மதுரை மருதனிளநாகனார் உரைத்தவிடத்து ஒரோவிடத்துக் கண்ணீர்வார்ந்து, மெய்ம்மயிர் நிறுத்தி, பின்னர்க் கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்தவிடத்துப் பதந்தொறுந் கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான்.* இருப்ப, ஆர்ப்பெடுத்து, 'மெய்யுரை பெற்றாம் இந்நூற்கு! 'என்றார்." இவ்வாறு உரையும் தெய்வத்தோடு தொடர்புபடுத்திச் சிறப்பிக்கப்படுகின்றது.

### முச்சங்க வரலாறு

இவ்வுரைதான் முதன்முதலில், பாண்டிய மன்னர்கள் தமிழ் வளர்க்க நிறுவிய மூன்று சங்கங்களைப் பற்றி விரிவாகக் கூறுகின்றது. ஒவ்வொரு சங்கத்திலும் இருந்த புலவர் பெருமக்கள், அவர்கள் இயற்றிய நூல்கள், சங்கத்தை நிறுவி நடத்திய பாண்டிய மன்னர்கள், சங்கம் இருந்த இடம் போன்ற செய்திகளை விரிவாகக் காணலாம். அப்பகுதி படித்து இன்புறத்தக்கதாகும்.

முச்சங்கங்களின் வரலாற்றினைக் கூறி, இறையனார் அகப் பொருளும்அதன் உரையும், கடைச் சங்க காலத்தை அடுத்துத் தோன்றியவை என்று கூறுகின்றது இவ்வுரை.

அடியார்க்கு நல்லார், இவ்வுரை கூறும் முச்சங்க வரலாற்றினைமேற்கொண்டு மேலும் சில செய்திகளைச் சேர்த்துக் கூறுகின்றார்.

**ஆராய்ச்சியாளர் கருத்து**

இறையனார் அகப்பொருள் உரையாசிரியரைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள்கூறியுள்ள கருத்துகள் நம்மைமேலும் சிந்திக்கத் தூண்டுகின்றன. அவற்றைக் காண்போம்:

டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர்: "இறையனார் அகப் பொருளுக்கு இப்பொழுதுள்ள உரை நக்கீரரால் இயற்றப் பட்டதன்று. சிலப்பதிகாரப் பாடல்கள் அதில் மேற்கோள்களாக வந்துள்ளன. ஆகையால், நக்கீரர் அதை இயற்றியிருக்கமாட்டாரென்று நினைக்கிறேன். அவர் மாணாக்கர் பரம்பரையில் உரை மட்டும் வந்ததென்று தோற்றுகின்றது. மேற்கோள்கள் பிற்காலத்து ஒருவரால் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்".

தஞ்சை சீனிவாசப் பிள்ளை: "ஊர் பெயர் தெரியாத ஒருவரால் களவியலுரை பிற்காலத்து எழுதப்பட்டது என்றும், நக்கீரர் எழுதியது அன்று என்றும் புலப்படும்"

டாக்டர்மு.வரதராசனர்: "இறையனார் அறுபது சூத்திரங்களில்களவியல் என்ற அகப்பொருள் இலக்கணம் எழுதினார். நக்கீரர் என்னும்பெயர் பூண்ட பிற்காலப் புலவர் ஒருவர் இதற்கு விரிவான உரை எழுதியுள்ளார்."

**செய்யுள் நடை**

எதுகை மோனைகள் அமைந்து, இனிய ஓசையுடைய செஞ்சொற்களால் ஆன செய்யுள் நடை பல இடங்களில் உள்ளன.

கூழைப் பருவத்து மாழை கலந்த ஏழ்மை நீர்மை

என்றும்,

அந்தி வானகட்டுச் செங்கோட்டு

மதர்வைக் குழவித் திங்களைக் கண்டு

என்றும் வருகின்ற இடங்களை உள்ளத்தைக் கவர்கின்றன.

**தொல்காப்பிய உரையாசிரியர்கள்**

தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய சான்றோர்கள் வாழ்ந்த காலத்தை உரையாசிரியர்கள் காலம் என்கிறோம். இதனை, கி.பி. 10ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 15ஆம் நூற்றாண்டு வரை எனலாம். இதன் பின்னரும் இலக்கண இலக்கியங்களுக்கு உரை வகுத்த பலர் இருந்திருக்கிறார்கள். தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர், பேராசிரியர் போன்றோர் உரை எழுதியுள்ளனர். இன்று நமக்குக் கிடைத்துள்ள தமிழ் இலக்கண நூல்களுள் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம். தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களுக்கும் இளம்பூரணரும், சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையரும், பொருளதிகாரம் உட்பட மூன்றுக்கும் நச்சினார்க்கினியரும் உரை எழுதிப் புகழ் பெற்றனர். தொல்காப்பியம் என்னும் பழம்பெரும் இலக்கண நூல் தமிழ் மொழியின் தொன்மைக்கும் சிறப்பிற்கும் சான்றாய் விளங்குகின்றது. வளமாக வாழ்ந்த தமிழினத்தின் உயர்ந்த கொள்கைகளையும் எண்ணங்களையும் உலகிற்கு உணர்த்தும் விழுமிய நூலாய் இது ஒளிர்கின்றது. இதனை இயற்றிய தொல்காப்பியரின் குரல், காலத்தையும் இடத்தையும் கடந்து வந்து தெளிவாக ஒலிக்கின்றது. தொல்காப்பியம் தனக்குப் பின் தோன்றிய பல இலக்கண, இலக்கியங்களுக்கு எல்லாம் தலைமை தாங்கி வழி காட்டி நடத்திச் செல்லுகின்றது.

தொல்காப்பியத்தின் கருத்தை உணரவும் உணர்த்தவும் புலவர் பெருமக்கள் காலந்தோறும் முயன்று வந்தனர். அம் முயற்சியின் விளைவாய் உரைகள் பல பெருகின. உரைவளம் கொண்ட பெருநூலாய்த் தொல்காப்பியம் திகழ்கின்றது.

தொல்காப்பியம் தோன்றிய காலத்தைப்பற்றி அறிஞர் பெருமக்களிடையே கருத்து வேறுபாடு மிகுதியாக உண்டு. இந்நூல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது பெரும்பான்மையோர் ஒப்புக்கொண்ட முடிவாகும். தொல்காப்பியர் பொருளதிகாரத்தில், தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். கி.பி. 250-

க்குப் பிறகு மூவேந்தர்கள் ஆட்சி மறைந்துவிட்டதை வரலாறு கூறுகின்றது. எனவே, தொல்காப்பியர் மூவேந்தரும் செங்கோலாச்சிய காலத்தில் தொல்காப்பியத்தை இயற்றினார் என்னலாம்.

தொல்காப்பியத்திற்கு இளம்பூரணரே முதன்முதலில் உரைகண்டார். இவரது காலம் பதினோராம் நூற்றாண்டு என்பர். இளம்பூரணர் காலம் வரை - தொல்காப்பியம் தோன்றியப் பல நூறு ஆண்டுகள் வரை, உரை இல்லாமலே கற்கப்பட்டு வந்ததா என்ற வினா எழக்கூடியதே. ஆனால் இந்நாள் வரை, இளம்பூரணரே தொல்காப்பியத்தின் முதல் உரையாசிரியர் என்ற கருந்து நிலவி வருகின்றது. இளம்பூரணர் தம் உரைகளில் பிற உரைகளாகச் சில கருத்துகளைத் தெரிவிக்கின்றார். உரை இயற்றியவர்.பெயரைக் குறிப்பிடவில்லை.

இளம்பூரணர் தொடங்கி வைத்த உரைப்பணி, பல வகையாக வளர்ச்சி பெற்றது. இவரது கருத்துகளை ஏற்று, புதிய இலக்கண நூல்களைச் சிலர் செய்தனர். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகிய இரண்டிலும் இவர் கூறிய கருத்துகளைக் கொண்டு, நேமிநாதமும் நன்னூலும் தோன்றியன. பின்னால் தோன்றிய அகம், புறம், யாப்பு, அணி பற்றிய நூல்களும், ஆங்காங்கேஇவரது கருத்துகளை மேற்கொண்டுள்ளன.

தொல்காப்பியம் முழுமைக்கும் முதன் முதலாக உரை இயற்றியதால் இளம்பூரணர்க்கு 'உரையாசிரியர்' என்ற பெயர் ஏற்பட்டது. இவருக்குப் பின்வந்த தொல்காப்பிய உரையாசிரியர்கள் அனைவரும் இவர் உரையைக் கற்றுத் தெளிந்த பின்னரே தம் கருத்தை விளக்கிப் புதிய உரை கண்டனர்.

இளம்பூரணர்க்குப் பின்னர்த் தோன்றிய சேனாவரையர் சொல்லதிகாரத்திற்கு மட்டும் சிறந்ததோர் உரை இயற்றினார். பேராசிரியர், பொருளதிகாரத்திற்கு விரிவாக உரை இயற்றினார். நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் முழுமைக்கும் விரிவான உரை கண்டார். இவருக்குப் பின், தெய்வச் சிலையார், கல்லாடர் ஆகிய இருவரும் சொல்லதிகாரத்திற்கு மட்டும் உரை இயற்றினர். பழைய உரை ஒன்றும் சொல்லதிகாரத்திற்கு உள்ளது. பழங்காலத்தில் தோன்றிய உரைகள் இவைகளே ஆகும்.

பழைய உரை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் இயல்பு உள்ளது. இளம்பூரணர் உரை தமிழ் மரபை உணர்த்தும் உரை என்னலாம். சேனாவரையர் உரை வடமொழி இலக்கணக் கொள்கையைத் தமிழின்மீது திணிக்கும் உரை என்பது பொருந்தும். பேராசிரியர் உரை இலக்கண இலக்கிய ஆராய்ச்சி நிரம்பிய உரையாக உள்ளது. நச்சினார்க்கினியர் உரை இலக்கியச்சுவை நுகர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றது. தெய்வச்சிலையார் உரையில் சில இடங்களில் புதுமை ஒளி காணப்படுகின்றது. கல்லாடர் உரை முன்னைய உரைகளைத் தழுவி எழுதப்பட்ட சார்பு உரையாக உள்ளது.

பதினேழாம் நூற்றாண்டில் மீண்டும் தொல்காப்பிய ஆராய்ச்சி தொடங்கியது. இதனைத் தொடங்கி வைத்தவர் சிவஞான முனிவர். தொல்காப்பியப் பாயிரம், முதற் சூத்திரம் ஆகிய இரண்டிற்கும் விருத்தியுரை எழுதினார் இவர். இவ்விருத்தியுரை இலக்கண ஆராய்ச்சிக் கருவூலமாய்த் திகழ்கின்றது. இவரை அடுத்துச் சோழவந்தான் அரசன் சண்முகனார் தொல்காப்பியப் பாயிரத்திற்கும் முதற் சூத்திரத்திற்கும் விருத்தியுரை எழுதினார். அரசன் சண்முகனார் எழுத்ததிகாரத்தில் நூன் மரபு, மொழி மரபு என்ற இரு பகுதிகளுக்கும் உரை எழுதினார் என்றும், அவ்வுரைப் பகுதிகள் கிடைக்கவில்லை என்றும் கூறுவர்.

**சொற்பொருள் தருதல்**

இளம்பூரணர் பல இடங்களில் சொற்களின் பொருளை நன்கு விளக்கிச் சொல்கிறார். மாணாமை என்ற சொல்லிற்கு மிகாமை என்ற பொருள் கூறுகின்றார். உயர்வு என்ற சொல்லிற்கு விளக்கமாகப் பின்வருமாறு கூறுகின்றார் : "உயர்வு தாம் பல, குலத்தால் உயர்தலும், தவத்தால் உயர்தலும், நிலையால் உயர்தலும், உபகாரத்தால் உயர்தலும்" என விளக்குகின்றார். எழில் என்பதற்கு அழகு என்றுபொருள் கூறுகின்றார். சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு போன்ற நூல்களிலிருந்து பல பாடல்களை மேற்கோள் காட்டுகின்றார்.

செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்

அறிவும் அருமையும் பெண்பாலான\

- (பொருளதிகாரம், 206)

என்ற நூற்பாவிற்கு உரை எழுதுங்கால்,

செறிவு என்பது அடக்கம்

நிறைவு என்பது அமைதி

செம்மை என்பது மனம்கோடாமை

செப்பு என்பது சொல்லுதல்

அறிவு என்பது நன்மை, தீமை பயப்பனவும் அறிதல்

அருமை என்பது உள்ளக்கருத்தினை அறிதல்

இவையெல்லாம் மகளிர்க்கு உரித்தானவை என இளம்பூரணர் விளக்கம் தருகின்றார். எனவே இளம்பூரணர்க்கு உரை முதல்வர் என்ற பெயர் முற்றிலும் பொருத்தம் ஆகும்.

**சேனாவரையர் உரை**

தொன்மை இலக்கண நூலாம் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை வகுத்தவர்கள் ஐந்து பேர். இந்த ஐந்து பேரின் உரையுள் சேனாவரையரின் உரையே மிகச் சிறந்தது. சேனாவரையர் என்ற பெயருக்குப் படைத்தலைவர் என்பது பொருள். பண்டைய தமிழ் வேந்தர்கள் படைத் தலைவர்களைச் சேனாவரையர் என அழைத்தனர். இவ்வாறு அமைந்த சிறப்புப் பெயரே பிற்காலத்தில் இயற்பெயராக வழங்கி விட்டது. இவருடைய உரை, திட்பமும் நுட்பமும் வாய்ந்தது. சேனாவரையரின் புலமைப் பெருமிதமும், ஆராய்ச்சி வன்மையும், கருத்துத் தெளிவும், உரை முழுமையும் காணலாம். கற்கண்டை வாயிலிட்டு மெல்ல மெல்லச் சுவைத்து இன்புறுவதுபோல் இவர் உரையை நாள்தோறும் பயின்று மெல்ல மெல்ல உணர்ந்து மகிழ வேண்டும். தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு எழுந்த இவருடைய உரை சேனாவரையம் என்றே குறிக்கப்படும் பான்மை இவருடைய உரைச் சிறப்பினை உணர்த்தும். 'வடநூற் கடலை நிலை கண்டுணர்ந்த சேனாவரையர்' என்று இவர் வழங்கப்படுவதற்குத் தகுந்தாற்

போன்று வடநூற் கருத்துகளை யொட்டிச் சில இடங்களில் தமிழிலக்கணம் கூறுகிறார். இவர் காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பர். பாண்டிய நாட்டுக் கொற்கைத் துறைமுகத்திற்கு அருகே உள்ள ஆற்றூர் என்பது இவரது சொந்த ஊர். சேனாவரையர் வாழ்ந்த போது அரசாண்ட மன்னர் குலசேகர பாண்டியன். சொல்லதிகார உரையின் தொடக்கத்தில் இவர் விநாயகர், சிவன், கலைமகள், முருகன், அகத்தியர் ஆகியவர்களை வணங்குகின்றார். எனவே இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும். இவர் ஆசிரியர் பணியை மேற்கொண்டு இருந்தார். தொல்காப்பியர் வகுத்துள்ள இலக்கண விதிகளையும் சூத்திரங்களையும் சேனாவரையர் தம் நுட்பமான அறிவால் உணர்ந்து நுணுகி நோக்கி, நூலாசிரியர் ஒவ்வொரு சொல்லையும், பொருள் ஆழத்துடன் அமைத்திருக்கின்றார் என்று கூறியுள்ளார். சேனாவரையர் எது சரி, எது பிழை என ஆராய்ந்து, தம் முடிவினை ஆதாரத்தோடு எடுத்துக் காட்டுகின்றார். "வடநூற் கடலை நிலை கண்டு உணர்ந்த சேனாவரையர்" என, சிவஞான முனிவர் பாராட்டியுள்ளார்.

**பெயர்**

சேனாவரையர் என்ற சொல்லுக்குப் படைத்தலைவர் என்பது பொருள். சேனை + அரையர் எனப்பிரித்துப் படைத் தலைவர் என்று பொருள் கொள்வர் நன்னூலின் உரையாசிரியராகிய மயிலைநாதர். சிறப்பால் பெறும் பெயருக்கு 'ஆசிரியன், படைத்தலைவன், சேனாவரையன்' என்பனவற்றை உதாரணமாகக் காட்டியுள்ளார் (நன். பெய.-19). ஆதலின், பண்டைத் தமிழ் மன்னர்கள், தம் படைத்தலைவர்களுக்குச் 'சேனாவரையர்' என்றசிறப்புப் பெயரை இட்டுவழங்கினர் என்று அறியலாம். சேனாவரையர் என்பது இயற்பெயராகவும் 'கல்வெட்டுகளில் வழங்கியுள்ளது. உரையாசிரியராகிய சேனாவரையரைப் படைத்தலைவர் என்று கொள்வதற்குச் சான்று எதுவும் இல்லை. ஆதலின், அதனை இயற்பெயராகவே கருத வேண்டியுள்ளது. இவரதுமுன்னோர்கள், படைத்தலைவர்களாக இருந்திருக்கக்கூடும். அக்காரணம் பற்றி, இவருக்குச் சேனாவரையர் என்ற பெயர் வழங்கி இருக்கலாம். இலக்கண விதிகளை விளக்கும் இடத்து நன்னூல் கருத்துகளை விளக்குகின்றார்.

பழையன கழிதலும் புதியன புகுதலும்

என்ற நூற்பாவை மேற்கோள் காட்டியுள்ளார். மேலும் திருவள்ளுவரைத் தெய்வப் புலவன் என்றே அழைக்கின்றார். சேனாவரையர் உரை செறிவும், சுருங்கச் சொல்லி உய்த்துணரவைக்கும் இயல்பும் உடையது. இதைக் கற்கும் போது சிங்க நோக்காக நூலின் முன்னும் பின்னும் நோக்கி அவற்றை நன்கு நினைவில் கொண்டு கற்க வேண்டிய பகுதிகள் பல இருப்பதை உணரலாம்.

**கல்வெட்டின் உதவி**

மாறோக்கத்தில் எவ்வூரில் சேனாவரையர் வாழ்ந்தார் என்பதை அறிந்துகொள்ளக் கல்வெட்டு, பெரிதும் துணைசெய்கின்றது. திருநெல்வேலி மாவட்டத்தில், கொற்கைக்கு அருகில் தாமிரவருணியாற்றின் கரையில், ஆற்றூர் என்னும் ஊர் உள்ளது. அவ்வூர்க்கோயிலில், வரையப்பட்டுள்ள கல்வெட்டுகளில் ஒன்று, ஆற்றூர்ச் சேனாவரையர் என்பவர், ஆசிரியமாணாக்கர் முறையில் தம் முன்னோரிடமிருந்து, தமக்குக் கிடைத்த நிலம் மனை ஆகியவற்றைத் தம் ஊரில் உள்ள சோமநாதக் கடவுளுக்கு வழங்கிய செய்தியைக் கூறுகின்றது.2இக் கல்வெட்டில் கூறப்படும் சேனாவரையர், தொல்காப்பிய உரையாசிரியராகிய சேனாவரையாக இருக்கக்கூடும் என்று அறிஞர் உலகம் கருதுகின்றது.

அக்கோயிலில் உள்ள வேறு இரண்டு கல்வெட்டுகளால், பின்வரும் செய்திகள் தெரிகின்றன. சேனாவரையரின் முன்னோர் ஆற்றூரில், படைத்தலைவர்களின் வழித்தோன்றல்களாகவும், இடம் பொருள் ஏவல் உடைய பெருஞ் செல்வராகவும் இருந்தனர்.

காலம்

இவ்வாறு ஆற்றூர்ச் சேனாவரையர் தம் சொத்துகளைச் சிவன் கோயிலுக்கு வழங்கிய காலம், மாறவர்மன் குலசேகர பாண்டியனது ஏழாம் ஆட்சியாண்டகிய கி.பி.1275 ஆகும். இப் பாண்டியனை எம்மண்டிலமும் கொண்டருளிய மாறவர்மன் குலசேகரன் (கி.பி.1268-1311) என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். எனவே, சேனாவரையர், அப் பாண்டிய

மன்னன் காலத்தில் 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் எனலாம்.

**சமயம்**

இவரது உரையைக் கொண்டு, இவரது சமயத்தை அறிய இயலவில்லை. 'அரையர்' என்ற பெயர், திருவரங்கத்தில், பள்ளி கொண்ட பெருமாள் கோயிலின்கண், திருவாய்மொழியை அபிநயம் பிடித்துப் பாடுவோருக்கு வழங்குவதால், ஒருகால் சேனாவரையர் திருமாலின் அடியவராய் இருத்தல் கூடுமோ என்று கருதுபவர் உண்டு.

இவரது உரைநூலின் தொடக்கத்தில், வாழ்த்துப் பாடல்கள் நான்கு காணப்படுகின்றன. அவை முறையே விநாயகரையும், மாதொருபாகனையும், கலைமகளையும் அகத்தியரையும் வாழ்த்தி வணங்குகின்றன. அவற்றுள் முதற் பாடலாகிய,

தன்தோள் நான்கின் ஒன்றுகைம் மிகூஉம்
களிறுவளர் பெருங்கா டாயினும்
ஒளிபெரிது சிறந்தன்று அளியஎன் நெஞ்சே

என்ற விநாயகர் வாழ்த்தை. இளம்பூரணர் மேற்கோளாகக் காட்டுகின்றார் (தொல். பொருள். செய். 50). இளம்பூரணர் சேனாவரையர்க்கு முந்தியவர் ஆதலின், இச் செய்யுளை இளம்பூரணர் உரையிலிருந்து சேனாவரையர் பெற்றுள்ளார். ஏனைய பாடல்களை இயற்றியவர் சேனாவரையரே என்பதில் கருத்து வேற்றுமை இல்லை. பல ஆண்டுகளாக அப் பாடல்கள், சேனாவரையர் உரையோடு சேர்ந்தே வழங்கி வருகின்றன. வேறு ஒருவர் அவற்றை இயற்றியதாக இன்றுவரை யாரும் கருதவில்லை. அவை, இடைச்செருகல் என்பதற்குச் சான்று எதுவும் இல்லை.

**ஆசிரியப்பணி**

சேனாவரையர் ஆசிரியப் பணி பூண்டு வாழ்ந்தவர் என்பதைக் கல்வெட்டால் மட்டுமின்றி, அவர் உரையாலும் அறியலாம். "மாணாக்கர்க்கு

உணர்வு பெருகல் வேண்டி வெளிப்படக் கூறாது உய்ந்துணர வைத்தல் அவர்க்கு (உரையாசிரியர்க்கு) இயல்பு" என்று முதற்சூத்திர உரை விளக்கத்திலேயே மாணாக்கரை நினைவுப்படுத்துகின்றார். தம்உரையை, ஓர் ஆசிரியர் தம் மாணாக்கர் பலர்க்குப் பாடம் சொல்லும்போதுமாணவர் எழுப்பும் வினாவும் ஆசிரியர் கூறும் விடையும் அமையுமாறு எழுதிச் சொல்கின்றார்.

**உரையின் இயல்பு**

சேனாவரையர் உரை, திட்பமும் நுட்பமும் வாய்ந்தது. சேனாவரையரின் புலமைப் பெருமிதமும் ஆராய்ச்சி வன்மையும் கருத்துத் தெளிவும் உரைமுழுவதிலும் உள்ளன. கற்கண்டை வாயிலிட்டு மெல்ல மெல்லச் சுவைத்து இன்புறுவதுபோல், இவர் உரையை நாள்தோறும் பயின்று மெல்ல மெல்ல உணர்ந்து மகிழ வேண்டும். பலமுறை ஆழ்ந்து பயின்றாலும் இவ்வுரையை முற்றும் பயின்று விட்டோம் என்ற மனநிறைவு ஏற்படுவதில்லை. செங்குத்தான மலைமீது ஏற, கல்லும் முள்ளும், மேடும் பள்ளமும் நிறைந்த குறுகிய வழியில் வெயிலில் நடப்பது போன்ற உணர்ச்சியை, இவ்வுரையைக் கற்கத் தொடங்கும் மாணவர் முதலில் அடைவர்; முடிவில், மலையுச்சிக்குப் போய், மர நிழலில் நின்று, தண்ணென்ற காற்று வீச மெய் குளிர்ந்து, அங்கிருந்தபடியே மண்ணும் விண்ணும் வழங்கும் இன்பக் காட்சியைக் கண்டு மகிழும்போது பெறும் இன்ப உணர்வைப் பெறுவர்.

**உரைத்திறன்**

தொல்காப்பியர் வகுத்துள்ள இலக்கண விதிகளையும் சூத்திரங்களையும் சேனாவரையர் தம் நுண்மாண் நுழைபுலம் கொண்டு நுணுகி நோக்கி, நூலாசிரியர் ஒவ்வொரு சொல்லையும் பொருளாழத்துடன் அளந்து அமைத்திருக்கின்றார் என்ற கருத்தைப் பல இடங்களில் வற்புறுத்திக் கூறுகின்றார்.

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது

நினையுங் காலைக் காலமொடு தோன்றும் (198)

என்ற சூத்திரத்திற்குச் சேனாவரையர் எழுதியுள்ள விளக்கம் பலமுறை கற்று மகிழும் வகையில் உள்ளது:

"வேற்றுமை கொள்ளாது என்னாது காலமொடு தோன்றும் எனின், தொழில் நிலையொட்டும் தொழிற் பெயரும் வினைச் சொல்லாவான் செல்லும் ஆகலானும் காலமொடு தோன்றும் என்னாது வேற்றுமை கொள்ளாது எனின், இடைச் சொல்லும் உரிச்சொல்லும், வினைச்சொல்லெனப்படும் ஆகலானும் அவ்விரு திறமும் நீக்குதற்கு 'வேற்றுமை கொள்ளாது, காலமொடு தோன்றும்' என்றார். வினைச் சொல்லுள், வெளிப்படக் காலம் விளங்காதனவும் உள; அவையாவும் ஆராயுங்கால் காலம் உடைய என்றற்கு 'நினையுங்காலை' என்றார்" என்று சேனாவரையர் எழுதியுள்ள விளக்கம் புலமைக்கு விருந்தளிக்கின்றது.

இவ்வாறே "பெண்மை சுட்டிய" (4) என்னும் சூத்திரத்திற்கு இவர், சொல்லுக்குச் சொல் நுண்பொருள் கண்டு; உரை எழுதும் திறன் வியந்து போற்றுதற்கு உரியதாகும்.

**ஆராய்ச்சித் திறன்**

சேனாவரையர் தொல்காப்பியரிடம் பெருமதிப்புக் கொண்டவர். தொல்காப்பியர் நூலில், தாம் ஏற்றுக்கொள்ள இயலாத சில இலக்கணக் கருத்துக்கள் இருப்பதைச் சேனாவரையர் சில இடங்களில் உணர்கின்றார். இருப்பினும், தொல்காப்பியரைக் குறைகூறாமல், தம் கருத்தை எழுதித் தம் ஆராய்ச்சித் திறனைக் காட்டுகின்றார்.

"எல்லே இலக்கம்" என்பது, இடையியலில் உள்ள சூத்திரம் (சொல்.269). 'எல்' என்பதை உரிச் சொல்லாகக் கொள்ளவேண்டும் என்பது சேனாவரையர்ம கருத்து. ஆனால் தொல்காப்பியரே அதனை இடைச்சொல் என்று கூறுவதால், சேனாவரையர் தம் கருத்தையும் எழுதி நூலாசிரியரையும் மதிக்கின்றார். "எல் என்பது உரிச்சொல் நீர்மைத்து ஆயினும் ஆசிரியர் இடைச்சொல்லாக ஓதினமையின், இடைச்சொல் என்று

கோடும்” என்று மிகச் சுருக்கமாக எழுதித் தம் சொல்லாராய்ச்சித் திறனை வெளிப்படுத்துகின்றார்.

### நன்னூலாரும் சேனாவரையரும்

சேனாவரையர் நன்னூலார் கருத்துக்களைத் தம் உரைகளில் ஆங்காங்கே சுட்டிச் செல்லுகின்றார்.

‘புதியன தோன்றினாற் போலப் பழையன கெடுவனவும் உள எனக்கொள்க’ (452) என்று சேனாவரையர் கூறுவது,

பழைய கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே

(நன்.-462)

என்ற நன்னூல் சூத்திரத்தை நினைவூட்டுகின்றது

202 ஆம் சூத்திர உரையில், உண்கின்றனம், உண்கின்றாம் என்பனவற்றை உதாரணங் காட்டுகின்றார்.

### பேராசிரியர்

பேராசிரியர் என்ற பெயருடன் தமிழிலக்கிய உலகில் பலர் உள்ளனர். தொல்காப்பியம் பொருளதிகாரத்திற்கு உரை வகுத்த பேராசிரியர், பல ஆண்டுகளாக நன்கு அறிமுகமானவர்.

பொருளதிகாரம் பின்னான்கு இயல்களுக்குப் பேராசிரியர் உரை உள்ளது. ஆதலின் தொல்காப்பிய உரையாசிரியர்களுள் ஒருவராக-கற்றவர் நெஞ்சத்தில் நிலையான இடத்தைப் பெற்றவராக இவர் விளங்குகின்றார். பேராசிரியர் என்ற பெயருடன் உள்ள வேறு பல ஆசிரியர்களை இனிக் காண்போம்.

1. திருக்கோவையார் உரை எழுதிய பேராசிரியர்

திருக்கோவையாருக்கு உரை எழுதியவர் பேராசிரியர் என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றார். திருக்கோவையார் உரையில் பல இடங்களில்

இலக்கண மேற்கோளாக, தொல்காப்பியச் சூத்திரங்களைக் காட்டுகின்றார். அவ்விடங்களில் தொல்காப்பியத்திற்கு உரை செய்ததாய் எவ்விதக் குறிப்பும்காட்டவில்லை. மேலும், பொருளதிகார உரையாசிரியராகிய பேராசிரியர் செய்யுளியலில் (155) “இனி, கோவையாக்கி எழுத்து எண்ணி அளவியற்படுத்துச் செப்பினும் அவையேயாம்” என்று குறிப்பிட்டு,‘காண்பான் அவாவினால்’ என்று தொடங்கும் கோவைச் செய்யுள் ஒன்றைக் காட்டுகின்றார். எவ்விடத்திலும் திருக்கோவையார் செய்யுள் ஒன்றையும் மேற்கோள் காட்டவில்லை. ஆதலின் திருக்கோவையார் உரையாசிரியராகிய பேராசிரியர் வேறு ஒருவர் என்று கருத வேண்டியுள்ளது.

2. பொதுப்பாயிரம் செய்த பேராசிரியர்

தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு உரை எழுதிய பேராசிரியர், வடவேங்கடம் தென்குமரி என்னும் சிறப்புப் பாயிரம் செய்தார் பனம்பாரனார் எனவும், வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும் என்னும் பொதுப்பாயிரம் செய்தான் ஆத்திரையன் பேராசிரியன் எனவும பாயிரம் செய்தான் பெயர் கூறியவாறு” என்று மரபியலில் (98) கூறுகின்றார் தம் பெயரையே ஆத்திரையன் பேராசிரியன் என்று படர்க்கையாக வைத்துக கூறார் ஆதலின், ஆத்திரையன் பேராசிரியன் என்பவர் வேறு ஒருவர் என்று உணரலாம். அவர் செய்த பொதுப்பாயிரம் தொல்காப்பிய எழுத்ததிகாரத்திற்கு உரை வகுத்த பழைய உரையாசிரியர்களாகிய இளம்பூரணரோ, நச்சினார்க்கினியரோ வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும் என்னும் பொதுப்பாயிரத்தைக் கூறித் தம் உரையைத் தொடங்கவில்லை. பிற்காலத்தில் தொல்காப்பியச் சூத்திர விருத்தி இயற்றிய சிவஞான முனிவர் அப் பொதுப்பாயிரம் முழுவதையும் தந்து தம் உரையைத் தொடங்குகின்றார். 33 அடிகளால் அமைந்த அப்பாயிரம் அகவற்பாவால் அமைந்து, ஆசிரியர், மாணவர் ஆகியவர்களின் தகுதிகளைக் குறிப்பிடுகின்றது *

3. மயேச்சுரர் என்னும் போரசிரியர்

யாப்பருங்கல விருத்தியுரையில், யாப்பு நூல் ஒன்று இயற்றிய மயேச்சுரர், பேராசிரியர் என்று குறிப்பிடப்படுகின்றார். ‘பிறை முடிக் கறை மிடற்றனார் பெயர் மகிழ்ந்த பேராசிரியர், திரிபுரம் எரித்தவர் பெயர்

மகிழ்ந்த பேராசிரியர், பெண்ணொரு பாகன் பெயர் மகிழ்ந்த பேராசிரியர், காமனைக் காய்ந்தவர் பெயர் மகிழ்ந்த பேராசிரியர் என்று பலவாறு 'மயேச்சுரர்' என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது.

தொல்காப்பியம் செய்யுளில் உரையால் தெரியக் கிடக்கும் பேராசிரியர்கொள்கையில் சிலவற்றோடு, இவ்விருத்தியுரையிற் கண்ட பேராசிரியர்மயேச்சுரர் சூத்திரங்கள் மாறுபடுகின்றன. அது கொண்டு ஈண்டுசுட்டப்பட்டவர். தொல்காப்பியத்திற்கு உரை இயற்றிய பேராசிரியர் அல்லர் என்று துணியப்படும்.

4. குறுந்தொகை உரை எழுதிய பேராசிரியர்

குறுந்தொகைக்கு உரை எழுதிய பேராசிரியர் ஒருவர் உண்டு .நச்சினார்க்கினியரின் உரைச் சிறப்புப் பாயிரம்,

நல்லறி வுடைய தொல்பே ராசான்

கல்வியும் காட்சியும் காசினி அறிய

பொருள்தெரி குறுந்தொகை

என்று கூறுகின்றது. குறுந்தொகைக்குப் பேராசிரியர் எழுதிய உரை மறைந்து விட்டது. பொருளதிகாரத்திற்கு உரை இயற்றிய பேராசிரியரே குறுந்தொகைக்கும் உரை இயற்றினார் என்பதற்குக் தக்க சான்றுகள் இல்லை.நச்சினார்க்கினியர் அகத்திணை இயலில் (46), "யானே ஈண்டையேனே" என்னும் (குறுந்தொகை 54) பாட்டில் 'மீன் எறி தூண்டில்' என்றதனை ஏனையுவமம் என்றார்" என்று குறிப்பிடுகின்றார். இவ்வாறு அவர் குறிப்பிடுவது, பேராசிரியர் பொருளதிகாரத்திற்கு எழுதிய உரையையாகும்.

5. பேராசிரியர் நேமிநாதர்

'தமிழ் நாவலர் சரிதை'யில் ஒட்டக்கூத்தர் உலாப் பாடிய போது, பேராசிரியர் நேமிநாதர் பட்டோலை பிடிக்கப் பாடியது என்ற தலைப்புடன்

ஒரு செய்யுள் காணப்படுகிறது. நேமிநாதர் என்பவருக்கும் பேராசிரியர் என்ற பெயர் வழங்கியது என்பதை இதனால் அறியலாம்.

6. தொல்காப்பிய உரையாசிரியர்-பேராசிரியர்

தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியர், கடல் போல் பரந்த புலமையுடையவர். இவரது புலமைத் திறனைத் தொல்காப்பியம் பொருளதிகார உரையில் கண்டு வியக்கலாம். இப் பேராசிரியர் தம் உரைகளில் நன்னூல், தண்டியலங்காரம், யாப்பருங்கலம் ஆகிய நூலாசிரிர்களின் கருத்துகளை எடுத்துக் கூறி மறுக்கின்றார். எனவே, இவர் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் என்னலாம். மேலும், இவர் செய்யுளில் உரையில் (செய். 149),

கொன்றை வேய்ந்த செல்வன் அடியிணை

என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே

என்னும் கொன்றைவேந்தன் செய்யுளை மேற்கோள் காட்டுகின்றார். மூதுரை என்னும் நீதிநூலிலிருந்து, 'அட்டாலும் பால் சுவை' என்ற பாடலையும் மேற்கோள் காட்டுகின்றார்.

இவை பேராசிரியரின் காலத்தை அறிவிக்கும் தக்க சான்றுகளாய்

உள்ளன. பேராசிரியர் அடிச்சுவட்டில

பேராசிரியர் என்பது கல்வி ஒழுக்கம் ஆகியவற்றால் சிறந்து விளங்கியவரைக் குறிக்க எழுந்த பெயர். இவரது இயற்பெயர் இன்னதென்று

அறிய முடியவில்லை. நச்சினார்க்கினியர் தம் உரைகளில் பேராசிரியர் என்ற பெயரையே வழங்குகின்றார். பேராசிரியரைப் பின்பற்றி நச்சினார்க்கினியர் உரை எழுதும் இடங்கள் பல உண்டு. இருவர் உரைகளையும் ஒப்பிட்டுக் காணச் செய்யுளியல் ஒன்றே துணை புரிகின்றது. அவ்வியலுக்கு அமைந்துள்ள இருபெரும் உரையாசிரியர்களின் உரையை ஒப்பிட்டு நோக்கினால், பேராசிரியர் பெருமை புலனாகும்; பேராசிரியரின் அடிச்சுவட்டினையே நச்சினார்க்கினியர் பெரிதும் பின்பற்றி நடக்கின்றார் என்பது விளங்கும். உரை எழுதும் முறை, சொல்லும் வகை, சொற்பொருள்

உரைக்கும் திறன், மேற்கோள் ஆட்சி, உரைநடைப் போக்கு ஆகிய எல்லாவற்றிலும் நச்சினார்க்கினியர் பேராசிரியரையே பின்பற்றுகின்றார்.

**சமயம்**

பேராசிரியர் வேதம் கூறும் வைதிக நெறியைப் பின்பற்றுபவர். செய்யுளியலில் (109) 'வாழ்த்தப்படும் பொருளாவன-கடவுளும் முனிவரும் பசுவும் பார்ப்பாரும் அரசரும் மழையும் நாடும் என்பன' என்று கூறுகின்றார். இங்கே வைதிகச் சமயச் சாயலைக் காணலாம்.

செய்யுளியலில் பாடல், கலிப்பா ஆகியவற்றின் வகைகளுக்கு உதாரணமாக இவர், எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றாகிய பரிபாடலிலிருந்தும், கலித்தொகை கடவுள் வாழ்த்தையும் மேற்கோள் காட்டுகின்றார். அப்பாடல்கள் திருமால், முருகன், சிவன் ஆகிய தெய்வங்களையும் பரவும் பாடல்களாகும். இவையேயன்றி இவர் காட்டும் வேறு சில தனிப்பாடல்களும் (பரிபாடலின் வகைகள்) மேற்கூறிய தெய்வங்களைப் பற்றியவையேயாகும் மரபியலில் (94),

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்

என்ற சூத்திரத்திற்கு எழுதிய விளக்கத்தில், 'பிற்காலத்துப் பெருமான் அடிகள் களவியல் செய்தாங்குச் செய்யினும்' என்று கூறுகின்றார்.

இவையாவும் இவர் வைதிக நெறியைப் பின்பற்றுபவர் என்பதை உணர்த்துவனவாகும்.

மறந்துபோன உரைப்பகுதிகள்

பேராசிரியர், பொருளதிகாரம் முழுமைக்கும் உரை இயற்றினார்என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. இன்று மெய்ப் பாட்டியல், உவம இயல், செய்யுள் இயல், மரபியல் ஆகிய நான்கிற்கு மட்டுமே அவரது உரை கிடைக்கின்றது.

“அவை வெட்சியுள்ளும் ஒழிந்த திணையுள்ளும் காட்டப்பட்டன”

(செய்-189)

“காரணம் களவியலுள் கூறினாம்” (மெய்-18)

“அகத்திணை இயலுள் கூறினாம்” (மெய்-19)

“முன்னர் அகத்திணை இயலுள் கூறி வந்தோம்’ (செய்-1)

‘முன்னர் அகத்திணை இயலுள் கூறினாம்’ (செய்-80)

என்று பேராசிரியரே கூறுவதால் பொருளதிகாரம் முழுமைக்கும் உரை செய்தார் என்று அறியலாம். மேலும் நச்சினார்க்கினியர் அகத்திணை இயலுள்(46), ‘பேராசிரியரும் இப்பாட்டில் மீன்எறி தூண்டில் என்றதனை ஏனை உவமம் என்றார்’ என்று குறிப்பிடுகின்றார்.

**அதிகார அமைப்பும் பெயரும்**

பேராசிரியர் தம் உரையில், தொல்காப்பிய அதிகாரங்களின் அமைப்பைப்பற்றியும், அவற்றின் பெயர்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றார்.

இவர் காலத்தில், பொருளதிகாரத்தில் எட்டாம் இயலாக உள்ள செய்யுளியலை ஒன்பதாம் இயலாகவும், மரபியலை எட்டாம் இயலாகவும் மாற்றி அமைத்தவர் இருந்தனர் என்பதைக் குறிப்பிடுகின்றார். ‘இக் கருத்து அறியாதார் செய்யுளியலினை ஒன்பதாம் ஓத்து என்ப’ என்று குறிப்பிடுகின்றார் (மரபியல்-93). அவ்வாறு மாற்றி அமைப்பது கூடாது என்பதற்குக் காரணமும் கூறுகின்றார்.

இன்றும் அவ்விரு இயல்களை முன்பின்னாக மாற்றி (மரபியலை எட்டாவதாகவும், செய்யுள் இயலை ஒன்பதாவதாகவும்) அமைத்து, ஆராய்ச்சிநூல் வெளியிட்டவர் உண்டு.*

அதிகாரம் என்ற பெயரோடு, ஓத்து என்ற பெயரும் அதிகாரங்களுக்கு வழங்கியது என்பதற்குப் பேராசிரியர் உரையில் பின்வரும் சான்றுகள் உள்ளன:

‘சொல் ஓத்தினுள், இவ்வாய்பாடு விரிந்து வருமாறு கூறாது.

(மரபியல்-18, செய்-1)

‘எழுத்து ஓத்தினுள் குறிலும் நெடிலும்’ (செய்-2)

இவர் காலத்தில் அதிகாரங்களுக்குப் படலம் என்ற பெயரும் வழங்கிற்று.

‘தொல்காப்பியம் என்பது பிண்டம். அதனுள் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், என்பன படலம் எனப்படும்’ (செம்-172) என்று இவர் குறிப்பிடுகின்றார். பேராசிரியர் கருத்தை மேற்கொண்டு, இக்\ காலத்தும் அறிஞர்கள் சிலர், அதிகாரம் என்ற பெயரை நீக்கிவிட்டு, படலம் என்ற பெயரையே இட்டு வழங்கியுள்ளனர்.

உரைச் சிறப்பு

பேராசிரியர், இளம்பூரணருடன் மாறுபட்டு உரை எழுதும் இடங்கள் சில உண்டு. பேராசிரியர் உரையால், மெய்ப் பாட்டியலும், உவம இயலும் பெரிதும் விளக்கமடைகின்றன. மெய்ப்பாட்டியலை மிகவும் விரிவாக ஆராய்ந்து பல நுட்பமான கருத்துகளை இவர் கூறுகின்றார். தலைவிக்கு உரிய மெய்ப்பாடுகளை

வகைப்படுத்தி, புணரும்முன் தோன்றும் மெய்ப்பாடு, களவிற்குரிய மெய்ப்பாடு,

கற்பிற்குரிய மெய்ப்பாடு என்று தெளிவாக விளக்குகின்றார். உவம இயலில் உள்ளுறை உவமம், இறைச்சி பற்றி இவர் கூறும் கருத்துகள் சிறப்பாகவும் விளக்கமாகவும் அமைந்துள்ளன. இளம்பூரணர், ஏனை உவமத்திற்கு உரிய சூத்திரங்களாகக் கொண்டவற்றுள் சிலவற்றைப் பேராசிரியர் உள்ளுறை உவமத்திற்கு உரியவையாக்கி உரைஎழுதியுள்ளார்.

மாறுபட்ட இடங்களை மிக நயமாக மறுக்கின்றார். இது இவருக்கு

உள்ள சிறப்பியல்புகளுள் ஒன்று.

'அவர் அறியார்; அவ்வாறு சூத்திரம் செய்வது ஆசிரியர் கருத்து அன்று' (செய்-101); அவ்வாறு கூறுவார் செய்யுள் அறியாதார் (செய்-130); தலைகுலுக்கி வலியச் சொல்லினும் தன்சீர் இன்மையின் என மறுக்க (செய்-108); நாலசைச்சீர் கொண்டாரும் உளர், ஐயசைச்சீர் கொண்டாரைக் கண்டிலம் (செய்-12) என்று இவர் மிக நயமாக மறுக்கின்றார்.

தமக்கு முன் இருந்த உரையாசிரியர்களின் பெயரையோ நூலாசிரியர்களின் பெயரையோ இவர் கூறுவதில்லை. கருத்துகளை மட்டுமே கூறி மறுக்கின்றார்.

இளம்பூரணர், மிகச்சுருக்கமாக எழுதிச் சென்றுள்ள இடங்களை எல்லாம் இவர் நன்கு விளக்கியுள்ளார். மெய்ப்பாட்டியலின் முதற்சூத்திர உரையில், பண்ணைத் தோன்றிய என்பதற்கு 'விளையாட்டு ஆயத்தின்கண் தோன்றிய' என்று இளம்பூரணர் எழுதுகின்றார். பேராசிரியர், 'முடியுடை வேந்தரும் குறுநில மன்னரும் முதலாயினார் நாடக மகளிர் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் காமம் நுகரும் இன்ப விளையாட்டினுள் தோன்றிய' என்று விளக்கமாக எழுதுகின்றார்.

பேராசிரியர் தொல்காப்பியரை, தொல்காப்பியன் என்றும், என்றான் ஆசிரியன் என்றும் ஆசிரியன் என்றும் ஒருமையிலேயே வழங்குகின்றார்.

**பழமையும் புதுமையும்**

பழைய மரபையும், பழைய நூற்கொள்கைகளையும் பேராசிரியர் பெரிதும் போற்றுகின்றார். புதிய நூல் வழக்கையும் கொள்கைகளையும் கடிந்து ஒதுக்கி விடுகின்றார்.

"அவை சான்றோர் செய்யுள் அல்ல என மறுக்க" (செய்-8)

“அங்ஙனம் வந்தது பிற்காலத்துச் செய்யுள் என்க” (செய்-17)

இவரொடு (தொல்காப்பியர்) மாறுபடுதல் மரபன்று என மறுக்க’

(செய்-17).

இவ்வாறு இவர் புதிய மரபை ஒதுக்குகின்றார்.

“பிற்காலத்தில் செய்த நூல்பற்றி முற்காலத்துச் செய்யுட்கு எல்லாம் இலக்கணம் சேர்த்துதல் பயமின்று” (செய்-17).

‘தமிழ்நூலுள்ளும் தமது மதத்துக்கு ஏற்பன முதல் நூல் உள என்று இக் காலத்துச் செய்து காட்டினும் அவை முற்காலத்து இல் என்பது, முற்கூறிவந்த வகையான் அறியப்படும்’ (மரபி-94).

“காலந்தோறும் வேறுபட வந்த அழிவழக்கும் இழிசினர் வழக்கும் முதலாயினவற்றுக்கு எல்லாம் நூல் செய்யின், இலக்கணம் எல்லாம் எல்லைப்படாது இகந்தோடும்” (மர-94).

இத்தகைய கருத்துகளைக்கூறும் பேராசிரியர், பழைய இலக்கண மரபைப் போற்றிப் பிற்காலத்தில் தோன்றிய இலக்கணக் கொள்கைகளை மறுக்கின்றார்.

நூலுக்கு உரிய பத்துவகைக் குற்றங்களுள் ஒன்றாக, ‘தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறல்’ என்பதை மரபியலில் உள்ள சூத்திரம் குறிப்பிடுகின்றது (மர-108). இச் சூத்திர உரையில் பேராசிரியர், “தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறல் என்பது, மலைபடு கடாத்தினை ‘ஆனந்தக் குற்றம்’ எனப் பிற்காலத்தான் ஒருவன் ஒரு சூத்திரம் காட்டுதலும் (ஆளவந்த பிள்ளை ஆசிரியர், மலைபடு-145 நச். உரை), பதமுடிப்பு என்பதோர் இலக்கணம் படைத்துக் கோடலும் (நன்னூல்-பதவியல்) போல்வன” என்று கூறுகின்றார்.

அணிநூலை மறுத்து இவர் கூறும் கருத்துகள் ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணை செய்கின்றன.

"இவ் ஓத்தினில் (உவம இயல்) கூறுகின்ற உவமங்களுள் சிலவற்றையும், சொல்லதிகாரத்தினுள்ளும் செய்யுள் இயலுள்ளும் சொல்லுகின்றன சில பொருள்களையும் வாங்கிக்கொண்டு, மற்றவை செய்யுட்கண்ணே அணியாம் என இக்காலத்து ஆசிரியர் நூல் செய்தாரும் உளர்" என்று கூறி, பின்வரும் காரணங்களைக் காட்டி அணி நூலை மறுக்கின்றார்:

1. அவை ஒருதலையாகச் செய்யுட்கு அணி என்று இலக்கணம் கூறப்படா; என்னை? வல்லார் செய்யின் அணியாகியும், அல்லார் செயின் அணியன்றாகியும் வரும், தாம் காட்டிய இலக்கணத்தில் சிதையா வழியும்.

2. எல்லாம் தொகுத்து அணி எனக் கூறாது, வேறு சிலவற்றை வரைந்து அணி எனக் கூறுதல் பயமில் கூற்றாம்.

3. வரையறுத்துக் கூறல் அமையாது.

4. அவற்றைப் பொருள்உறுப்பு என்பதுஅல்லது அணி என்பவாயின், சாத்தனையும் சாத்தனால் அணியப்பட்ட முடியும் தொடையும்முதலாயவற்றையும் வேறுகண்டாற்போல, அவ்வணியும் செய்யுளின் வேறாதல் வேண்டும்.

5. செய்யுட்கு அணி செய்யும் பொருட்படை எல்லாம் கூறாது சிலவே கூறி ஒழியின் அது குன்றக் கூறலாம்."

இக் காரணங்களைக் காட்டி, அணி இலக்கணத்தை மறுக்கின்றார் பேராசிரியர். மேலும் சொல்லணிகளையும் மிறைக் கவிகளையும் பற்றி இவர் கொண்டுள்ள கருத்து, மிகவும் முற்போக்கு வாய்ந்தது. மரபியலில்-(90),

மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை

மரபுவழிப் பட்ட சொல்லி னான

என்ற சூத்திரத்தின் உரையின்கீழ், பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றார்:

“நிறைமொழி மாந்தர் மறைமொழி போல்வன சில மிறைக் கவி பாடினார் உளர் என்பதே பற்றி, அல்லாதாரும் அவ்வாறு செய்தல் மரபு அன்று என்றற்கும் இது கூறினான் என்பது; அவை சக்கரம் சுழிகுளம் கோமூத்திரிகை ஏகபாதம் எழுகூற்று இருக்கை மாலை மாற்று என்றாற் போல்வன. இவை மந்திர வகையான் அன்றி, வாளாது மக்களைச் செய்யுள் செய்வார்க்கு அகன் ஐந்திணைக்கும் மரபு அன்று என்பது கருத்து. அல்லாதார் இவற்றை எல்லார்க்கும் செய்தற்கு உரிய என இழியக் கருதி, அன்ன வகையான் வேறு சில பெய்து கொண்டு அவற்றிற்கும் இலக்கணம் சொல்லுப. அவை இத்துணை என்று வரையறுக்கலாகா; என்னை? ‘ஒற்றை, இரட்டை, புத்தி, வித்தாரம்’ என்றாற் போல்வன பலவும் கூட்டிக்கொண்டு அவற்றானே செய்யுள் செய்யினும் கடியலாகாமையின். அவற்றிற்கு வரையறை வகையான் இலக்கணம் கூறலாகா என்பது.”

இவ்வாறு பழைய இலக்கண மரபே சிறந்தது என்று பல இடங்களில் கூறுகின்றார்.

புதிய இலக்கண மரபைப் போற்றாத இவர், வழிவழியாக வழங்கி வரும் பழங்கதைகளை மதித்துப் போற்றுகின்றார். தொல்காப்பியர், அகத்தியர் மாணவர் பன்னிருவரில் ஒருவர் என்று இவர் நம்புகின்றார்.

**ஆராய்ச்சித் திறன்**

பேராசிரியர் தம் ஆராய்ச்சித் திறன் தோன்ற எழுதி நம்மை வியக்கச் செய்யும் இடங்கள் சிலவற்றைக் காண்போம்;

உவம இயலில், வினை பயன் மெய் உரு என்ற நான்கின் அடியாக வமைகள் பிறக்கும் என்று தொல்காப்பியர் கூறுகின்றார். (உவம-1) வடிவமும் நிறமும் பண்பினுள் அடங்கும். அவ்வாறு அவர் கூறாது, வேறு வேறாகக் கூறியதற்குக் காரணம் கூறுகின்றார் பேராசிரியர்.

இரவுக் குறிக்கண் கூற்று நிகழ்த்தும் தலைவன் கண்ணால் காணும்

நிறம்பற்றிய உவமை கூறமுடியாது. கையாலும் மெய்யாலும் தொட்டு அறிந்து வடிவம் பற்றிய உவமை மட்டுமே கூற முடியும். பகல்வேளையில் நிகழும் கூற்றுகளில் நிறம் பற்றிய உவமைகள் இடம் பெறுவது இயல்பே. நுட்பமாக இதனை உணர்ந்த தொல்காப்பியர், மெய், உரு என்ற இரண்டினையும், பண்பு என்ற ஒன்றினுள் அடக்கிவிடாமல் வேறுபடுத்திக் கூறினார் என்பது பேராசிரியர் கருத்தாகும். இக் கருத்து மிகவும் சிறப்பாக உள்ளது.

இதனைத் தொடர்ந்து, "இந் நான்கு பகுதியே யன்றி அளவும் சுவையும் தண்மையும் வெம்மையும் தீமையும் சிறுமையும் பெருமையும் முதலாயின பற்றியும் உவமப் பகுதி கூறாரோ எனின் அவை எல்லாம் இந் நான்கினுள் அடங்கும்" என்று எழுதுகின்றார்

உவம உருபுகளைப் பற்றி இவர் விரிவாக ஆராய்ந்தள்ளார். தொல்காப்பியர் கூறிய முப்பத்தாறு உருபுகளேயன்றி வேறுசில உவம உருபுகள் வரும் என்று குறிப்பிடுகின்றார். "பிறவும் என்பதனான் எடுத்து ஓதினவே அன்றி, நேர நோக்க துணைப்ப மலைய ஆர ஆமர அனைய ஏர ஏர்ப்ப செத்து அற்று கெழுவ என்றல்தொடக்கத்தன பலவும்; ஐந்தாம் வேற்றுமைப் பொருள் பற்றி வருவனவும்; என என் எச்சங்கள்பற்றிவருவனவும்; பிறவும் எல்லாம் கொள்க" என்று தம் ஆராய்ச்சித் திறன் வெளிப்படும் வகையில் கூறுகின்றார். (உவம-11) பல சொற்களின் பொருளை, மிக நுண்மையாக ஆராய்ந்து விளக்குகின்றார்.

மொழிபெயர்ப்பு - பிறபாடையாற் செய்யப்பட்ட பொருளைத் தமிழ் நூலாகச் செய்வது (மர-97).

வனப்பு-பெரும்பான்மையும் பல உறுப்புத் திரண்ட வழிப் பெறுவதோர் அழகு (செய்-235).

அரற்று-அழுகையன்றிப் பலவும் சொல்லித் தன்குறை கூறுதல்; அது காடுகெழு செல்விக்குப் பேய் கூறும் அல்லல் போல வழக்கினுள்ளோர் கூறுவன (மெய்-12).

களவு-வாய்வெருவுதல், அதனானும் அவன் உள்ளத்து நிகழ்கின்றது ஒன்று உண்டு என்று அறியப்படும் (மெய்-12).

தத்தை-பெருங்கிளி; கிளி-சிறுகிளி (மர-98).

கொலை-அறிவும் புகழும் முதலாயினவற்றைக் கொன்று உரைத்தல் (மெய்-10).

கொச்சகம்: ஒப்பினாகிய பெயர்; ஓர் ஆடையுள் ஒரு வழி அடுக்கியது கொச்சகம் எனப்படும்; அதுபோல ஒரு செய்யுளுள் பல குறள் அடுக்கப்படுவது கொச்சகம் எனப்பட்டது (செய்-121). இக் காலத்தார் அதனைப் பெண்டிர்க்கு உரிய உடை உறுப்பாக்கியும் கொய்சகம் என்று ஆக்கலின் என்பது (152).

இலக்கியத் திறனாய்வாளர்

பேராசிரியர் உரைவிளக்கம், சிறந்த இலக்கியத் திறனாய்வு நெறிகளைக் கொண்டுள்ளது. முற்காலத்து இலக்கியக் கொள்கைகளையும் திறனாய்வு முறைகளையும் அறிந்து கொள்ள, இவரது உரை பயன்படுகின்றது. கவிதைக் கலையைப்பற்றி வரன் முறையாகவும் நுட்பமாகவும் சிறந்த மேற்கோள் தந்து ஆராய்ச்சித் திறனோடு இவர் விளக்குகின்றார். இலக்கியக் கலைமாட்சி, இலக்கியக்கொள்கை, இலக்கியத் திறனாய்வு வகை ஆகியவற்றைத் தனித்தனியே பெயர் கூறி இவர் விளக்கவில்லை என்றாலும், இவரது உரையில் அவைபற்றிய அடிப்படையான உண்மைகளைக் காண முடிகின்றது. இலக்கிய ஒப்பியல் ஆய்வும் இவரிடம் உண்டு. முற்காலத்துக் கொள்கைகளைப் பிற்காலத்துக் கொள்கைகளோடு (அணி, யாப்பு பற்றியவை) ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமை காணுதல், வடமொழி நெறியை நினைவூட்டித் தமிழ் நெறியை விளக்குதல் போன்ற ஆய்வு நெறிகளை இவரிடம் காணலாம்.

6. தெய்வச்சிலையார்

தெய்வச்சிலையார் சொல்லதிகாத்திற்கு உரை இயற்றிவர். இளம்பூரணர், சேனாவரையர் ஆகியவர்க்குப் பிற்பட்டவர். இவர், தம்

உரையில் மற்ற உரையாசிரியர்களையோ, பிறர் கருத்தையோ குறிப்பிடவில்லை.

தெய்வச்சிலை என்ற தொடர், பல பொருளையுடையது. சிலை என்பதற்கு, கல் மலை வில் முதலிய பொருள்கள் உண்டு. போரில் இறந்த வீரர்களுக்கு நினைவாக நட்ட கல்லை, (நடுகல்லை) கொங்குநாட்டவர் தெய்வச்சிலை என்பர். பொதியமலை, தெய்வச்சிலை எனப்படும். திருமால் ஏந்திய வில்லை தெய்வச்சிலை என்பர்.

திருமாலுக்குரிய பல பெயர்களில் ஒன்று தெய்வச் சிலையார் என்பது.

பவ்வத் திரைஉலவு புல்லாணி கைதொழுவேன்

தெய்வச் சிலையார்க்குஎன் சிந்தைநோய் செப்புமினே

(பெரிய திருமொழி-9,4,3)

என்று திருமங்கையாழ்வார், திருபுல்லாணியில் வீற்றிருக்கும் திருமாலைக் குறிப்பிடுகின்றார். தெய்வச்சிலையார் என்பது இடைக்காலத்தில் மக்கள் பெயராக வழங்கியது. தேவச்சிலையான் என்றும் கல்வெட்டுகளில் அப்பெயர் வருகின்றது. தெய்வச் சிலையார் விறலி விடுதூது, தெய்வச் சிலைப் பெருமாள் வாகனமாலை, தெய்வச் சிலையான் திருப்புகழ், தெய்வச் சிலையான் வண்ண விருத்தம் ஆகியவை திருமாலைப் பற்றிய நூல்களாகும்.

வரலாறு

உரையாசிரியர் தெய்வச்சிலையார் வரலாற்றை, ஈரோடு புலவர் இராசு, கல்வெட்டுச் சான்றுகளைக் கொண்டு விரிவாக ஆராய்ந்து பல நல்ல செய்திகளை வெளியிட்டுள்ளார் (கொங்கு -1975, ஏப்ரல் மே சூன் இதழ்கள்). அவர் ஆராய்ச்சி முடிவின்படி தெய்வச்சிலையார், முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (1268-1310) காலத்தில் திருநெல்வேலிப் பகுதியில் வாழ்ந்தவர்.

இந்தப் பாண்டிய மன்னன் காலத்தில்தான் மார்க்கோபோலே தமிழகத்திற்கு வந்தார். இம் மன்னனுக்குப் பின், தமிழ் மண்ணில் மாலிக்காபூர் படையெடுப்பு நிகழ்ந்தது.

தெய்வச்சிலையார் உரையில், பாண்டி நாடு மதுரை பாண்டியர் பற்றிய பல மேற்கோள்கள் வருகின்றன.

திருமால் பெயர் தாங்கிய இவரை வைணவர் என்று கருத உரையில் சான்றுகள் உள்ளன:

"நிவந்தோங்கு உயர்கொடிச் சேவலாய்-சொல்லுவோர் குறிப்பு மாயவனை நோக்கலில் கருடனாயிற்று; வலம்புரித் தடக்கை மாஅல்; திருமகளோ அல்லள்" போன்ற இடங்களைக் குறிப்பிடலாம். இருப்பினும் இவர், சைவ சமயத்தைப் போற்றி உரைக்கின்றார்.

'மன்னாப் பொருளும் அன்ன இயற்றே'- என்பதன் உரையில், "வேதாகமத் துணிவு ஒருவர்க்கு உணர்த்துமிடத்து, உலகும் உயிரும், பாசமும், அனாதி, பதியும் பசுவும் பாசமும் அனாதி என வரும். உலகும் உயிரும் பரமும் பசுவும் பொருந்தும் பொருள் ஆனவாறும், பாசமும் பதியும் இவற்றோடு பொருந்தாத பொருள் ஆனவாறும் காண்க' என்று சைவசிந்தாந்தக் கருத்தை எழுதுகின்றார்.

'மந்திரப் பொருள்வயின் ஆஅ குநனவும்' என்பதற்கு உதாரணமாக, 'நமசிவாய' என்னும் ஐந்து எழுத்தைக் குறிப்பால் காட்டும் பாடலைக் காட்டுகின்றார்.

வடமொழி பயின்ற அந்தணர்: இவர் வடமொழி பயின்ற அந்தணராக இருக்கலாம். தலைமை பற்றிய வழக்கிற்குப் 'பார்ப்பார் வேதம்' என்று உதாரணம் காட்டுகின்றார். சொல் என்பதற்கு வேதம் என்று பொருள் உரைக்கின்றார். இந்நூல் செய்தான் வைதிக முனிவன் என்கிறார்

பாணிணி கொள்கையும் (87, 410), வடமொழி இலக்கணக் கருத்தையும்(2, 66, 68, 81, 292) உரைகளில் குறிக்கின்றார்.

பஞ்ச திராவிடம், லோபம், பரிணாமம், வாக்கியம், கோமூத்திரம்

போன்ற சொற்களை வழங்குகின்றார். எனவே இவரை வடமொழி பயின்ற அந்தணர் என்னலாம்.

**உரையின் சிறப்பயில்புகள்**

தெய்வச்சிலையார் ஒவ்வோர் இயலின் இறுதியிலும் உரையினது அளவை எழுத்துகளால் குறிப்பிடுகின்றார். கிளவியாக்கத்தின் இறுதியில், 'இவ்வோத்தினுள் சூத்திரமும் உள்பட்ட உரையினது அளவு கிரந்த வகையான் ஐந்நூற்று நாற்பது', என்கிறார். இவ்வாறே ஏனைய இயல்களுக்கும் அளவு கூறுகின்றார்.

"பெண்மை அடுத்த மகன் என் கிளவி"க்கு விளக்கம் எழுதுகையில் "விளையாடு பருவத்துப் பெண் மகளைப் பெண் மகன் என்றல் பண்டையோர் வழக்கு" (159), என்கின்றார். சேனாவரையர் இச் சொல் வழங்குமிடத்தைக் குறிப்பிடுகின்றார். தெய்வச் சிலையார் காலத்தில் அச் சொல்வழக்கு வீழ்ந்ததால் இவ்வாறு கூறுகின்றார். இதனால் சேனாவரையர்க்கும் தெய்வச் சிலையார்க்கும் உள்ள கால இடைவெளி புலப்படும்.

எச்சப் பெயர் என்பது, பெயரெச்சம் என மொழி மாறி நின்றது என்பது இவர் கருத்தாகும் (201).

சாலும் என்ற சொல்லை இவர் போதும் என்ற பொருளில் வழங்குகின்றார். (இச்சொல் தெலுங்கில் அப்பொருளில் வழங்குகின்றது)

"யானும் என் எஃகமும் சாறும், நீயும் நின் படைக்

கலமும் சாறீர், அவனும் அவன் படைக்கலமும் சாலும்" என்று உதாரணங் கூறுகின்றார் (41).

**புதிய விளக்கம்**

‘செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்’ (12) என்ற சூத்திரத்திற்கு இவர் கூறும் விளக்கம் புதியது; மற்ற உரையாசிரியர்கள் கூறாதது.

“செப்பு நான்கு வகைப்படும்; துணிந்து கூறல், கூறிட்டு மொழிதல்,

வினாவி விடுத்தல், வாய் வாளாதிருத்தல் என.

துணிந்த கூறல்-தோன்றியது கெடுமோ என்ற வழி, கெடும் என்றல்.

கூறிட்டு மொழிதல்-செத்தவன் பிறப்பானோ என்ற வழி, பற்றறற் துறந்தானோ பிறனோ என்றல்.

வினாவி விடுத்தல் - முட்டை மூத்ததோ பனை மூத்ததோ என்ற வழி எம் முட்டைக்கு எப்பனை என்றல்.

வாய் வாளாமை-ஆகாயப்பூ நன்றோ தீதோ என்றார்க்கு உரையாடாமை.”

வேற்றுமை என்பதற்கு இவர் பின்வருமாறு விளக்கம் கூறிப் பொருள் உரைக்கின்றார்:

“வேற்றுமை: பொருள்களை வேறுபடுத்தினமையால் பெற்ற பெயர். என்னை வேறுபடுத்தியவாறு எனின், ஒரு பொருளை ஒருகால் வினைமுத லாக்கியும், ஒருகால் செயப்படுபொருள் ஆக்கியும் ஒருகால் கருவியாக்கியும் ஒருகால் ஏற்பது ஆக்கியும் ஒருகால் நீங்க நிற்பது ஆக்கியும், ஒருகால் உடையது ஆக்கியும் இவ்வாறு வேறுபடுத்தது என்க” (60).

சிறந்த எடுத்துக்காட்டுகள்

இவர் பல இனிய எடுத்துக் காட்டுகளை மிகப் பொருத்தமாக அமைத்துள்ளார். முத்தொள்ளாயிரம் வெண்பாக்களைப் போன்ற நயமான பல வெண்பாக்கள் இவர் உரையில் இடம் பெற்றுள்ளன.

வேற்றுமை மயங்கியலில் (20), சிலப்பதிகாரக் கதை நிகழ்ச்சிகளை மிகச் சுருக்கமாகக் கூறும் வெண்பா ஒன்றைக் காட்டுகின்றார்;

காதலியைக் கொண்டு கவுந்தி யொடுகூடி

மாதரிக்குக் காட்டி மனையின் அகன்றுபோய்க்

கோதில் இறைவனது கூடற்கண் கோவலன்சென்று

ஏதம் உறுதல் வினை.

**உரைநடை இயல்பு**

தெய்வச்சிலையார் உரைநடை உயிரோட்ட முடையதாய், எளியதாய் உள்ளது. கீழே இவரது உரையின் ஒரு பகுதி தரப்படுகின்றது:

"காலம் என்பது முன்னும் பின்னும் நடுவும் ஆகி என்றும் உள்ளதோர் பொருள். உலகம் என்பது மேலும், கீழும் நடுவும் ஆகி, எல்லா உயிருக்கும் தோன்றுதற்கு இடமாகிய பொருள். உயிர் என்பது சீவன். உடம்பு என்பது மனம் புத்தி ஆங்காரமும் பூததன்மாத்திரையுமாகி வினையினாற் கட்டப்பட்டு எல்லாப் பிறப்பிற்கும் உள்ளாகி நிற்பதோர் நுண்ணிய உடம்பு. இதனை மூலப்பகுதி எனினும் ஆம். பால்வரை தெய்வம் என்பது ஆணும் பெண்ணும் அலியும் ஆகிய நிலைமையை வரைந்து நிற்கும் பரம்பொருள். வினை என்பது ஊழ். பூதம் என்பது நிலம் நீர் தீ வளி ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதம். ஞாயிறு என்பது தீத்திரளாய் உலகிற்கு அருள் செய்வது. சொல் என்பது எழுத்தினான் இயன்று பொருள் உணர்த்துவது. அச்சொல்லின் இயன்ற மந்திரம் விடம் முதலாயின தீர்த்தலின் தெய்வம் ஆயிற்று" (55).

அரிய செய்தி

இவரது உரையில் அரிய வரலாற்றுச் செய்தி ஒன்று கிடைக்கின்றது. கல்வெட்டுகள் குறிக்கும் கொல்லம் ஆண்டு பற்றித் தெரிந்து கொள்ள அது உதவுகின்றது.

இடைக் காலத்தில், சேர நாட்டின் ஒரு பகுதியாக இருந்த பழைய கொல்லம், கடல்கோளால் அழிந்தது. பிறகு கடலின் பெயர்ச்சியால் புதிய நிலப் பகுதி தோன்றியது. புதுநிலப் பகுதிக்கு, மக்கள் கொல்லம் என்றே பெயரிட்டனர், புதிய கொல்லம் பகுதியில் மக்கள் குடியேறிய காலம் முதல், கொல்லம் ஆண்டு கணக்கிடப்பட்டு வருகின்றது.

இச் செய்தியைத் தெய்வச்சிலையார்,

கூபகமும் கொல்லமும் கடல்கொள்ளப்

படுதலின் குமரியாற்றிற்கு வடகரைக்கண்

அப்பெயரானே கொல்லம் எனக் குடியேற்றினார்

என்று கூறுகின்றார்.

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம் என்பதற்கு இவர் தந்துள்ள விளக்கம், இன்றைய மொழியியல் அறிஞர்களைப் பெரிதும் மகிழ்விக்கின்றது. உரையாசிரியர்களில் சிலர் சோழ நாடே

செந்தமிழ் நிலம் என்பர். வேறு சிலர் பாண்டி நாடே என்பர். ஆனால் தெய்வச்சிலையார் வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதுமே செந்தமிழ் வழங்கும் நிலம் என்று கூறி விளக்குகின்றார்.

**கல்லாடர்**

கல்லாடர் அல்லது கல்லாடனார் என்ற பெயருடன் பண்டைக் காலத்தில் புலவர் சிலர் இருந்தனர். அவர்களுள் ஒருவர் சொல்லதிகாரத்திற்கு உரைகண்ட கல்லாடர். கல்லாடம் என்பது ஊரின் பெயர். அவ்வூரில் சிவபெருமான் கல்லாடர் எனப்படுகின்றார். அப் பெயரை மக்களுக்கு இட்டு வழங்கினர்.*

சொல்லதிகாரத்திற்கு உரை இயற்றியவர் அனைவர்க்கும் பிற்பட்டவர்

கல்லாடர். இவர் உரை, முன்னோர் உரைகளிலிருந்து தமக்குப் பிடித்தவற்றை

எல்லாம் ஒருங்கு சேர்த்து எழுதப்பட்ட உரையாக உள்ளது. இளம்பூரணர், சேனாவரையர் ஆகிய இருவரும் காட்டிய உதாரணங்களைக் கல்லாடர் அப்படியே மேற்கொள்கின்றார். “பெயர் நிலைக் கிளவி” என்னும் சூத்திர உரை நச்சினார்க்கினியர் உரையின் எதிரொலியாகவே உள்ளது. பரிமேலழகர் “ஒன்றாக நல்லது” (323) என்னும் குறள் உரையில் கூறிய “முற்கூறியதிற் பிற்கூறியது வலியுடைத்து ஆகலின்” என்னும் தொடரைக் கல்லாடர் 159 நூற்பாவுரையில் மேற்கொள்ளுகின்றார்.

கல்லாடர் உரையைப் பிரயோக விவேக நூலாசிரியர் எடுத்துக் காட்டுகின்றார்: “சோற்றையட்டான் என, செய்வான் கருத்துள் வழிச் செயப்படுபொருள் ஆதலும், குழந்தை சோற்றைக் குழைத்தான் எனக் கருத்தில் வழியாதலும் என இரு வகைய” என்ற கல்லாடரின் விளக்கம் பிரயோக விவேகத்தில் (பிரயோக - 12 உரை) உள்ளது. “மக்கள் சுட்டு என்பதனைக் கல்லாடனாரும் பின்மொழியாகு பெயராய் நின்ற இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்பர்” என்று பிரயோக விவேக நூலார் குறிப்பிடுகின்றார் (பிரயோக-11 உரை)

எனவே, கல்லாடர் நச்சினார்க்கினியர்க்குப் பின்னும் பிரயோக விவேகநூலார்க்கு முன்னும் வாழ்ந்தவர் என்னலாம். இவரது காலம் 15, 16-ஆம் நூற்றாண்டு காலம். கல்லாடர் உரை, இடையியல் (13 சூத்திரங்கள்) வரை உள்ளது.

இயல்களின் முறைவைப்பை விரிவாக இவர் ஆராய்ந்து கூறுகின்றார். வேற்றுமை என்பதை, இலக்கண ஆராய்ச்சியுடன் தெளிவாக விளக்குகின்றார்.

கல்லாடனார் தயக்கத்தோடும் ஐயத்தோடும் பல இடங்களில் உரைகண்டுள்ளார். 210ஆம் சூத்திரத்திற்கு உரைகூறி, ‘இரண்டனுள் நல்லது தெரிந்து உரைக்க’ என்று மொழிகின்றார். சில சூத்திரங்களின் பொருளை எழுதி ‘என்பது போலும்’ என்று கூறி முடிக்கின்றார். 222 ஆம்

சூத்திரவுரையில், ‘பிறிது காரணம் உண்டாயினும் அறிந்திலம்” என்று எழுகின்றார்.

கல்லாடர் உரைக்கென்று சில தனிச் சிறப்பியல்புகள் இருப்பினும், செல்வாக்குடன் புலமை உலகில் இது பரவவில்லை.

**ஐந்திலக்கண நூல்களும் உரைகளும்**

பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியம், எழுத்து சொல்பொருள் என்று மூன்று அதிகாரங்களில் தமிழ் இலக்கணத்தை ஆராய்கின்றது. பொருளதிகாரத்தில் கூறப்பட்ட இலக்கணங்கள் பிற்காலத்தில் பலவேறு வகையாகப் பிரிந்து தனி நூல்கள் தோன்றின. பொருள் இலக்கணம், அகம் புறம் யாப்பு அணி எனத் தனித் தனியாகப் பிரிந்தது.

தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் கூறியுள்ள அகத்திணையியல்,களவியல் கற்பியல் பொருளியல் ஆகியவை பிற்காலத்தில் அகப்பொருள் இலக்கணம் ஆயின. புறத்திணை இயல் புறப்பொருள் இலக்கணமாயிற்று. உவம இயல், அணி இலக்கணமாயிற்று. செய்யுளியல், யாப்பிலக்கணமாக வடிவம் கொண்டது. மெய்ப்பாட்டியல் வளர்ச்சியின்றி, போதிய கருத்து விளக்கமின்றி அணி நூலில் அடைக்கலம் புகுந்தது. மரபியல் மறக்கப்பட்டது. நிகண்டு நூல்கள் மரபியல் கூறும் சில செய்தியைச் சேர்த்துக் கொண்டன.

தொல்காப்பியர் கூறிய எழுத்து சொல் பொருள் என்ற மூவகை இலக்கணம் காலப்போக்கில் இவ்வாறு ஐவகை இலக்கணமாயின.

ஐந்திலக்கணப் புலமை பெறுவதைப் புலவர்கள் பெரும் பேறாகக் கருதினர். குமரகுருரர்,

எழுத்து முதலாம்ஐந்து இலக்கணம் தோய்ந்து

பழுத்த தமிழ்ப்புலமை பாவித்து-ஒழுக்கமுடன்

கடிஏற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு

அடியேற்கு முன்நின்று அருள்

-கந்தர் கலி வெண்பா

என்று இறைவனை வேண்டுகின்றார்.

இலக்கணம் ஐந்தாகப் பிரிந்தாலும் ஒவ்வோர் இலக்கணம் பற்றிய நூல்களே முதலில் தோன்றியுள்ளன. இறையனார் அகப்பொருள், நம்பியகப்பொருள் விளக்கம் என்பவை அகப்பொருள் பற்றியும், புறப்பொருள் வெண்பா மாலை புறப்பொருள் பற்றியும், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்பன யாப்பிலக்கணம் பற்றியும், தண்டியலங்காரம் அணி பற்றியும் தோன்றின.

நேமிநாதம், நன்னூல் இரண்டும் எழுத்து, சொல் பற்றிய இலக்கண நூல்களாகும். நன்னூல் ஐந்திலக்கணமும் கூறியது என்ற கருத்தும் நிலவுகின்றது. மயிலைநாதர் உரையில் அதற்குச் சான்றுகள் உள்ளன. சங்கரநமச்சிவாயர், நன்னூல் சிறப்புப்பாயிரவுரையில், “நுதலிய பொருள் அரும் பொருள் ஐந்து என உணர்த்தினமையின், இந்நூலுள் கூறிய பொருள் யாப்பு அணி என்னும் மூன்று அதிகாரங்களும் அக் காலத்து உள்ளன போலும்” என்று உரைக்கின்றார். ஆதலின் காலத்திற்கு அவை முன்பேமறைந்திருத்தல் வேண்டும்.

தமிழ் இலக்கணத்தை ஐவகையாக்கி ஆராய்ந்து விளக்கிய முதல் நூல்வீரசோழியம். அதன் உரையாசிரியர் பெருந்தேவனாரைப் பற்றி அறிந்திருப்போம்.

பதினேழாம் நூற்றாண்டிற்குப் பின்னர் ஐந்திலக்கணங் கூறும் இலக்கண நூல்கள் சில தோன்றின. இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், சாமி நாதம் என்ற இலக்கண நூல்கள் ஐந்திலக்கணமும் கூறுபவை.

**நூலும் உரையும்**

இலக்கண விளக்கம்: இலக்கண விளக்கம் என்பது எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்ற ஐந்தையும் உணர்த்தும் இலக்கண நூல்.

இதனைக் குட்டித் தொல்காப்பியம் என்பர். இந்நூலின் ஆசிரியர் வைத்தியநாத தேசிகர். இவர் பதினேழாம் நூற்றாண்டில் திருவாரூரில் பிறந்தார். இவர் தந்தையார் வன்மீகநாத தேசிகர். வைத்தியநாத தேசிகர் அகோர முனிவரிடம் கல்வி கற்று வடமொழி, தமிழ்\ ஆகிய இரு மொழிகளிலும் புலமை பெற்றார்.

இவர் கயத்தாற்றில், திருமலை நாயக்கரின் ஆணையாளர்களில் ஒருவரான திருவேங்கடநாத ஐயரின் மக்களுக்குக் கல்வி புகட்டும் ஆசிரியராகப் பணிபுரிந்தார். தம் மாணவர்களுக்கு இலக்கணங் கூற, தொல்காப்பியம், நன்னூல், தண்டியலங்காரம் முதலிய இலக்கணங்களையும் உரைகளையும் கற்பிக்கும்போது தமக்குப் பிடித்தமான பல கருத்துகளை ஒன்று சேர்ந்து 'இலக்கண விளக்கம்' என்று ஒரு நூல் செய்தார். இந்நூல் ஐந்திலக்கணம் கூறும் நூலாக அமைந்தது.

இலக்கண விளக்கத்தில் இவர் முன்னோர் கருத்துகள் சிலவற்றை மாற்றிவிட்டார். "பழையன கழிதலும்" என்ற நன்னூலார் சூத்திரத்தை,

பழையன கழிதலும் புதியன புகுத்தலும்

வழுவல கால வகையி னான

என்று மாற்றியுள்ளார்

இவர் தம் நூலுக்குத் தாமே உரை இயற்றினார். இச் செய்தியைச் சாமிநாத தேசிகர் தம் இலக்கணக்கொத்து நூலில்,

என்கண் காணத் திருவா ரூரில்

சிறப்புற் றிலகும் வைத்திய நாதன்

இலக்கண விளக்கம் வகுத்துரை எழுதினான

என்று குறிப்பிடுகின்றார்.

தொன்னூல் விளக்கத்தை இயற்றியவர் வீரமாமுனிவர் (1680-1747). முத்துவீரியத்தை இயற்றியவர் முத்து வீரமுனிவர். தொன்னூல் விளக்கம் முத்துவீரியம் ஆகிய இரு நூல்களே அன்றிச் சாமிநாதம் என்னும் இலக்கண

நூலும் உள்ளது. சாமிநாதம், அந்நூலில் உரை ஆகியவை பற்றி ச. வையாபுரி பிள்ளை பின் வருமாறு கூறுகின்றார்:

“பொதிகை நிகண்டின் ஆசிரியராகிய சாமிநாத கவிராயரைக் குறித்து ஒரு சில செய்திகளே அறியக்கிடக்கின்றன. திருநெல்வேலி ஜில்லாவைச் சார்ந்த அம்பா சமுத்திரம் தாலுக்காவில் கல்லிடை நகரில் இவர் வாழ்ந்தவர். இந் நிகண்டு

நூலேயன்றி ஐவகை இலக்கணங்களையும் உணர்த்தும் சாமிநாதம் எனப் பெயரிய நூலொன்றும் இவர் இயற்றி இருக்கின்றார். இந் நூல் துறைசை சுப்பிரமணிய தேசிகரின் ஆணைப்படி இயற்றப்பட்டது என இந்நூற்பாயிரம் உணர்த்துகின்றது. சாமிநாதத்திற்கு விருத்தியுரை ஒன்றும் உள்ளது. ...இது சுமார் கொல்லம் 950-ல் இயற்றப்பட்டது ஆகலாம் எனத்துணியலாம்”

(இலக்கிய மணி மாலை (1954) பக்கம் 218, 219)

**ஐந்திற்கும் மேலாக**

ஐந்திலக்கணங்களுக்குப் பின்னர், இலக்கணம் விரிவடைந்தது. தொல்காப்பியர், உயிரியல் இடையியல் மரபியல் ஆகியவற்றில் கூறியுள்ள சொற்பொருள் விளக்கம், நிகண்டுகளாக - உரிச்சொற்பனுவலாக - அகராதியாக உருவெடுத்து வளர்ந்தன.

பெண்களின் உறுப்பிற்கும், சிறுவர்களுக்கும் கூற வேண்டிய உவமைக்குரிய பொருள்களைப் பட்டியல் போட்டுக் கூறுகின்ற உவமான சங்கிரக நூல்கள் தோன்றின.

பாட்டியல் நூல்கள் கூறுகின்ற 96 வகையான பிரபந்தங்களின் இலக்கணத்தைத் தொகுத்து, பிரபந்த தீபிகை என்ற நூலை, வேம்பத்தூர் பாப்புவையர் என்ற முத்து வேங்கடசுப்பையர் இயற்றினார்.

பிற்காலப் பா வகைகளில் ஒன்று, வண்ணப்பா. வண்ணச் சரபம் திருப்புகழ் தண்டபாணி சுவாமிகள் ‘வண்ணத்தியல்பு’ என்று நூலில்

வண்ணப்பாக்களுக்கு இலக்கணம் எழுதினார். இந்த நூல், திருக்கோயில் இதழில் உரையுடன் வெளிவந்துள்ளது.

விருத்தப்பாக்களின் வகைகளை விளக்குகின்ற 182 நூற்பாக்கள் (12 படலம்) அடங்கிய நூலை, சென்னை டி.வீரபத்திர முதலியார் (1855-1910) எழுதினார்.

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தண்டபாணி சாமி 'அறுவகை இலக்கணம்' என்ற நூலை இயற்றினார். ஆறாவதாக, புலமை இலக்கணம் செய்தார். இதில் 319 நூற்பாக்கள் உள்ளன.

காரிரத்தினக் கவிராயர்

காரிரத்தினக் கவிராயர் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவப் புலவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆழ்வார் திருநகரிக்கு அருகில் உள்ள தென் திருப்பரையில் வேளாண் மரபில் பிறந்தவர். காரிரத்தினம் என்பது நம்மாழ்வாரின் சிறப்புப் பெயர். வைணவராகிய இக் கவிராயர் நம்மாழ்வாரின் பெயரைப் பெற்றார். இவர், ஆழ்வார் திருநகரியில் இருந்தவரும், மாறன் அலங்காரம் முதலான நூல்களை இயற்றியவருமான திருக்குருகைப் பெருமாள் கவிராயரிடம் கல்வி பயின்றார்.

இவர், திருக்குறள் பரிமேலழகர் உரைக்கு விளக்கமாக 'நுண் பொருள் மாலை' என்ற ஒரு நூலை இயற்றியுள்ளார். அவ் விளக்கவுரை செந்தமிழில் (6-10) வெளிவந்தது. தொல்காப்பிய நுண்பொருள் மாலை என்ற உரை விளக்கம் எழுதியதாகக்கூறுவர். அவ்வுரை இன்று கிடைக்கவில்லை. திருக்குருகைப் பெருமாள் கவிராயர் இயற்றிய மாறன் அலங்கார நூலுக்கு உரை இயற்றினார்.

நுண்பொருள் மாலை

பரிமேலழகர் உரைக்கு விளக்கமாக இயற்றப்பட்ட இவ் விளக்கவுரை பல சிறப்புக்களை உடையது. பரிமேலழகர் உரையில் விளக்கம் காண வேண்டி பகுதிக்கும், பலமுறை நுணுகிக் கற்றுத் தெளிய வேண்டிய

பகுதிக்கும் அரிய இலக்கணக் குறிப்புக்கும் விளக்கம் எழுதுகின்றார் காரிரத்தினக் கவிராயர்.

முதற் குறளின், பரிமேலழகர் உரைக்கு இவர் தரும் விளக்கம் மிகவும்நயமானது. ஆகுபெயர் அன்மொழித் தொகை ஆராய்ச்சியில் பரிமேலழகர் உள்ளக் கிடக்கையை அறிய .ஊழிற் பெருவலி (380) என்னும் குறளின்விளக்கவுரை உதவுகின்றது. பரிபாடலுக்குப் பரிமேலழகர் உரை எழுதினார் என்பதை 216-ஆம் குறள் உரையில், "பரிபாட்டினுள் 'மழையிருஞ்சூல்' என்பதனை முன்பின்னாகத் தொக்க இரண்டாம் வேற்றுமைத் தொகை என்றார் இவ்வுரையாசிரியர்" என்று இவர் தெளிவுபடுத்துகின்றார்.

மாறன் அலங்காரவுரை

மாறன் அலங்காரம், நம்மாழ்வாரைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பெற்ற மேற்கோள் பாடல்களுடன் அமைந்த அணி இலக்கண நூல். இந்நூல் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல், எச்சவியல் என்னும் நான்கு பகுதிகளை உடையது. முதல் இயல் வெண்பாவிலும் ஏனையவை ஆசிரியப்பாவிலும் அமைந்துள்ளன. இந்நூலை இயற்றியவர், திருக்குருகைப்பெருமாள் கவிராயர்; வைணவர்; பதினேழாம் நூற்றாண்டினர். திருநெல்வேலியில் ஆழ்வார் திருநகரியில்

வாழ்ந்தவர். இவரது மாணவராகிய காரிரத்தினக் கவிராயரே மாறன் அலங்காரத்திற்கு உரை இயற்றினார்.

இந் நூலிலுள்ள உதாரணச் செய்யுள்களை நூலாசிரியரே இயற்றினார். உதாரணம் தேடும் முயற்சி உரையாசிரியர்க்கு இல்லாமல் போனது. 'இந்நூலாசிரியர் இவ்வுதாரணம் யாண்டுப் பெற்றாரோ எனில்,' என்று உரையாசிரியர் கூறி, உதாரணச் செய்யுளுக்குப் பொழிப்புரை எழுதுகின்றார். சில பாடல்களுக்குக் குறிப்புரை எழுதுகின்றார். பாடல்களுக்குத் திணை,

துறை கூறி, அணி இலக்கணத்தோடு பொருத்திக் காட்டுகின்றார்.

உதாரணச் செய்யுள்கள் கற்பனைக் களஞ்சியமாய் - சொற்சுவை பொருட்சுவை நிரம்பியவையாய் உள்ளன. பொருள் விளங்குவது சற்றுக் கடினமாகவே உள்ளது. உதாரணச் செய்யுள் ஒன்றை இங்கே காண்போம்:

முற்ற உணர்த்தும் முதுகாப் பியம்புணர்ப்பான்
உற்றவர்தம் கண்போன்று உறங்காவாம்-இற்பிரிந்தால்
நல்லியலார் வந்தனைசெய் நாவீறன் மால்வரைமேல்
மெல்லியலார் இன்ப விழி

என்ற வெண்பா பொருளணியியலில் ஏகவுவமைக்கு உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது.

உரையின்றேல் நூலின் பெருமையும், உதாரணச் செய்யுள்களின் பொருளும் வெளிப்பட்டிரா. நூலாசிரியரின் மாணவர் இவ்வுரையாசிரியர் ஆதலின், "இக் குறிப்புவமை இந்நூலுடையார் யாண்டுப் பெற்றார் எனின், நலமிகு புலவர், "உலகம் உவப்ப...அவிரொளி" எனக் கூறிய முருகாற்றுப்படுத்ததுள் பெற்றாராம்" என்று நூலாசிரியரின் உள்ளம் அறிந்து கூறுகின்றார் (99).

இவ்வுரையாசிரியரின் உரைத் திறனை அறிந்து, 'கருகாத செஞ்சொல் உரை விரித்தான் கற்பகாடவிபோல் வருகாரி ரத்ன கவிராயன்' என்று,

சிறப்புப்பாயிரம் புகழ்கின்றது.

16. உவமான சங்கிரக உரை

அணி இலக்கண நூல்கள் அணி வகைகளைக் கூறி, அவற்றின் இயல்புகளை விளக்கி, ஏற்ற உதாரணப் பாடல்களையும் காட்டி விளக்குகின்றன. பாட்டியல் நூல்கள், பிள்ளைத் தமிழ் நூல்களில் இன்ன இன்ன பொருள்களைக் குழந்தைகளுக்கு உவமை கூறவேண்டும் என்று விதிக்கின்றன. உவமான சங்கிரக நூல்கள் பெண்ணைக் கேசாதி பாதமாக வருணிக்கும்போது, எந்த எந்தப் பொருளை உவமையாகக் கூற வேண்டும் என்று பட்டியல் தருகின்றன.

தமிழில் மூன்று உவமான சங்கிரக நூல்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று ஆறுமுக நாவலரால் இரத்தினச் சுருக்கத்துடன் சேர்த்து வெளியிட்ப்பட்டது. மற்றொன்று கொங்கு நாட்டுப் புலவர் இயற்றிய ஆசிரிய விருத்தத்தால் ஆன நூல். மூன்றாவது நூல் செந்தமிழ் பதினான்காம் தொகுதியுள் (பக்கம் 161-165) வெளியிடப்பட்டுள்ளது.

இம் மூன்று நூல்களுள் ஆறுமுக நாவலர் வெளியிட்ட உவமானசங்கிரகத்தை இயற்றியவர் ஸ்ரீவில்லிபுத்தூர்த் திரு வேங்கடையர் என்றுகுறிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு குறித்திருப்பது தவறு என்றும், அதனைஇயற்றியவர், திருமேனி குருகை இரத்தின கவிராயர் என்பவரே என்றும் தக்க சான்றுகளுடன் நிறுவியுள்ளனர். செந்தமிழ் பதினான்காம் தொகுதியுள் (பக். 16) சடகோப ராமாநுசாசார்யன் தமக்குக் கிடைத்த உவமான சங்கிரகப் பழைய ஏட்டில் பதினேழாம் செய்யுளாகக் கீழ்வரும் பாடல்காணப்பட்டதாகக் குறிப்பிடுகின்றார்:

பார்புகழ் குருகை யூரன்

பைங்குவ ளைத்தார் மார்பன்

நாரியர் வேளாம் ரத்ந

நாற்கவிச் சிங்கம் எங்கோன்

வார்முலை மடவார் தேக

வன்னனை அனைத்தும் தேர்ந்து

சீர்புனை தமிழால் மாறன்

திருவடி தொழுது செய்தான்.

இப்பாடல் 'திருமேனி குருகை இரத்தின கவிராயர்' உவமான சங்கிரகம் செய்தார் என்று குறிப்பிடுகின்றது.

இந்த உவமான சங்கிரகத்தினுள் உள்ள பதினாறு வெண்பாக்கள் அந்தாதியாக உள்ளன. முதல் வெண்பா காப்புச் செய்யுள் ஏனைய பதினைந்து வெண்பாக்கள் கேசாதி பாத வருணனைக்குரிய உவமைப் பொருள்களைக் கூறுகின்றன.

இந்நூலுக்குக் காஞ்சிபுரம் இராம யோகிகள் சிறந்த உரை இயற்றியுள்ளார். இவ்வுரை 1914ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. வெண்பாவிற்குப் பதவுரை இயற்றிய பின்னர் விசேடவுரையும் தருகின்றது. இந்நூலுடன் இவர் இரத்தினச் சுருக்கம் என்ற நூலுக்கும் உரை எழுதிச் சேர்த்துள்ளார்.

**அணிநூல் உரைகள்**

'தொனிவிளக்கு' என்ற நூல் வடமொழியில் உள்ள 'த்வந்யாலோக' என்னும் நூலின் மொழிபெயர்ப்பாகும். அந்நூல் வடமொழியில் அலங்கார இலக்கண நூல்களுள் சிறந்ததாகப் போற்றப்படுகின்றது. அது ஒன்பதாம் நூற்றாண்டில், காஷ்மீரத்தில், அவந்தி வர்மன் அவையில் இருந்த புலவர்களுள் ஒருவரான ஆனந்த வர்த்தனரால் இயற்றப்பெற்றது.

'த்வந்யாலோக' என்ற வடமொழி அணியிலக்கண நூலைத் தமிழில்' தொனி விளக்கு' என்ற பெயரில் பின்னங்குடி சா. சுப்பிரமணிய சாஸ்திரி நூற்பாவால் மொழி பெயர்த்து (1944), உரையும் தாமே இயற்றி வெளியிட்டார். இலக்கணத்திற்குத் தேவையான மேற்கோள் பாடல்களை வடமொழியிலிருந்து மொழிபெயர்த்துக் காட்டியுள்ளார்.

குவலயானந்தம் என்னும் அணி நூலை மாணிக்கவாசகர் என்பவர் (19ஆம் நூற்.) இயற்றியுள்ளார்.

மு. இராகவ ஐயங்காரின் தந்தையார் முத்துச்சாமி ஐயங்கார். சந்திரலோகத்தை வடமொழியிலிருந்து ஆசிரியப் பாவால் மொழிபெயர்த்துள்ளார். இது உரையுடன் மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாக வந்துள்ளது.

## நன்னூல் முதலான இலக்கண உரைகளுக்கு இடையே உள்ள பொதுத்தன்மைகள்

### நன்னூலாரும் சேனாவரையரும்

சேனாவரையர் நன்னூலார் கருத்துக்களைத் தம் உரைகளில் ஆங்காங்கே சுட்டிச் செல்லுகின்றார்.

'புதியன தோன்றினாற் போலப் பழையன கெடுவனவும் உள எனக் கொள்க' (452) என்று சேனாவரையர் கூறுவது,

பழையன கழிதலும் புதியன புகுதலும்

வழுவல கால வகையி னானே (நன்.-462)

என்ற நன்னூல் சூத்திரத்தை நினைவூட்டுகின்றது.

202 ஆம் சூத்திர உரையில், உண்கின்றனம், உண்கின்றாம் என்பனவற்றை உதாரணங் காட்டுகின்றார். மற்றோர் சூத்திர உரையில் (229), உண்பாக்கு, வேபாக்கு ஆகிய சொற்களைச் சுட்டுகின்றார். 215 ஆம் சூத்திர உரையில், "அளபெடை தன்னியல்பு மாத்திரையில் மிக்கு, நான்கும் ஐந்தும் மாத்திரை பெற்று நிற்கும்" என்று கூறுகின்றார். இவையாவும் நன்னூலார் கருத்துகளாகும்.

### பேச்சு வழக்கும் உலகியலும்

சேனாவரையர், தம் காலத்து மக்கள் பேசிய முறையை உலகியலோடு பல இடங்களில் குறிப்பிடுகின்றார். அவை இவர் மக்களுடன் நெருங்கிப்

பழகியவர் என்பதையும், உலகத்தோடு ஒட்ட ஒழுகியவர் என்பதையும் அறிவிக்கும்.

கிளவியாக்கத்துள், "ஆக்கம்-அமைத்துக்கோடல்; நொய்யும் நுறுங்கும் களைந்து அரிசி அமைத்தாரை அரிசியாக்கினார் என்ப ஆகலின்" என்று எழுதுகின்றார் (சொல்.1).

'மற்றையது' என்னும் சொல், இனம்குறிக்கும் என்பதற்கு, "ஆடை கொணர்ந்தவழி, அவ்வாடை வேண்டாதான் மற்றையது கொணா என்னும்" என்று பேச்சு வழக்கினைக் குறிப்பிடுகின்றார் (264).

இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்

விரைந்த பொருள என்மனார் புலவர்-241

என்ற சூத்திரத்திற்கு, "சோறு பாணித்தவழி உண்ணா திருந்தானைப் போகல் வேண்டும் குறியுடையான் ஒருவன், 'இன்னும் உண்டிலையோ?' என்றவழி, 'உண்டேன், போந்தேன்!' என்னும்" என்று மக்கள் பேச்சினை எடுத்துக்காட்டுகின்றார். வினாவாக வரும் வினைச்சொல், எதிர்மறைப் பொருளில் வரும் என்பதற்கு, "கதத்தானாக- களியானாக ஒருவன் தெருளாது வைதான்; அவன் தெருண்டக்கால், வையப்பட்டான் 'நீ என்னை வைதாய்!' என்றவழி, தான் வைததை உணராமையான் 'வைதேனே?' என்னும்" என்று உதாரணம் காட்டுகின்றார். (244).

காலம் மயங்கி வருவதற்கு, 'நாளை அவன் வாளொடு வெகுண்டு வந்தான்; பின் நீ என் செய்குவை எனவரும்' என்பதைக் காட்டுகின்றார் (247).

குறிப்பால் உணர்த்தும் பொருளுக்கு "அவல் அவல் என்கின்றன நெல்; மழை மழை என்கின்றன பைங்கூழ்" என்று எடுத்துக்காட்டுகள் தருகின்றார்.

அவர் காலத்தில் வாய்மொழி வாயிலாக வழங்கிவந்த நாட்டுக்கதை ஒன்றினைக் கூறுகின்றார். 'தொன்னெறி மொழிவயின் ஆஅகுநவும்' (449)என்பதற்கு, 'முது சொல்லாகிய செய்யுள் வேறுபாட்டின்கண் இயைபில்லன இயைந்தனவாய் வருவனவும்' என்று பொருள் எழுதிக் கீழே உள்ள கதையைச் சுட்டுகின்றார்;

ஆற்றோரம் இருந்த ஓர் ஊரில், வாழ்ந்துவந்த எருமை ஒன்று, ஆற்று வெள்ளத்தில் மூழ்கி இறந்து நாற்றம் மிகுதியாக எழுந்தது. அதனால் அந்த எருமையை எடுத்து அடக்கம் செய்பவர் யார் என்ற வினா எழுந்தது. அவ்வூர்க் கணக்கன், தனக்குப் பகையாய் இருந்த குயவரைப் பழிவாங்க எண்ணி, “ஊர்க் குயவர், பசுமட்கலங்களைச் சுடும் பொருட்டு அமைத்த சுள்ளையில் எழுந்த புகையாகிய மேகத்தால் மழை மிகுதியாகப் பெய்து, வெள்ளம் வந்தது. அவ் வெள்ளத்தில் மூழ்கி எருமை செத்தது. எனவே ஆற்றுள் செத்த எருமையை எடுத்து அடக்கம் செய்தல், ஊர்க்குயவர்களின் கடமையாகும். இவ்வாறு செய்ய வேண்டும் என்பதற்கு என்னிடம் உள்ள பழைய சுவடி சான்றாய் உள்ளது” என்றான். வேடிக்கையான இக் கதையினைச் சேனாவரையர் மிகச் சுருக்கமாக, ‘ஆற்றுள் செத்த எருமை ஈர்த்தல், ஊர்க்குயவர்க்குக் கடன் என்பது முதலாயின’ என்று குறிப்பிடுகின்றார்.*

இவையாவும் சேனாவரையர் இலக்கணப் புலமையுடன், மக்கள் பேசும் பேச்சினையும் நுணுகி அறிந்தவர் என்பதை விளக்கும்.

**இலக்கண உரை வரலாறு**

தமிழ் மொழியில், நூலாசிரியரே உரை எழுதும் வழக்கத்திற்குக் கால்கோள் செய்தவர் புறப்பொருள் வெண்பாமாலை இயற்றிய ஐயனாரிதனார் எனலாம். அவர், புறப்பொருள் இலக்கணத்தைக் கூறும் சூத்திரங்கள் எழுதி, அவற்றின் கீழே துறைகளை விளக்கும் கொளுக்களை அமைத்து, ஒவ்வொரு துறையினையும் விளக்கும் வெண்பா ஒன்றையும் (மருட்பாவும் உண்டு) இயற்றியுள்ளார்; தாம் வகுத்த புறப்பொருள் இலக்கணத்திற்குத் தாமே இலக்கிய மேற்கோளையும் அமைத்துள்ளார். இவ்வாறே கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய தண்டியலங்கார ஆசிரியர், அணியிலக்கணத்திற்கு ஏற்ற உதாரணச் செய்யுள்களை இயற்றித் தம் நூலில் சேர்ந்துள்ளார். இதனை, “தண்டியாசிரியர் மூலோதாரணம் காட்டினாற்போல, யாமும் உரை எழுதியது அல்லது மூலோதாரணமும்

காட்டினாம்” என்று பிரயோக விவேகம் கூறுகின்றது (பிரயோக-காரக படலம் 3).

கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் இறுதியில் நாற்கவிராசநம்பி ‘அகப்பொருள் விளக்கம்’ என்னும் இலக்கண நூலை இயற்றித் தாமே உரையும் எழுதினார். இச்செய்தியை அந்நூலின் சிறப்புப் பாயிரம்,

அகப்பொருள் விளக்கம்என்று அதற்கொரு நாமம்

புலப்படுத்து இருளறப் பொருள்விரித்து எழுதினன்

என்று கூறுவதால் அறியலாம்.

17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த சுப்பிரமணிய தீட்சிதர், பிரயோக விவேகம் என்னும் இலக்கண நூலை இயற்றி, தாமே அதற்கு உரையும் எழுதினார், அவர், “வடநூலார் தாமே பதிகமும் உரையும் செய்வார். இந்நூலும் வட நூலைத் தற்பவமாகச் செய்தலான், யாமும் பதிகமும் உரையும் செய்து உதாரணமும் காட்டினோம்” என்று கூறுகின்றார். (பிரயோக, காரக படம் - 3).

இவ்வாறே, இலக்கண விளக்கம் இயற்றிய வைத்திய நாததேசிகரும், இலக்கணக் கொத்து இயற்றிய சாமிநாத தேசிகரும் தம் நூல்களுக்குத் தாமே உரை எழுதியுள்ளனர்.

இலக்கணக் கொத்தின் ஆசிரியரான சாமிநாத தேசிகர்,

நூல்செய் தவன்அந் நூற்குஉரை எழுதுதல்

முறையோ எனிலே அறையக் கேள்நீ

என்று வினாவும் விடையுமாகத் தொடங்கித் தம் கருத்துகளை விரித்துரைக்கின்றார்:

முன்பின் பலரே ! என்கண் காணத்

திருவா ரூரில் திருக்கூட் டத்தில்

தமிழுக்கு இலக்கு ஆகிய வயித்திய நாதன்
இலக்கண விளக்கம் வகுத்துஉரை எழுதினன்;
அன்றியும் தென்திசை ஆழ்வார் திருநகர்
அப்பதி வாழும் சுப்பிர மணிய
வேதியன் தமிழ்ப்பிர யோக விவேகம்
உய்த்துஉரை எழுதினன்; ஒன்றே பலவே !

(இலக் - 7)

என்று நூலாசிரியரே உரை எழுதியுள்ளதைக் கூறித் தாமும் அவ்வாறே செய்ததாகக் கூறுகின்றார்.

வினாக்கள்

1. உரையின் இயல்புகளை எழுதுக.
2. வகைமை அடிப்படையில் உரையாசிரியர்களை விளக்குக.
3. ஐவகை இலக்கண உரைகள் பற்றி கட்டுரை வரைக.
4. தொல்காப்பியம், நன்னூல் முதலான இலக்கண உரைகளுக்கு இடையே உள்ள பொதுத்தன்மைகளை விளக்குக.
5. இலக்கண உரை வரலாறு எழுதுக.

# அலகு 3

## இலக்கிய உரைகள்

### வகைமை அடிப்படையில் உரைகள்

பத்துப்பாட்டு எட்டுத் தொகை பதினென் கீழ்க்கணக்கு ஆகியவை பழந்தமிழ் இலக்கியக் கருவூலங்கள். பத்துப்பாட்டு எட்டுத்தொகை ஆகியவற்றை (பதினெண்) மேல் கணக்கு என்று கூறுவதுண்டு. கணக்கு என்ற சொல், நூலைக் குறிக்கின்றது. மேல் கணக்கை, உரையாசிரியர்கள பாட்டும் தொகையும் என்று குறிப்பிடுகின்றனர்; இவற்றைப் பாடியவரைச் சங்க சான்றோர் என்று கூறுகின்றனர்; கீழ்க்கணக்கு நூல்களைப் பாடியவரைப் பிற்சான்றோர் என்றும் கூறுகின்றனர். மேல், கீழ் என்பவை பாடலின் அடி வரையறை கருதி இட்ட பெயர்கள். மேல்கணக்கு, பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு (தொகை) நூல்கள். கீழ்க்கணக்குகளில் நாலடியார் ஒன்றினைத் தவிர மற்றவை தனித்தனிப் புலவர் பாடிய தனி நூல்கள். பாட்டும் தொகையும் ஆசிரியப்பாக்களால் ஆனவை; கீழ்க் கணக்கு நூல்கள் வெண்பாக்களால் ஆனவை. முச்சங்க வரலாற்றைக் கூறுகின்ற இறையனார் களவியல் உரை கடைச் சங்க நூல்களாக எட்டுத் தொகை நூல்களைக் குறிப்பிடுகின்றது. பத்துப்பாட்டைக் கூறவில்லை. இது ஆராய்ச்சிக்குரிய செய்தியாகும். அந்த உரை தோன்றிய காலத்தில் தனித்தனிப் பாடல்களாகவே வழங்கி, பின்னர்த் தொகுக்கப்பட்டிருக்கலாம்.

> மூத்தோர்கள்
> பாடியருள் பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும்
> கேடில் பதினெட்டுக் கீழ்க் கணக்கும் தமிழ்விடுதூது (56),

என்று கூறுகின்றது.

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகிய பாடல்கள் பத்தும்

அடங்கிய நூல்பத்துப் பாட்டு என்று பெயர் பெற்றது. இப் பாடல்களை நினைவில் கொள்ளுவதற்குப் பின்வரும் பழைய வெண்பா துணை செய்கின்றது.

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை

பெருகு வளமதுரைக் காஞ்சி-மருவினிய

கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்

பாலை கடாத்தொடும் பத்து.

பத்துப்பாட்டு முழுவதற்கும் உரை எழுதியுள்ள நச்சினார்க்கினியர் உரைத்திறன்களை முன்னர்க் கண்டோம். அவருக்கு முன்னும் பத்துப்பாட்டிற்குச் சில பழைய உரைகள் இருந்தன. அவ்வுரைகளை நச்சினார்க்கினியர், பெயர் குறிப்பிடாமல் சுட்டுகின்றார். அந்த உரையாசிரியர் கொண்ட வேறு வேறு பாடங்களைக் காட்டுகின்றார்.

திருமுருகாற்றுப் படைக்கு மட்டும் நான்கு பழைய உரைகள் கிடைத்து வெளிவந்துள்ளன.

பத்துப்பாட்டு முழுவதற்கும் பொ. வே. சோமசுந்தரனார் மிக அருமையான உரை எழுதியுள்ளார். இவர்க்குமுன், வை. மு. கோபால கிஷ்ணமாச்சாரியர் பத்துப் பாட்டில் பெரும்பான்மையான பாடல்களுக்கு உரைகண்டுள்ளார். ஐயம்பெருமாள் கோனார் கல்லூரி மாணவர்கட்குப் பாடமாக வைத்த பாடல்களுக்கு உரையும் விளக்கமும் எழுதியுள்ளார். ந. சி. கந்தையாபிள்ளை எல்லாப் பாடல்களுக்கும் பொழிப்புரை (வசனம்) தந்துள்ளார். பத்துப் பாட்டுச் சொற்பொழிவு நூலைக் கழகம் வெளியிட்டுள்ளது.

டாக்டர் மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டில் வருகின்ற இடப் பெயர்களை விரிவாக ஆராய்ந்து இன்று அவை எங்கெங்கே உள்ளன என்று தக்க சான்றுகளுடன் காட்டியுள்ளார். முற்காலத்து அரசியல் நாகரிகம் மன்னர் வரலாறு மக்கள் வாழ்க்கை ஆகியவற்றை நன்கு விளக்கியுள்ளார். இதனைச் சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது.

1. திருமுருகாற்றுப்படை: முருகக் கடவுளைப் பற்றிய ஆற்றுப்படை ஆதலின், 'திரு' சேர்த்து இதனைச் சைவ சமயத்தவர் போற்றிவருகின்றனர். பல ஆண்டுகளாக இதனைச் சைவ சமயத்தவர் மனப்பாடம் செய்து வருகின்றனர். பத்துப்பாட்டில் முதலில் இடம் பெற்றுள்ள இந்தப் பாடலை, பதினோராம் திருமுறையில் சேர்த்துச் சிறப்பித்துள்ளனர்.

இதனைத் தனியாக ஓதும் பழக்கம் இருந்து வருகின்றது. இதன் கீழ், பிற்காலத்தவர் எழுதிச் சேர்த்த பத்து வெண்பாக்கள் உள்ளன. அவற்றில், பிள்ளையார் இடம் பெறுவதால், கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்குப் பின் அவை தோன்றின என்பது வெளிப்படை திருமுருகாற்றுப்படையினுள் விநாயகர் இடம்பெறவில்லை. ஆதலின் இது ஏழாம் நூற்றாண்டிற்கு முன் தோன்றியது என்பது உறுதி.

சைவர்கள் பாராயணம் செய்து நாள்தோறும் வழிபாட்டில் ஓதுகின்ற சிறப்புடைய திருமுருகாற்றுப் படை, அடியவர்களின் மனக்கவலையை நீக்கும் மருந்தாகி வேண்டியவற்றை வேண்டியவாறு நல்கும் என்று போற்றப்படுகின்றது.

நக்கீர் தாம்உரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாள்தோறும் சாற்றினால் - முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளி,
தான்நினைத்த எல்லாம் தரும்.

இவ்வாறு சைவ அன்பர்களால் போற்றப்படும் இப் பாடல் உரைவளம் கொண்ட சிறப்புடையது. நச்சினார்க்கினியர்க்குமுன் இதற்கு நான்கு உரைகள் தோன்றியுள்ளன.

பரிமேலழகர் உரை: சென்னை நகரில் தோன்றிச் சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்க, பல அரிய தமிழ் நூல்களை வெளியிட்டு வருகின்ற சைவ சித்தாந்த மகாசமாஜம், பல ஆண்டுகளுக்கு முன், பரிமேலழகர் உரை என்ற பெயரோடு திருமுருகாற்றுப் படைக்குப் பழைய உரை ஒன்றினை

வெளியிட்டது. இதனை இயற்றியவர் பரிமேலழகர் அல்லர் என்பர் ஆராய்ச்சியாளர். டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர், பத்துப்பாட்டு மூன்றாம் பதிப்பில், அடிக்குறிப்பாக இவ்வுரையைச் சேர்த்து 'வேறுரை' என்று குறிப்பிட்டுள்ளார்.

பரிமேலழகர் பெயரால் வழங்கிவரும் இந்தப் பழையவுரை பல வகையில் சிறப்புடையது. செறிவும் நுட்பமும் வாய்ந்தது; நல்ல தமிழ் நடையில் ஆனது; அடிதோறும் பதவுரை கூறிக் கீழே அருஞ் சொல் விளக்கம், வினைமுடிபு, இலக்கணக் குறிப்பு ஆகியவற்றைத் தருவது.

கவிப்பெருமாள் உரை: இது அடிகளின் பொருள் தொடர்பு நோக்கி வரையறுத்துப் பொழிப்புரையாக அமைந்துள்ளது. கீழே விளக்கமும் இலக்கணக் குறிப்பும் தரப்பட்டுள்ளன. ஆற்றொழுக்காய்-இனிய ஓசையுடன் செல்லுகின்றது.

இவ்வுரையைப் பின்வரும் வெண்பா பாராட்டுகின்றது:

வண்டமிழ்தேர் கீரன் வளமறையாய்ச் சேந்தன்மேல்
தண்டமிழ்ஆற் றுப்படையாத் தானுரைத்தான் -
ஒண்டமிழின்
தெய்வக் கவிப்பெருமாள் தேன்போல் உரைசெய்தான்
கைவந்த நூன்முறைமை கண்டு.

பரிதி உரை: இது, அருஞ் சொற்களுக்குப் பொருள் கூறும் குறிப்புரையாகும். இப்போது கிடைக்கின்ற உரைகளில் காலத்தால் இது முற்பட்டதாக இருக்கலாம். தேவையான இடங்களில் மிகச்சுருக்கமாய் இலக்கண விளக்கம் தருகின்றது. சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் திறனை இவ்வுரை முழுதும் காணலாம்.

இந்த உரையைப் பின்வரும் வெண்பா பாராட்டுகின்றது:

நக்கீரர் தாம்செய்த நன்முருகாற் றுப்படைக்குத்

தக்கவுரை சொன்ன தகுதியான் - மிக்குலகில்

பன்னூல் அறிந்த பரிதி மறைப்புலவன்

தொன்னூல் அறிவால் துணிந்து.

**சங்க இலக்கியம்**

எட்டுத் தொகை நூல்களை,

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு

ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்

கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம்என்று

இத்திறத்த எட்டுத் தொகை

என்ற பழைய வெண்பா கூறுகின்றது.

எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணைக்குத் தவிர, ஏனைய ஏழு நூல்களுக்கும் பழங்காலத்தில் உரைகள் தோன்றியுள்ளன. குறுந்தொகைக்குப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் எழுதிய உரை இருந்தது.

அகநானூற்றுக்குப் பால்வண்ண தேவனார் இயற்றிய அகவல் உரையும் இருந்தது. ஆனால், இவ்விரு நூல்களின் பழையவுரைகள் மறைந்துபோயின. ஐங்குறுநூற்றிற்குப் பழைய வுரையும் பதிற்றுப்பத்திற்குப் பழையவுரையும், அகநானூற்றுக்குப் பழைய குறிப்புரை இரண்டும் புறநானூற்றுக்கும் பழையவுரையும் உள்ளன. இவ்வுரைகளை இயற்றிய புலவர்களின் பெயரும் தெரியவில்லை. “ஊர் வேண்டேன்!” என்று முற்றத்துறந்த சான்றோர்கள் இவர்கள்.

பரிபாடலுக்குப் பரிமேலழகர் உரையும், கலித்தொகைக்கு நச்சினார்க்கினியர் உரையும் உள்ளன.

**நற்றிணை**

நற்றிணைக்குப் பழைய உரை இல்லை. இருபதாம் நூற்றாண்டு உரையாசிரியர்களில் ஒருவரான பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் நற்றிணைக்குச் சிறந்த உரையும் ஆராய்ச்சி முன்னுரையும் இயற்றிப் பதிப்பித்தார். அண்மையில் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை, அரியதோர் உரை விளக்கம் எழுதியுள்ளார்.

**குறுந்தொகை**

குறுந்தொகைக்குப் பேராசிரியர் 380 பாடல்களுக்கும், அவர் உரை எழுதாது விட்ட இருபது பாடல்களுக்கு நச்சினார்க்கினியரும் உரை இயற்றினர் என்ற செய்தியை நச்சினார்க்கினியர் உரைப்பாயிரம் கூறுகின்றது. இருபெரும் உரையாசிரியர்களும் இயற்றிய பழையவுரை மறைந்து போயிற்று.

இருபதாம் நூற்றாண்டில், திருக்கண்ணபுரம் திருமாளிகைச் சௌரிப் பெருமாள் அரங்கன் (1915-ஆம் ஆண்டில்) குறுந்தொகையைப் பதிப்பித்து உரையும் இயற்றினார். டாக்டர். உ.வே.சாமிநாத ஐயரும், பொ.வே.சோமசுந்தரனாரும் குறுந்தொகைக்கு விளக்கவுரை எழுதியுள்ளனர்.

இராகவ ஐயங்கார் குறுந்தொகையில் முதல் 112 பாடல்களுக்கு விளக்கவுரை இயற்றியுள்ளார்.

**ஐங்குறுநூறு**

ஐங்குறுநூற்றுக்குப் பழையஉரை உள்ளது. இது குறிப்புரையும் அன்று; பொழிப்புரையும் அன்று. அகத்திணை நூல்களுக்குரிய உள்ளுறை உவமம்; இறைச்சிப் பொருள் ஆகியவற்றைத் தெளிவாக விளக்குகின்றது; சிற்சில இடங்களில் அருஞ்சொற்களுக்குப் பொருள் உரைக்கின்றது; தேவையான இடங்களில் இலக்கணக் குறிப்பும் வினைமுடிபும் கூறுகின்றது. துறைகளையும் கூற்றுக்கு உரியவரையும் நன்கு விளக்குகின்றது. ஐங்குறுநூற்றின் முதற்பாட்டிற்குச் சிறந்த விளக்கம் எழுதிய இவ்வுரையாசிரியர் ஏனைய பாடல்களுக்கும் அவ்வாறு எழுதாமல் விட்டது பெரிய இழப்பாகும். முதற்பாட்டின் விளக்கமாக, "தலைவியை யாய் என்றது புலத்தற்குக் காரணமாயின உளவாகவும் அவை மனங்கொள்ளாத சிறப்பை

நோக்கி; தோழி யாங்கள் என உளப்படுத்தது ஆயத்தாரை நோக்கி எனக் கொள்க. பூவும் புலாலும் ஒக்க விளையும் ஊர் என்றது குலமகளிரைப்போல, பொது மகளிரையும் ஒப்புக் கொண்டு ஒழுகுவான் என்பதாம். ஆதன் அவினி என்பான் சேரமான்களில் பாட்டுடைத் தலைவன்" என்று உரைக்கின்றார்.

எல்லாப் பாடல்களிலும் உள்ளுறைகளைத் தெளிவாக விளக்கும் இவர்,177 ஆம் பாடலில் இறைச்சிப் பொருளையும் சுட்டுகின்றார்.

"கன்னம் என்பது நோய்த் தணித்தற்குப் பண்ணிக் கொடுக்கும் படிமம். கெழுதகை என்பது உரிமை" (245) என்று சொல்லுக்குப் பொருளும், "வெள்ளிலோத்திரத்துக் குளிர்ச்சியையுடைய மலரை ஆற்றின் வெம்மை தீர, செல்வோர் அணிந்து செல்வர் என்றுழி வெம்மை கூறியவாறாயிற்று" (301)\என்று பாட்டால் வெளிப்படும் கருத்தையும் கூறுகின்றார்.

இவ்வுரை சிறியதாயினும், செய்யும் உதவி பெரியது. இவ்வுரைக்கு டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் குறிப்புரை எழுதியுள்ளார்

ஔவை சு. துரைசாமிப் பிள்ளையும், பொ.வே. சோம சுந்தரனாரும் விளக்கவுரை எழுதியுள்ளனர்.

**பதிற்றுப்பத்து**

பதிற்றுப்பத்திற்குப் பழையஉரை உள்ளது. இவ்வுரை பதவுரையும் அன்று; அருஞ்சொற் பொருள்உரையும் அன்று; குறிப்புரையும் அன்று. எல்லா உரை நெறிகளையும் தழுவிச் செல்லுகின்றது இவ்வுரை. இவ்வுரையினை இயற்றியவர் பெயர் முதலிய வரலாறு தெரியவில்லை. 76ஆம் பாடலின் உரையில், "சின்மையைச் சின்னூல் என்றதுபோல ஈண்டுச் சிறுமையாகக் கொள்க" என்று இவர் எழுதுகின்றார். சின்னூல் என்பது குணவீர பண்டிதரால் இயற்றப்பெற்ற நேமிநாதத்திற்குப் பெயராக வழங்குகின்றது. நேமிநாதம் நன்னூலாருக்கு முன் தோன்றியது. ஆதலின், இவ்வுரையாசிரியரும் நன்னூலாரின் காலத்திற்கு முற்பட்டவர் எனலாம்.

கயிறு குறு முகவை என்பதற்கு இவர் தரும் நயஉரை மிகவும் இனியது:

கயிறு குறு முகவை என்றது, தன்னால் நீர் தாங்குவது பெரிதன்றித் தன் கயிற்றையே நின்று வாங்கப்படும் முகவை" (22) என்று மிக அழகாக விளக்குகின்றார்.

பதிற்றுப்பத்திற்கு டாக்டர். உ. வே. சாமிநாத ஐயர் பழைய உரையின்கீழே குறிப்புரை எழுதியுள்ளார். ஔவை சு.துரைசாமிப்பிள்ளை விளக்கவுரை எழுதியுள்ளார். ஈழ நாட்டுத் தமிழ்ப்புலவர் அருள் அம்பலனார் ஆராய்ச்சியுரை எழுதியுள்ளார்.

அகநானூறு

அகநானூற்றுக்குப் பழைய உரை உண்டு. அதனை இயற்றியவர் பால் வண்ணத் தேவர் என்பவர். அவர் அகவலால் உரை கண்டார் என்று சிறப்புப்பாயிரம் கூறுகின்றது. அந்த அகவல் உரை கிடைக்கவில்லை. மறைந்து போன உரை நூல்களுள் அதுவும் ஒன்று.

அகநானூற்றுக்குக் குறிப்புரைகள் இரண்டு பழங்காலத்தில் தோன்றியுள்ளன. அவற்றுள் ஒன்று, கடவுள் வாழ்த்திற்கும் முதல் தொண்ணூறு பாடல்களுக்கும் குறிப்புரையாய் அமைந்துள்ளது. இவ்வுரையாசிரியர் ஒவ்வொரு செய்யுளிலும் உள்ள அருஞ்சொற்களுக்கும், அரிய தொடர்களுக்கும் பொருள் எழுதுகின்றார். உள்ளுறை உவமம், இறைச்சிப்பொருள் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றார். வேண்டிய இடங்களில் சொல்முடிபு, பொருள்முடிபு, இலக்கணக் குறிப்பு, வரலாற்று நிகழ்ச்சி ஆகியவற்றைத் தருகின்றார்.

புறநானூறு

புறநானூற்றுக்குப் பழையவுரை உள்ளது. இவ்வுரை 266 பாடல்கள்வரை உள்ளது. இவ்வுரையாசிரியரின் வரலாறு தெரியவில்லை. இவ்வுரையின்பல்வேறு இயல்புகளை மிக நன்றாக ஆராய்ந்து டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் எழுதியுள்ளார்.

பழைய உரையாசிரியர் ஆற்றொழுக்காகச் செய்யுளில் சொல் கிடந்தவாறே பொருள் உரைக்கின்றார். உரைநடை மிகவும் எளிமையானது. தமக்கு முன் இருந்த மற்ற உரையாசிரியர் கருத்துக்களையும், அவர்கள்

கொண்ட பாடங்களையும் பல இடங்களில் குறிக்கும் இவர் அவர்களை மறுப்பதில்லை. நயங்கூறுதல், வினைமுடிபு காட்டுதல் சொற்களை வருவித்துக் கூறல் துறைகளை விளக்குதல் போன்ற பல இயல்புகள் இவரிடம் உள்ளன. நாலடியார், திருக்குறள் போன்ற நூல்களின் செய்யுள் அடிகளை உரைநடையாக்கி எழுதுகின்றார். உலக வழக்குச் சொற்களைக் குறிக்கின்றார். உவமைகளை விளக்குகின்றார். குறிப்புப்பொருள் தருகின்றார். ஆங்காங்கே மிக அரிய இலக்கணக் குறிப்புகளைத் தருகின்றார்.

இவர், வேதங்களைப் பின்பற்றும் வைதிக சமயத்தவர். கடவுள் வாழ்த்துப் பாடல் உரையில், சிவபெருமானக்கு உரிய பொருள்களை, 'திரு' என்னும் அடைகொடுத்து, திருநுதல் திருச்சடை, திருமுடி என்கின்றார். 56 - ஆம் பாடலின் உரையில், திருமால் மேனியைத் திருமேனி என்றும், பலதேவரை நம்பி மூத்தபிரான் என்றும் முருகக் கடவுளைப் பிள்ளையார் என்றும், பிணி முகம் பிள்ளையார் ஏறும் யானை என்றும் மரபு வழுவாமல் உரைக்கின்றார்.

பழைய உரை 266 பாடல்களுக்கு மட்டுமே உள்ளது. 267 முதல் 400 வரை உள்ள பாடல்களுக்கு டாக்டர் உ.வே.சா. குறிப்புரையும் சிறு விளக்கமும் எழுதி வெளியிட்டார். பின்னர் ஔவை சு. துரைசாமி பிள்ளை நூல் முழுமைக்கும் சிறந்த உரை விளக்கம் எழுதியுள்ளார். இவ்வுரை பொருத்தமான பாடல்களை ஆராய்ந்து தருகின்றது. வரலாற்றுச் செய்திகளையும், சங்க காலத்து மக்கட் பெயர், ஊர் நாடுகளின் பெயர் ஆகியவற்றைக் கல்வெட்டுகளின் உதவி கொண்டு தெளிவுபடுத்துகின்றது. புலவர் வரலாற்றையும் மன்னர்களின் வரலாற்றையும் விரிவாக ஆராய்ந்து உரைக்கின்றது.

**அற இலக்கியம்**

பதினெண் கீழ்க்கணக்கு உரைகள்

பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள பல நூல்கள், வச்சிர நந்தி மதுரையில், நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்த காலத்தில் தோன்றியவை என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

'பன்னிரு படலம்' கீழ்க்கணக்கைப்பற்றி

அடிநிமிர் வில்லாச் செய்யுள் தொகுதி

அறம்பொருள் இன்பம் அடுக்கி அவ்வகைத்

திறம்பட வருவது கீழ்க்கணக் காகும்

என்று கூறுகின்றது. கணக்கு என்ற சொல்லுக்கு நூல் என்பது பொருள். கீழ் என்பது, பாடலின் குறுகிய அளவைக் குறிக்கின்றது.

'வனப்பியல்தானே' என்ற தொல்காப்பிய (செய்யுளியல்) நூற்பாவில், பேராசிரியர் 'கீழ்க் கணக்கு' நூல்களைக் குறிப்பிடுகின்றார்.

பதினெண் கீழ்க்கணக்கின் பெயர்களை,

நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்

பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்

இன்னிலைசொல் காஞ்சியுடன் ஏலாதி என்பவே

கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு

என்னும் பழைய வெண்பா குறிப்பிடுகின்றது. இந்தப் பாடலில் உள்ள நூலின் பெயர்களை 1885-இல் சி.வை.தாமோதரம் பிள்ளை ஆராயத் தொடங்கினார். அவர் தொடங்கி வைத்த ஆராய்ச்சி வளர்ந்தது. பலர் பங்கு கொண்டனர்.

முப்பால் என்பது எது? திருக்குறளா? கடுகம் என்பதற்கு அடை

மொழியா? இன்னிலை, கைந்நிலை என்பவை தனித்தனி நூல்களா? “இன்னிலை சொல்” என்பது காஞ்சிக்கு அடைமொழியா? இரண்டும் நூல்கள் ஆயின், அவை எங்கே?

இத்தகைய ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கும்போது ‘இன்னிலை’ என்ற பெயருடன் புதியாய் ஒரு போலி நூல் தோன்றிப் பழையநூல் போல் மருட்டியதால், வ.உ.சி. யால் அஃது உரையுடன் பதிப்பிக்கப்பட்டது.

காலம் செல்லச் செல்லத் தெளிவு பிறந்தது. முப்பால் என்பது திருக்குறளே என்று முடிவு செய்யப்பட்டது. இன்னிலை என்பது ‘காஞ்சி’க்கு அடைமொழி என்பது தெரிந்தது. கைந்நிலை என்பது பழைய நூல் என்பதை, தொல்காப்பியம் இளம்பூரணர் உரை அறிவித்தது. அவ்வுரை கைந்நிலைக்குரிய சில வெண்பாக்களை மேற்கோள்காட்டி இருப்பதை அறிந்து, அந்த நூல் ஐந்திணை கூறும் அகப்பொருள் நூல் என்று தெளிய முடிந்தது. அதனால் ‘இன்னிலை’ பிற்காலத்துப் பொய்ந்நூல் என்பது உறுதியாயிற்று.

திருக்குறள் நாலடியார் இரண்டும், அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்றையும் கூறுகின்றன.

நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி ஆகிய ஒன்பதும் நீதி நூல்கள்.

கார் நாற்பது, திணைமொழி ஐம்பது, ஐந்திணை எழுபது, ஐந்திணை ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை ஆகிய ஆறும் அகப்பொருள் நூல்கள்.

உரைகள்

மேலே குறிப்பிட்ட 18 நூல்களில் பெரும்பாலானவற்றிக்குப் பழைய உரைகள் உள்ளன. திருக்குறளுக்குப் பத்து உரைகள் தோன்றியுள்ளன. நாலடியாருக்கு மூன்று உரைகள் உள்ளன.

நீதி நூல்களில் ஏலாதி நீங்கலாக உள்ள எட்டிற்கும் பழைய உரைகள் முழுமையாய் உள்ளன. ஏலாதியில் சில பகுதிகளுக்கு உரை சிதைந்து விட்டது.

அகப்பொருள் நூல்களில் ஐந்திணை ஐம்பது, திணைமாலை ஐம்பது இரண்டிற்கும் பழைய உரைகள் முழுமையாகக் கிடைத்துள்ளன. திணைமாலை நூற்றைம்பதில், 126 ஆம் பாட்டிற்குமேல் பழைய உரை கிடைக்கவில்லை. ஐந்திணை எழுபதில், முதல் 24 பாடல்களுக்கே உரை உள்ளது. கைந்நிலை, நூல் சிதைந்துள்ளது போலவே உரையும் சிதைந்துள்ளது. கார் நாற்பதில் 23 முதல் 38 வரையுள்ள பாடல்களுக்குப் பழைய உரை இல்லை.

புறப்பொருள் நூலாகிய களவழி நாற்பதுக்கு உரை முழுமையாகக் கிடைத்துள்ளது.

இந்தப் பழைய உரைகள் யாவும் பொழிப்புரையாக உள்ளன; பழையமரபு அறிந்து எழுதப்பட்டுள்ளன. சுருக்கமும் தெளிவும் பெற்றுள்ளன; அருஞ்சொற்பொருளும் இலக்கணக் குறிப்பும் தருகின்றன.

1883-ஆம் ஆண்டில், ஆசாரக் கோவையைப் பழைய உரையுடன், திருத்தணிகை விசாகப் பெருமாள் ஐயர் வெளியிட்டார். சைவ சித்தாந்த கழகம், பல பழைய உரைகளை வெளியிட்டுள்ளது. கா, நமசிவாய முதலியார், திருமணம் செல்வக் கேசவராய முதலியார் ஆகியோர் பழமொழி நானூற்றைப் பழைய உரையுடன் வெளியிட்டனர்.

சில தமிழறிஞர்கள் தாமே புதிதாக உரை எழுதி வெளியிட்டனர். அவற்றுள் சில:

நான்மணிக்கடிகை (1922) - கோ. இராசகோபாலபிள்ளை உரை.

இன்னா நாற்பது (1922) - கா. ரா. கோவிந்தராச முதலியார் உரை.

களவழி நாற்பது (1877) - சோடாவதானம் சுப்பராய செட்டியார் உரை.

இன்னும்பலர், உரை எழுதும் பணியில் ஈடுபட்டுத் தொண்டு செய்துள்ளனர்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், எல்லா நூல்களுக்கும் தக்க அறிஞர் பெருமக்களைக் கொண்டு மிகச் சிறந்த முறையில் உரைகளை எழுதி வெளியிட்டுள்ளது.

நாலடியார்

நாலடியார் என்னும் நூலை, 'நாலடி நானூறு' என்றும் வழங்குவர். நாலடியார் ஒரு தொகை நூல். இதில் உள்ள வெண்பாக்களைச் சமண முனிவர் பலர் இயற்றியுள்ளனர். நச்சினார்க்கினியர், சீவக சிந்தாமணி உரையில் (1089) நாலடியர் பாடல் ஒன்றே மேற்கோள் காட்டுகின்றார். "பிறரும் இச்சமயத்தார், 'சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா' (நாலடி-110) என்பதனாலும் உணர்க" என்று கூறுகின்றார். இதனால் நாலடியார், சமண சமயத்தவர் செய்த நூல் என்பது தெளிவாகின்றது. நச்சினார்க்கினியர், நூலியற்றியவரை 'இச் சமயத்தார்' என்று பன்மையாற் சுட்டுகின்றார். ஒருவர் பெயரையும் குறிப்பிட்டுக் கூறவில்லை.

நாலடியார்

நாலடியார் என்னும் நூலை, 'நாலடி நானூறு' என்றும் வழங்குவர். நாலடியார் ஒரு தொகை நூல். இதில் உள்ள வெண்பாக்களைச் சமண முனிவர் பலர் இயற்றியுள்ளனர். நச்சினார்க்கினியர், சீவக சிந்தாமணி உரையில் (1089) நாலடியர் பாடல் ஒன்றே மேற்கோள் காட்டுகின்றார். "பிறரும் இச்சமயத்தார், 'சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா' (நாலடி-110) என்பதனாலும் உணர்க" என்று கூறுகின்றார். இதனால் நாலடியார், சமண சமயத்தவர் செய்த நூல் என்பது தெளிவாகின்றது. நச்சினார்க்கினியர், நூலியற்றியவரை 'இச் சமயத்தார்' என்று பன்மையாற் சுட்டுகின்றார். ஒருவர் பெயரையும் குறிப்பிட்டுக் கூறவில்லை.

**காப்பியம்**

தமிழகத்திற்குத் திருவேங்கடம் போன்ற மலைகளால் ஏற்படும் சிறப்பைவிட - காவிரி போன்ற ஆறுகளால் உண்டாகும் பெருமையைவிட - தஞ்சைப் பெரிய கோயில் போன்ற கலைச் செல்வங்களால் தோன்றும்

மாண்பைவிட-சிறந்த கவிஞர் பெரு மக்கள் இயற்றிய பெருங்காப்பியங்களால் ஏற்படுகின்ற புகழ் மேலானது.

பாரதியார், காப்பியத்தைத் தீஞ்சுவைக் காவியம் என்று பாராட்டுகின்றார். காப்பியம் கள்ளைப் போல் மயக்கும்; தீயைப் போல் சுடும்; காற்றைப் போல் இனிமை தரும்; வானவெளியைப் போல் பரந்து கிடக்கும். காப்பியம் பல இயற்றியுள்ள சான்றோர்களைத் தெள்ளு தமிழ்ப் புலவர்கள் என்று பாரதியார் போற்றிப் பாடுகின்றார்:

ஐம்பெருங்காப்பியத்தை அடுத்துத் தோன்றியவை, நீலகேசி சூளாமணி உதயணன்கதை யசோதர காவியம் நாககுமார காவியம் என்பன. இவற்றை ஐஞ்சிறு காப்பியங்கள் என்பர்.

ஐம்பெருங்காப்பியங்களுள், வளையாபதி குண்டலகேசி ஆகிய இரண்டும் மறைந்துபோயின. இவற்றுள் சில பாடல்களே புறத்திரட்டின் வாயிலாகக் கிடைத்துள்ளன.

குண்டலகேசிக்கு மறுப்பாக எழுந்த நீலகேசி உரை, குண்டலகேசிக் காப்பியக் கதையைச் சுருக்கமாய்க் கூறி விளக்குகின்றது. ஐஞ்சிறு காப்பியங்களுள், நாககுமார காவியம் மறைந்து விட்டது.

காப்பியங்களுள், சிலப்பதிகாரம் சீவக சிந்தாமணி நீலகேசி ஆகியமூன்றிற்கு மட்டுமே முற்காலத்தில் உரைகள் தோன்றியுள்ளன.

1. அரும்பதவுரையாசிரியர்

ஊர் பேர் தெரியாத பண்டைய உரையாசிரியரைப் பழைய உரையாசிரியர் என்று குறிப்பிடுவது, பிற்கால உரையாசிரியர்களின் வழக்கமாகும். சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியுள்ள அடியார்க்கு நல்லார் காலத்திலேயே இத்தகைய வழக்கம் இருந்திருக்கிறது. அடியார்க்கு நல்லாருக்கு முன்னர்ச் சிலப்பதிகாரத்திற்கு ஊர் பேர் தெரியாத பழையவுரையாசிரியர் ஒருவர் இருந்தார். அப் பழையவுரையாசிரியரின் ஊர்பேர் தெரியாததாலும், அவர் இயற்றிய உரை, பெரும்பாலும் அரிய சொற்களுக்குப் பொருள் கூறுவதாய் இருப்பதாலும் அடியார்க்கு நல்லார், அவரை அரும்பதவுரையாசிரியர் என்று வழங்கினார். சிலப்பதிகாரத்தில்

அடியார்க்கு நல்லார் இந்திர விழவூரெடுத்த காதை உரையில் (157), “அவைக்களத்தார் ஐந்து எனக் காட்டுவர் அரும்பதவுரை யாசிரியர்” என்று கூறுகின்றார்.

அடியார்க்கு நல்லாரும் அரும்பதவுரையாசிரியரும்

அரும்பதவுரையாசிரியர் அமைத்துத் தந்த பாதையிலே அடியார்க்கு நல்லார் செல்லுகின்றார். அரும்பதவுரையாசிரியர் அமைத்த கடைக் காலின் மீதுதான் அடியார்க்கு நல்லார் கட்டிடம் எழுப்புகின்றார். அரும்பதவுரையாசிரியர் கூறும் விளக்கங்களை அடியார்க்குநல்லார் விளக்காமல் விட்டுச் செல்லுதலும் உண்டு. அரும்பதவுரையாசிரியரின் உரைநடைச் சிறப்புக்குப் பின்வரும் பகுதி நல்ல சான்றாக உள்ளது:

“வஞ்சி மூதூர் மணி மண்டபத்திடைத் தந்தையோடு இருந்துழி, அரசு வீற்றிருக்கும் திருப்பொறி உண்டென்று ஒரு நிமித்திகன் சொல்ல, முன்னோனாகிய செங்குட்டுவன் இருப்ப இவ்வாறு முறை பிறழக் கூறியது பொறாது குணவாயிற் கோட்டத்துக் கடவுளர் முன்னர்த் துறந்திருந்த இளங்கோவடிகளுக்கு, கண்ணகி வானவர் போற்றத் தன் கணவனோடு கூடியது கண்டு செங்குட்டுவனுக்கு உரைத்த குறவர் வந்து, ‘எல்லாம் அறிந்தோய்! இதனை அறிந்தருள்’ எனக்கூறிப் போக, பின்பு செங்குட்டுவனைக் கண்டு அடிகளுழை வந்த சாத்தன், அது பட்டவாறு எல்லாம் கூற, அது கேட்டு, ‘அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று என்பதூஉம், பத்தினி மகளிர் பெய்யெனப் பெய்யும் மழை என்பதூஉம், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம் இக் கதையகத்து உண்மையின், அதனை யாம் ஒரு செய்யுளாகச் செய்வோம்’ என்று சாத்தன் சொல்ல, இம் முப்பது வகைத்தாகிய செய்யுளை இளங்கோவடிகள் அருள, கூல வாணிகன் சாத்தன் கேட்டனன் என்க.”

அடியார்க்குநல்லார்

அடியார்க்குநல்லார் என்ற இனிய பெயரையுடையவர், சிலப்பதிகாரத்திற்கு உரை இயற்றிய சான்றோர். இவர் அரும்பதவுரையாசிரியர்க்குப் பின்னர், உரை இயற்றியவர், இவருக்கு முன்னும் சிலர் சிலப்பதிகாரத்திற்கு உரை

இயற்றி இருக்கலாம் என்று கருத இடமுண்டு. பிறர் கொண்ட பாடங்களையும் உரைகளையும் இவர் ஆங்காங்கே சுட்டிச் செல்கின்றார்.

முத்தமிழ்க் காப்பியம் என்று போற்றப்பெறும் சிலப்பதிகாரத்திற்கு உரை இயற்றிய இவரை,

ஓரும் தமிழொரு மூன்றும் உலகின் புறவகுத்துச்
சேரன் தெரித்த சிலப்பதி காரத்திற் சேர்ந்தபொருள்
ஆரும் தெரிய வித்துரைத்தான்

என்று கூறுகின்றது. சிறப்புப்பாயிரச் செய்யுள் ஒன்று. 'பருந்தும் நிழலும் என, பாவும் உரையும் பொருந்த எல்லாப் பொருளும் தெரிந்து நல்லமிர்தம் பாலித்தான்' என்று மற்றொரு செய்யுள் இவரைப் போற்றுகின்றது.

பருந்தும் நிழலும்எனப் பாவும் உரையும்
பொருந்துநெறி எல்லாப் பொருளும் - தெரிந்துஇப்
படியார்க்கு நல்அமிர்தம் பாலித்தான் நன்னூல்
அடியார்க்கு நல்லான்என் பான்

என்ற செய்யுள், சிலப்பதிகாரத்திற்கு இவர் உரை இயற்றியதை உலக மக்களுக்கு நல்லமிர்தம் பாலித்ததாய்ப் போற்றுகின்றது.

அடியார்க்கு நல்லார் அவையடக்கமாக,

எழுத்தின் திறன்அறிந்தோ இன்சொற் பொருளின்
அழுத்தம் தனில்ஒன்று அறிந்தோ - முழுத்தும்
பழுதற்ற முத்தமிழன் படாற்கு உரைஇன்று
எழுதத் துணிவதே யான்

என்று கூறுவதாய் உள்ளது. ஆனால், இவர் எழுத்தின் திறன் அறிந்தவர்; இன்சொற் பொருளின் அழுத்தம் அறிந்தவர்; பழுதற்ற முத்தமிழன் பாடற்குச் செவ்விய உரை கண்டவர் என்பதை இவரது உரையே நன்கு உணர்த்தும்.

சிலப்பதிகாரத்தின் அருமை பெருமைகளை எல்லாம் இவரது உரையால்தான் தமிழகம் நன்கு அறிந்தது. இவரது உரை இல்லாமல் போய் இருந்தால் எத்தனையோ அரிய செய்திகள் வெளிப்படாமல் மறைந்து இருக்கும். முத்தமிழ் வித்தகராகிய இவர் பண்டைத் தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஊறித் திளைத்தவர்; சிறப்பாக உரை இயற்றும் திறன் வாய்ந்தவர்.

அடியார்க்குநல்லார் தமக்குமுன் இருந்த உரைகளையும் கருத்துகளையும் தேவையான இடங்களில் சுட்டுகின்றார்.

இந்திரவிழவூரெடுத்த காதையில் (157), "இனி, 'அவைக் களத்தார் ஐந்து' (157-அரும்பதவுரை) எனக்காட்டுவர் அரும்பதவுரையாசிரியர்" என்று குறிப்பிடுகின்றார். துன்பமாலையுள் (2-7) "முதுமகள் போயினாளுடைய சாயலாள் அரவங்கேட்டு வந்து அவ்விடத்து நின்றாள் உளள் என ஐயை மேல் ஏற்று வாருமுளர்" என்கிறார். இன்னும் வேறு சில இடங்களில் பிறர் கொண்ட பாடத்தையும் பொருளையும் சுட்டிச் செல்கின்றார்.

உரைநடைச் சிறப்பு

அடியார்க்குநல்லார் உரை, பல இடங்களில் ஓசை இன்பம் பயக்கும் சிறந்த கவிதையோல உள்ளது. பதிகத்தின் உரையில் இளங்கோ அடிகள் துறவுபூண்ட வரலாற்றினைக் கவிதைச் சுவை சொட்டச் சொட்ட எழுதுகின்றார்.

பல்கலைப் புலமை

இளங்கோ அடிகள் பல கலைகளை நுணுகிக் கற்ற கலைச்செல்வர். சிலப்பதிக்காரத்தில் தொட்ட இடமெல்லாம் கலைமணம் கமழும். இளங்கோ அடிகள் முத்தமிழ் கற்றுத் துறைபோகிய வித்தகர். அவர் நூலுக்கு உரை இயற்றிய அடியார்க்குநல்லார், அவரது புலமைப் பரப்பைக் கண்டு வியந்தவர். அவர் கூறும் கலைகளை விளங்கிக் கொண்டவர்.

அடியார்க்குநல்லார் அரங்கேற்று காதைக்கு எழுதியுள்ள விளக்கம் நுண்கலைக் களஞ்சி யம். அது அருங்கலைகளின் உறைவிடம். அக் காதையின் உரையில் கூத்தி, ஆடலாசிரியர், இசையாசிரியர், கவிஞர், தண்ணுமையோன், யாழாசிரியன், ஆகியோருடைய அமைதியும், அரங்கின் இலக்கணம், தலைக்கோல் அமைதி, அரங்கிற் புகுந்து ஆடுகின்ற இயல்பு ஆகியவையும் மிகச் சிறப்பாக - விளக்கமான மேற்கோள்களுடன். உரைக்கப்படுகின்றன.

**புராணம்**

புராண இதிகாச உரைகள்

தமிழ்மொழியில் இராமாயணக் கதையும் பாரதக் கதையும் பல்லவர் காலத்திலேயே (600-900) நூல் வடிவில் மக்களிடையே

பரவி இருந்தன. ஆனால், பிற்காலத்தில் அவை எக் காரணத்தாலோ

அழிந்துபோயின. இடைக்காலத்தில் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப்

பின் கம்பரும் வில்லிபுத்தூராரும் இயற்றிய இராமாயணமும் பாரதமும்

மக்களிடையே பரவின. இவ்விரு நூல்களுக்கும் மிகப் பிற்காலத்தில்தான்

உரைகள் தோன்றின.

பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே தலபுராணங்கள்பல தோன்றின. அப்புராணங்களில் கந்தபுராணம், தணிகைபுராணம்,காஞ்சிபுராணம், திருவிளையாடல் புராணம், அரிச்சந்திர

புராணம், நைடதம் ஆகியவை தவிர ஏனைய புராணங்களின் பெயரும் தெரியாமல் முடங்கின; படிப்பாரும் எடுப்பாரும் இன்றி ஏடுகளாய்க் கிடந்தன. இப்புராணங்களுக்கு உரைகள் எழுதி, மக்களிடையே பரப்பும் முயற்சி பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடங்கியது.

இதிகாசம் புராணம் ஆகியவற்றிற்குத் தோன்றிய உரைகளைக் காண்போம்;

பாரத உரை - அரசஞ் சண்முகனார்.

பாரதம், ஆதிபருவம் உரை - பொன்னம்பலம் பிள்ளை (19- நூற்).

திருவிளையாடற் புராண உரை - இராமலிங்க சுவாமி பிள்ளை (? - 1801).

திருவிளையாடற் புராண உரை - ஈக்காடு இரத்தின வேலு முதலியார்.

நைடத உரை - காஞ்சிகுமார சுவாமி தேசிகர் (1842).

மயூரகிரிப் புரணா உரை - நல்லூர் பொன்னம்பலப் பிள்ளை (1836 - 1902).

கூர்ம புராண விரிவுரை - நா. கதிரைவேல் பிள்ளை (1844-1907).

அருணாசல புராண உரை - மழவை மகாலிங்கர் (1900).

திருச்செந்தூர்ப் புராணம் உரை - நீர்வேலி சிவப்பிரகாச பண்டிதர்; மாப்பண முதலியார்.

பழனித்தல புராண உரை - நா. கதிரைவேல் பிள்ளை (1844- 1907).

திருவாதவூரார் புராண உரை - குமாரதேவர்.

விசுவ புராண உரை - மயிலாடுபுரம் கிருஷ்ணஐயர் (1894).

ஆறுமுக முதலியார் (1822-1879)

பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம்.

பூவை. கலியாணசுந்தரம் (1854-1819)

திருப்பாசூர்ப் புராண வசனம், திருவலிதாயப் புராண வசனம், திருவேற்காட்டுப் புராண வசனம், திருவொற்றியூர்ப் புராண வசனம், சீகாளத்திப் புராண வசனம்.

வ.சு. சண்முகம் பிள்ளை (1880-1941)

திருவாடானைப் புராண வசனம், கோரணத்தல புராண வசனம், திருக்குடவாயிற் புராண வசனம், கண்டியூர்ப் புராண வசனம்.

மு. ரா. அருணாசலகவிராயர் (20 நூற்.)

திருச்சொந்தூர்ப் புராண வசனம், திருப்பரங்குன்றப் புராண வசனம்,ம திருக்குற்றாலப் புராண வசனம்.

காஞ்சிபுரம் இராமசாமி நாயுடு

பிரபுலிங்க லீலை வசனம் (1902)

ச.க. இராகவ முதலியார்

தேம்பாவணி வசனம்

பு. து. இராமசாமிப் பிள்ளை

குடந்தைப் புராண வசனம் (1933).

தேவயம்பாடி சுப்பிரமணிய ஐயர்

திருவிரிஞ்சை புராண வசனம்.

அருணாசலக் கவுண்டர்

மூர்த்திமலைப் புராண வசனம்

தஞ்சைக் கலியபெருமாள் பிள்ளை

திருமழுவாடிப் புராண வசனம்.

புதுவை நயினாத்தை முதலியார்

ஆரிய புராண வசனம் (1792).

## சிற்றிலக்கிய, பக்தி சமய இலக்கிய உரைகள்

### சிற்றிலக்கிய உரைகள்

பிரபந்தம் என்னும் வடமொழிச் சொல்லே இன்று சிற்றிலக்கியம் என்ற பொருளில் வழங்கப்படுகின்றன. பிரபந்தம் என்பதற்கு தொண்ணுற்றாறு வகைப்பட்ட நுhல், இசையுறு கட்டுரை எனப் பொருள் கூறுகிறது தமிழ்ப் பேரகராதி. சிற்றிலக்கிய வகைகளை கூறுவதில் பாட்டியல் நுhலாரிடையே ஒரு சீhர்மையினைக் காணமுடியவில்லை. எனவே முதலில் தோன்றியதாகக் கருதப்படும் பன்னிருபாட்டியல் 65 சிற்றிலக்களுக்கு இலக்கணம் உரைக்க பின்னார் எழுந்த வெண்பா பாட்டியல் 54 சிற்றிலக்கியங்களுக்கும் நவநீதப் பாட்டியல் 63 சிற்றிலக்கியங்களுக்கும், சிதம்பரப் பாட்டியல் 62 சிற்றிலக்கியங்களுக்கும், பிரபந்தத்தீபிகை 80 சிற்றிலக்கியங்களுக்கும் விளக்கம் உரைக்கின்றன.

16-ஆம் நுhற்றாண்டின் தொடக்கத்தில் எழுந்ததாகக் கருதப்படும் பிரபந்த மரபியலில் தொண்ணுற்றாறு என்னும் எண் வரையறைக் கொடுக்கப்பட்டுள்ளது. 17-ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவரால் இயற்றப்பட்ட தொன்னுhல் விளக்கத்தில் 89 சிற்றிலக்கியங்களின் பெயார்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. 18-ஆம் நூற்றாண்டில் எழுந்த சதுரகராதியில் 96 சிற்றிலக்கியங்களின் பெயார்கள் தரப்பட்டுள்ளன. இவற்றில் அக்காலத்தில் எழுந்த குறவஞ்சி, பள்ளு ஆகிய இலக்கியங்களை அவ்வவ் பெயார்களில் வழங்காது பன்னிருப் பாட்டியல் குறிப்பிடுவது போல் குறத்திப்பாட்டு, உழத்திப்பாட்டு என்றே வழங்கப்பட்டுள்ளது. ஆயினும், குறவஞ்சி, பள்ளு ஆகிய நுhல்களில் இடம் பெற்றுள்ள நிகழ்ச்சிகள் அனைத்தும் அவற்றின் இலக்கணமாகச் சதுரகராதியில் குறிப்பட்டுள்ளதை அறியலாம். இவற்றுள் தனிச் சிற்றிலக்கிய வகைகளான ஆற்றுப்படை, உலா, பிள்ளைத்தமிழ், கோவை, தூது, பரணி, கலப்பகம், பள்ளு, குறவஞ்சி முதலானவையாகும்.

உரைகள் தோன்றியதற்குக் காரணங்களாக ஆய்வாளர்கள் விளக்குவன இவண் சுட்டத்தக்கன. குறிப்பிட்ட ஒரு காலத்தில் வாழும் மக்களிடையே அறிவுப்பசி தலையெடுக்கின்ற பொழுது, பழம்பெரும் நுhல்களுக்கு அக்கால வாழ்க்கைச் சூழலுக்கேற்ப விளக்கம் தர அறிஞர்கள் முயன்றுள்ளனர். அவர்களுடைய உள்ளத்தில் ஆராய்ச்சி மனப்பான்மை மேலோங்கி நிற்கின்ற பொழுதும், பழமையில் புதியன காணவேண்டும் என்ற உணர்ச்சித் துடிப்பு உண்டாகின்ற பொழுதும் பழைய நுhல்களுக்கு உரையெழுதி வந்துள்ளனர் என்பார் கி.ஆதிநாராயணன் (உரையாசிரியர்களும் திறனாய்வுக் கோட்பாடுகளும், ப.33). தமிழ் இலக்கண இலக்கியங்களின் பொருள் வளத்தையும் மொழி நுட்பத்தையம் அறிந்து கொள்வதற்கு உரைக்கல்வி மிகவும் இன்றியமையாதது.

**பக்தி சமய இலக்கிய உரைகள்**

ஆழ்வார்களின் பாடல்களாகிய திவ்வியப் பிரபந்தத்தை வைணவர்கள் தங்கள் வேதம் என்று கருதினர். தென்கலை வைணவம் ஆழ்வார்களின் பாடல்களையே உயிர் என்று கொண்டு வளர்ந்து வந்தது. இப்பாடலுக்கு மரபு நிலை தவறாமல் இராமாநுசர் காலத்திலிருந்து பல உரைகள் காலந்தோறும் தோன்றின. இராமாநுசர் தம் விசிட்டாத்துவைதக் கொள்கையை, உருப்படுத்த ஆழ்வார்களின் பாடல்களை அடிப்படையாகக் கொண்டார். அப்பாடல்களுக்கு அவர் அழகான விளக்கவுரைகள் கூறினார். அவருக்குப் பின் பல வைணவப் பெரியோர்கள் தோன்றி ஆழ்வார்களின் பாடல்களுக்குப் பொருள் கூறி விளக்குவதை ஒரு பெருங்கலையாக வளர்த்து வந்தனர். அவர்கள் அனைவரும்,

-தேர்த்தெழுதி

வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும்

பூசித்தும் போக்கினேன் போது

என்ற சான்றோரின் கொள்கையைத் தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவர்கள்.

உரைகளின் சிறப்பு

ஆழ்வார்களின் பாடலுக்கு உரை இயற்றிய வைணவப் பெரியோர்கள் தாம் கற்ற கலைகள் அனைத்தையும் தம் உரைகளில் வழங்கிச் சென்றுள்ளனர். அப் பெரியவர்களின் இதய ஒலிகள் பலப்பல வகையாய் உரைகளின் வாயிலாக வெளிப்படுகின்றன. பாடல்களின் ஆழ்ந்த பொருள்களை மிக்க நயம்படப் புலப்படுத்தி எழுதியுள்ளார். மிக அரிய செய்திகளும் விளக்கங்களும், நுண்கலைச் சொற்களும் உரைகளில் பொதிந்து கிடக்கின்றன. இவ்வுரைகள் தனி இலக்கியமாகவும், வைண சமய தத்துவ விளக்கமாகவும் போற்றப்படுகின்றன. பிற்காலத்தில் வைணவர்கள் ஆழ்வார்களின் பாடல்களைவிட, உரைவிளக்கங்களையே சிறந்தவையாகக் கருதிப் பின்பற்றினர்; விளக்கம் கூறிச் சமயக் கருத்துக்களைப் பரப்ப உரைகளையே ஏற்ற சான்றுகளாகக் கொண்டனர்.

திவ்வியப் பிரபந்த உரையாசிரியர்களின் சிறப்பை டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர், “அவர்களுடைய உரையில் ஒரு பாடலுக்கு உரை கேட்டு விட்டால் மனம் வேறு ஒன்றில் செல்லாது” என்று கூறிப் புலப்படுத்துகின்றார். வியாக்கியானங்களில், வைணவ சமயத்தின் உயிர் நிலைக் கோட்பாடு, வழிவழியாகவந்த மரபுநிலை, திருமாலின் அவதார மாண்புகள், விசிட்டாத்துவைதத்தின் தத்துவ நுட்பம் ஆகியவை விளக்கப்படுகின்றன. வடமொழியில் உள்ள வேதம், உபநிடதம், புராணம், இதிகாசம் முதலியவற்றிலிருந்து கணக்கற்ற மேற்கோள்களைக் காட்டிப் பல கருத்துகள் விளக்கப்படுகின்றன. ஆழ்வார் பாடல்களின் கருத்தையும் அவற்றின் உள்ளுறைக் கருத்தையும் சமய நோக்குடன் ஆராய்ந்து தம் நுண்ணறிவு தோன்ற உரையாசிரியர்கள் விரித்துரைக்கின்றனர்.

திருமுறைகள் பன்னிரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல்கள் முதல் மூன்று திருமுறைகள். திருநாவுக்கரசரின் தேவாரப் பாடல்கள் நான்கு முதல் ஆறு திருமுறைகள். சுந்தரமூர்த்திசுவாமிகள் பாடல்கள் ஏழாம் திருமுறை. திருவாசகமும், திருக்கோவையாரும்

எட்டாம் திருமுறை. ஒன்பதாம் திருமுறை, சேந்தனார் முதலியோர் பாடிய திருவிசைப்பா திருப்பல்லாண்டு முதலியன. திருமூலர் பாடிய திருமந்திரம் பத்தாம் திருமுறை. பதினோராம் திருமுறை திருவாலவாயுடையார் காரைக்கால் அம்மையார் முதலியோர் பாடிய நூல்கள். சேக்கிழார் பாடிய பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறை.

திருமுறைகளுக்குப் பழைய உரையாசிரியர்கள் உரை எழுதாதது நம் தவக்குறைவேயாகும். "சைவ அடியார்களின் அருள் வாக்கிற்கு - சிவனருட் செல்வர்களின் திருப்பாடலுக்கு-ஆண்டவனே விரும்பிக்கேட்ட தெய்வப்பாடலுக்கு - ஆற்றல் மிகுந்த மறைமொழிக்கு எளியவர்களாகிய நாம் உரை எழுத முடியுமா? நாம் எங்கே, திருமுறை எங்கே!" என்று எண்ணி திருமுறைகளைத் தொழுது போற்றிக் கற்று, உரை எழுதாமல் முன்னோர்கள் சென்று விட்டனர்.

சைவ சமயவுலகில் திருமறைகளுக்கு உரை எழுதக் கூடாது என்ற கொள்கை பன்னெடுங்காலமாக நிலவி வந்தது. திருவாதவூரர்புராணம் கூறும் வரலாறு ஒன்று இக்கொள்கையை வற்புறுத்தப் பெருந்துணையாக இருந்தது. "தில்லைவாழ் அந்தணர் ஒருங்குகூடி, தில்லையில் எம்பெருமானைச் செப்பிய தமிழ் மாலையின் பொருளைக் கூறுமாறு மாணிக்கவாசகரை வேண்டினர் என்றும், அதற்கு அவர், அருளுக்கு இடமான செம்பொனின் அம்பலம் எய்தி 'ஒன்றிய இத் தமிழ்மாலைப் பொருள் இவர்' என்று உரை செய்து மன்றதனில் கடிதேகி மறைந்தனர்" என்றும் திருவாதவூரர் புராணம் கூறுகின்றது

ஆழ்வார்களின் பாடல்களாகிய நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திற்குப் பழங்கால உரையாசிரியர்கள் விளக்கங்கள் எழுதி அப்பாடல்களுக்குச் சிறப்பு நல்கினர். அவ்விளக்கவுரைகள் சைவ அன்பர்களின் பாராட்டுதலையும் பெற்றுள்ளன. இத்தகைய அரிய பெரிய விளக்கவுரைகள் திருமுறைகளுக்கு இல்லையே' என்ற ஏக்கம், சைவர்களிடம் ஏற்பட்டது. அதன் விளைவாக மிகப் பிற்காலத்தில்தான் திருமுறைகளுக்கு உரைகள் எழுதப்பட்டன.

திருமுறைகளில் திருக்கோவையாருக்குத்தான் பழங்காலத்தில் தோன்றிய உரைகள் இரண்டு உள்ளன. ஒன்று இயற்றியவர் பெயர் தெரியாத பழையவுரை; மற்றொன்று நல்லறிவுடைய தொல்பேராசான் எனச்

சிறப்பிக்கப்பெறும் பேராசிரியர் இயற்றியது. இவ்வுரையும் திருக்கோவையாரை ஓர் இலக்கியமாகக் கருதியே அமைக்கப்பட்டுள்ளது. திருக்கோவையாருக்குப் பேராசிரியர் உரை இயற்றியது இலக்கியப் பணியேயன்றி, சமயப் பணி என்பதற்கு இடமில்லை.

ஆழ்வார்களின் பாடல்களுக்கு வைணவ உரையாசிரியர்கள் வியாக்கியானங்கள் இயற்றிய காலத்தில் சைவப் பெருமக்கள் வேறு துறையில் பணியாற்றினர். சைவ சித்தாந்த நூல்களை இயற்றிச் சாத்திர அறிவை வளர்க்கும் பணியில் முனைந்து நின்றனர். அதன் விளைவாய்ச் சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு தோன்றின. சாத்திர நூல்கள் தோன்றிய பின்னரும், சைவப் பெருமக்கள் திருமுறைகளுக்கு உரை இயற்ற முயலாமல், சாத்திரநூல்களுக்கே தம் அறிவுத் திறனையும் ஆராய்ச்சி வன்மையையும் காட்டி உரை வகுத்தனர்.

**புறநானூறு**

புறநானூற்றுக்குப் பழையவுரை உள்ளது. இவ்வுரை 266 பாடல்கள் வரை உள்ளது. இவ்வுரையாசிரியரின் வரலாறு தெரியவில்லை. இவ்வுரையின் பல்வேறு இயல்புகளை மிக நன்றாக ஆராய்ந்து டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் எழுதியுள்ளார்.

பழைய உரையாசிரியர் ஆற்றொழுக்காகச் செய்யுளில் சொல் கிடந்தவாறே பொருள் உரைக்கின்றார். உரைநடை மிகவும் எளிமையானது. தமக்கு முன் இருந்த மற்ற உரையாசிரியர் கருத்துக்களையும், அவர்கள் கொண்ட பாடங்களையும் பல இடங்களில் குறிக்கும் இவர் அவர்களை மறுப்பதில்லை. நயங்கூறுதல், வினைமுடிபு காட்டுதல் சொற்களை வருவித்துக் கூறல் துறைகளை விளக்குதல் போன்ற பல இயல்புகள்

இவரிடம் உள்ளன. நாலடியார், திருக்குறள் போன்ற நூல்களின் செய்யுள் அடிகளை உரைநடையாக்கி எழுதுகின்றார். உலக வழக்குச் சொற்களைக் குறிக்கின்றார். உவமைகளை விளக்குகின்றார். குறிப்புப்பொருள் தருகின்றார். ஆங்காங்கே மிக அரிய இலக்கணக் குறிப்புகளைத் தருகின்றார்.

இவர், வேதங்களைப் பின்பற்றும் வைதிக சமயத்தவர். கடவுள் வாழ்த்துப் பாடல் உரையில், சிவபெருமானக்கு உரிய பொருள்களை, 'திரு' என்னும் அடைகொடுத்து, திருநுதல் திருச்சடை, திருமுடி என்கின்றார். 56 - ஆம் பாடலின் உரையில், திருமால் மேனியைத் திருமேனி என்றும், பலதேவரை நம்பி மூத்தபிரான் என்றும் முருகக் கடவுளைப் பிள்ளையார் என்றும், பிணி முகம் பிள்ளையார் ஏறும் யானை என்றும் மரபு வழுவாமல் உரைக்கின்றார்.

'நன்றாய்ந்த' என்னும் புறப்பாட்டினுள் (166), 'இகல் கண்டோர் மிகல் சாய்மார்' என்பதற்கு இவ்வுரையாசிரியர், "வேதத்திற்கு மாறுபட்ட நூல்களைக் கண்டோராகிய புத்தர் முதலாயின புறச் சமயத்தோரது மிகுதியைச் சாய்க்க வேண்டி' என்று பொருள் உரைக்கின்றார். இவர், 'இரு பெருவேந்தரும் ஐம்பெரு வேளிருமாகிய எழுவர்' என்று உரை எழுதுகின்றார். 'குழவி இறப்பினும்' என்ற பாட்டில் (74), 'கேளல் கேளிர் என்றது சிறைக் கோட்டங் காவலரை' என்று உரைக்கின்றார். 99 ஆம் பாடலில் ஔவையார் அதியமான் பனந்தார் சூடியுள்ளதாகப் பாடியுள்ளார். 'இவனுக்குப் பனந்தார் கூறியது, சேரமாற்கு உறவாதலின்' என்று சிறந்த முறையில் விளக்குகின்றார்.

சிறந்த வரலாற்றுச் செய்தியையும் இவர் புராணச் செய்தியாக்கி விடுகின்றார். 99 ஆம் பாடலில் உள்ள 'பூவார்கா' என்பதற்கு 'வானோர் இவன் (அதியமான்) முன்னோர்க்கு வரங் கொடுத்தற்கு வத்திருந்ததொரு கா' என்றார். மேலும், 195 ஆம் பாடலில் வரும் மோரியரை, 'சக்கரவாள சக்கர வர்த்திகள்; விச்சாதரரும், நாகரும் என்ப' என்று கூறி விடுகின்றார். வரலாற்று

நிகழ்ச்சியையும் புராணச் செய்தியாக்க இவர்க்கு எந்தச் சான்றுகள் கிடைத்தனவோ, தெரியவில்லை!

புறநானூற்றுப் பாடல்களில் வந்துள்ள உவமைகளைப் பொருளுடன் பொருத்திக்காட்டுவதில் இவ்வுரையாசிரியர் வல்லவர்.

புலிசேர்ந்து போகிய கல்லளை போல

ஈன்ற வயிறோ இருவே (86)

என்பதற்கு, "புலி சேர்ந்து போகிய அளை போல, அவனுக்கு என்னிடத்து உறவும் அத்தன்மைந்து என்பதாம்" என்று உரைக்கின்றார்.

ஔவையார் பாடிய 206-ஆம் பாடலில்,

மரங்கொல் தச்சர் கைவல் சிறாஅர்

மழுவுடைக் காட்டகத் தற்றே

எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே

என்ற உவமையை இவ்வுரையாசிரியர் பின்வருமாறு விளக்குகின்றார்: "பரிசிலர்க்குச் சிறாரும், கல்விக்கு மழுவும், செல்லும் திசைக்குக் காடும், சோற்றுக்குக் காட்டுள் மரமும் உவமையாகக் கொள்க".\

இத்தகைய உவமை விளக்கங்களை 13, 54, 87, 102, 109, 218 ஆகிய பாடல்களின் உரைகளில் காணலாம்.

இவ்வுரையாசிரியர் அரிய சொற்கள் பலவற்றிற்குப் பொருள் கூறுகின்றார்.

**சிலப்பதிகாரம்**

அரும்பதவுரையாசிரியர்

ஊர் பேர் தெரியாத பண்டைய உரையாசிரியரைப் பழைய உரையாசிரியர் என்று குறிப்பிடுவது, பிற்கால உரையாசிரியர்களின் வழக்கமாகும். சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியுள்ள அடியார்க்கு நல்லார் காலத்திலேயே இத்தகைய வழக்கம் இருந்திருக்கிறது. அடியார்க்கு

நல்லாருக்கு முன்னர்ச் சிலப்பதிகாரத்திற்கு ஊர் பேர் தெரியாத பழையவுரையாசிரியர் ஒருவர் இருந்தார். அப் பழையவுரையாசிரியரின் ஊர்பேர் தெரியாததாலும், அவர் இயற்றிய உரை, பெரும்பாலும் அரிய சொற்களுக்குப் பொருள் கூறுவதாய் இருப்பதாலும் அடியார்க்கு நல்லார், அவரை அரும்பதவுரையாசிரியர் என்று வழங்கினார். சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் இந்திர விழவூரெடுத்த காதை உரையில் (157), "அவைக்களத்தார் ஐந்து எனக் காட்டுவர் அரும்பதவுரையாசிரியர்" என்று கூறுகின்றார்.

'கருணாமிர்த சாகரம்' என்ற நூலை இயற்றிய மு. அபிரகாம் பண்டிதர் தம் நூலில் அரும்பதவுரையாசிரியரின் கருத்துகளைக் கூறி அவற்றைக் கூறியவர் செயங்கொண்டார் என்று குறிப்பிடுகின்றார். அரும்பதவுரையாசிரியருக்கு அப் பெரியவர் செயங்கொண்டார் என்று பெயரிடக் காரணம் என்ன என்பது விளங்கவில்லை.

காலமும் சமயமும்

அடியார்க்கு நல்லார்க்கே அரும்பதவுரையாசிரியரின் பெயர் முதலிய வரலாறு தெரியவில்லை எனின், அவரது காலப் பழமை நன்கு விளங்கும். உரையின் தொடக்கத்தில் அரும்பதவுரையாசிரியர் விநாயக வணக்கம் கூறுகின்றார்.

கரும்பும் இளநீரும் கட்டிக் கனியும்
விரும்பும் விநாயகனை வேண்டி-அரும்விழ்தார்ச்
சேரமான் செய்த சிலப்பதிகா ரக்கதையைச்
சாரமாய் நாவே தரி

என்ற வெண்பா இவரது உரையின் தொடக்கத்தில் உள்ளது. விநாயகரை வணங்கும் இவர் சைவர் என்பது உறுதி.

தமிழகத்தில் விநாயகர் வழிபாடு தோன்றிது ஏழாம் நூற்றாண்டின் இறுதியிலாகும். கி.பி. 642-இல் சிறுத்தொண்டர் மேலைச்சாளுக்கியரைவென்று அவர்களின் தலைநகரான வாதாபியிலிருந்து விநாயகரைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தார். இதன் பின்னரே விநாயகர் வணக்கம் தமிழகத்தில் பரவியது. விநாயக வணக்கம் நூலின் தொடக்கத்தில் கூறும் வழக்கம் எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பின்னரே ஏற்பட்டது.

எனவே, அரும்பதவுரையாசிரியரின் காலம் ஒன்பதாம் நூற்றாண்டிற்குப்பின் என்பது தெளிவாகின்றது.அரும்பதவுரையாசிரியர்க்கு முன்னரும் சில உரைகள் சிலப்பதிகாரத்திற்கு இருந்தன என்பது இவர் உரையால் விளங்குகின்றது. பிறர் உரைகளை ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்கின்றார் இவர்.

அரும்பதவுரையாசிரியர் ஆராய்ச்சித் தெளிவும், ஆழ்ந்த புலமையும் அமைதியான உள்ளமும், பண்பட்ட நல்லியல்பும், அரியஉழைப்பும்ம கொண்டவர் என்பதை இவரது உரை உணர்த்துகின்றது. உலகியல்அறிவு மிக்கவர் என்றும் உரை அறிவிக்கின்றது.

இவரது உரை, நூல் முழுமைக்கும் உள்ளது. எல்லா இடங்களிலும் அருஞ்சொற்பொருள் கூறுகின்றார். தேவையான இடங்களில் இலக்கணம் காட்டுகின்றார். மிகச் சில இடங்களில் வினைமுடிபு காட்டுகின்றார். தொடர்களுக்குப் பொழிப்புரை கூறுகின்றார்.

“அடியார்க்கு நல்லார் உரையில் காணப்படாத பல அரிய கருத்துகள் இவ்வுரையால் விளங்குகின்றன. இவ்வுரையில் உள்ள முடிபுகளும் பொருளும் இல்லையாயின், அடியார்க்கு நல்லாருடைய உரை இல்லாத பாகங்களுக்குப் பொருள் காண்பது அரிது” என்பார் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர்.

அரும்பதவுரையாசிரியர் மங்கல வாழ்த்துப் பாடலில் (28.9) கண்ணகியை முதலில் அறிமுகப்படுத்துவதற்குக் காரணம் கூறுகின்றார். “இவளை (கண்ணகியை) முன்கூறியது கதைக்கு நாயகியாதலின்” என்று உரைக்கின்றார்.

அரங்கேற்று காதை உரை மிக விரிவானது. அரிய விளக்கம் பல கொண்டது.

வழக்குரை காதையில் (80) ‘கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்’ என்ற அடிக்கு விளக்கம் எழுதும் போது ‘தந்தை தாய் முதலாயி னோரை இழந்தார்க்கு அம்முறை சொல்லிப் பிறரைக் காட்டலாம். இஃது அவ்வாறு வாக்கானும் சொல்லல் ஆகாமையின், காட்டுவதுஇல் என்றாள்” என்று உரைக்கின்றார்.

அரும்பதவுரையாசிரியரின் உரைநடைச் சிறப்புக்குப் பின்வரும் பகுதி நல்ல சான்றாக உள்ளது:

“வஞ்சி மூதூர் மணி மண்டபத்திடைத் தந்தையோடு இருந்துழி, அரசு வீற்றிருக்கும் திருப்பொறி உண்டென்று ஒரு நிமித்திகன் சொல்ல, முன்னோனாகிய செங்குட்டுவன் இருப்ப இவ்வாறு முறை பிறழக் கூறியது பொறாது குணவாயிற் கோட்டத்துக் கடவுளர் முன்னர்த் துறந்திருந்த இளங்கோவடிகளுக்கு, கண்ணகி வானவர் போற்றத் தன் கணவனோடு கூடியது கண்டு செங்குட்டுவனுக்கு உரைத்த குறவர் வந்து, ‘எல்லாம் அறிந்தோய்! இதனை அறிந்தருள்’ எனக்கூறிப் போக, பின்பு செங்குட்டுவனைக் கண்டு அடிகளுழை வந்த சாத்தன், அது பட்டவாறு எல்லாம் கூற, அது கேட்டு, ‘அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று என்பதூஉம், பத்தினி மகளிர் பெய்யெனப் பெய்யும் மழை என்பதூஉம், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம் இக் கதையகத்து உண்மையின், அதனை யாம் ஒரு செய்யுளாகச் செய்வோம்’ என்று சாத்தன் சொல்ல, இம் முப்பது வகைத்தாகிய செய்யுளை இளங்கோவடிகள் அருள, கூல வாணிகன் சாத்தன் கேட்டனன் என்க.”

இப் பகுதி, ஒரே வாக்கியமாய் அமைந்து, பொருள் தெளிவுடன் சொல்லோவியமாய் விளங்குகின்றது.

தமிழறிஞர் க. வெள்ளைவாரணனார் இவரது உரைத்திறனைப் பின் வருமாறு போற்றுகின்றார்:

“இதனை எழுதிய ஆசிரியர், அருஞ்சொற்களுக்குப் பொருள் உரைக்கும் நிலையிற் பதவுரையாகவும், இலக்கணக் குறிப்பும் மேற்கோளும் தந்து நூலின் பொருளை விரித்துரைக்கும் நிலையில் அகல வுரையாகவும், காப்பியத்தின் சொற்பொருள் நயங்களைச் சுருங்கச் சொல்லி விளக்குந் திறத்தில் நுட்பவுரையாகவும் நூலாசிரியரது உளக்கருத்தினை உய்த்துணர்ந்து நூலகத்து எஞ்சியுள்ள சொல்லையும் குறிப்பையும் வருவித்து உரைக்கும் திறத்தில் எச்ச வுரையாகவும் உள்ளது.”

2. அடியார்க்குநல்லார்

அடியார்க்குநல்லார் என்ற இனிய பெயரையுடையவர், சிலப்பதிகாரத்திற்கு உரை இயற்றிய சான்றோர். இவர் அரும்பதவுரையாசிரியர்க்குப் பின்னர், உரை இயற்றியவர், இவருக்கு முன்னும் சிலர் சிலப்பதிகாரத்திற்கு உரை இயற்றி இருக்கலாம் என்று கருத இடமுண்டு. பிறர் கொண்ட பாடங்களையும் உரைகளையும் இவர் ஆங்காங்கே சுட்டிச் செல்கின்றார்.

முத்தமிழ்க் காப்பியம் என்று போற்றப்பெறும் சிலப்பதிகாரத்திற்கு உரை இயற்றிய இவரை,

ஓரும் தமிழொரு மூன்றும் உலகின் புறவகுத்துச்

சேரன் தெரித்த சிலப்பதி காரத்திற் சேர்ந்தபொருள்

ஆரும் தெரிய வித்துரைத்தான்

என்று கூறுகின்றது. சிறப்புப்பாயிரச் செய்யுள் ஒன்று. 'பருந்தும் நிழலும் என, பாவும் உரையும் பொருந்த எல்லாப் பொருளும் தெரிந்து நல்லமிர்தம் பாலித்தான்' என்று மற்றொரு செய்யுள் இவரைப் போற்றுகின்றது.

பருந்தும் நிழலும்எனப் பாவும் உரையும்

பொருந்துநெறி எல்லாப் பொருளும் - தெரிந்துஇப்

படியார்க்கு நல்அமிர்தம் பாலித்தான் நன்னூல்

அடியார்க்கு நல்லான்என் பான்

என்ற செய்யுள், சிலப்பதிகாரத்திற்கு இவர் உரை இயற்றியதை உலக மக்களுக்கு நல்லமிர்தம் பாலித்ததாய்ப் போற்றுகின்றது.

அடியார்க்கு நல்லார் அவையடக்கமாக,

எழுத்தின் திறன்அறிந்தோ இன்சொற் பொருளின்

அழுத்தம் தனில்ஒன்று அறிந்தோ - முழுத்தும்

பழுதற்ற முத்தமிழன் படாற்கு உரைஇன்று

எழுதத் துணிவதே யான்

என்று கூறுவதாய் உள்ளது. ஆனால், இவர் எழுத்தின் திறன் அறிந்தவர்; இன்சொற் பொருளின் அழுத்தம் அறிந்தவர்; பழுதற்ற முத்தமிழன் பாடற்குச் செவ்விய உரை கண்டவர் என்பதை இவரது உரையே நன்கு உணர்த்தும்.

சிலப்பதிகாரத்தின் அருமை பெருமைகளை எல்லாம் இவரது உரையால்தான் தமிழகம் நன்கு அறிந்தது. இவரது உரை இல்லாமல் போய் இருந்தால் எத்தனையோ அரிய செய்திகள் வெளிப்படாமல் மறைந்து இருக்கும். முத்தமிழ் வித்தகராகிய இவர் பண்டைத் தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஊறித் திளைத்தவர்; சிறப்பாக உரை இயற்றும் திறன் வாய்ந்தவர்.

**திருக்குறள், தத்துவ உரைகள்**

தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காலிங்கர் ஆகிய ஒன்பது உரையாசிரியர்களுக்கும் காலத்தால் பிற்பட்டவர் பரிமேலழகர். இச் செய்தி,

செவ்வி முப்பாலுக்கு

ஓர்உரை யின்றி ஒன்பது சென்றும்

ஐயுற வாக நையுறு காலை

... குறட்பாத் தமிழ்மனு நூலிற்கு

விழுப்பொருள் தோன்ற விரித்தினிது உரைத்தனன்

பரிமேலழகன் எனப்பெயர் படைத்துத்

தரைமேல் உதித்த தலைமை யோனே

என்று உரைப்பாயிரம் கூறுவதால் வெளிப்படுகின்றது.

பரிமேலழகர் தமக்குமுன் தோன்றிய ஒன்பது உரைகளையும் கற்கும் வாய்ப்புப் பெற்றார். எல்லா உரைகளிலும் உள்ள நல்ல இயல்புகளை அறிந்தார். ஒவ்வொரு உரையிலும் காணப்பட்ட குறை நிறைகளை உணர்ந்தார். இதன் பயனாய் நல்லனவற்றை மேற்கொண்டு குற்றங்குறைகளை நீக்கி, சிறந்த உரை காணும் வாய்ப்பு உண்டாயிற்று.

பரிமேலழகர்க்கு முற்பட்ட உரையாசிரியர் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு சிறப்பியல்பு காணப்படுகின்றது. பாலின் தொடக்கத்தில் எழுதும் விரிவுரை, இயல்பற்றிய ஆராய்ச்சியுரை, அதிகாரம் தோறும் எழுதும் முன்னுரை, அதிகார வைப்பு முறை பற்றிய விளக்கம், அதிகாரத்திற்குள் குறட்பாக்களைப் பொருள் தொடர்போடு தொகுத்து நோக்குதல் ஆகியவற்றைப் பரிமேலழகர் நமக்கு முற்பட்ட உரையாசிரியர்களிடமிருந்து பெற்றார்.

மணக்குடவர் ஓர் அதிகாரத்திற்குள் குறட்பாக்களைப் பொருள் தொடர்போடு தொகுத்து நோக்குகின்றார். பரிமேலழகர் இம்முறையை மேற்கொண்டு புதுவிளக்கம் சில காணுகின்றார். காலிங்கர் அதிகாரம் தோறும் பத்தாவது குறளின் இறுதியில் அடுத்து வரும் அதிகாரத்திற்குத் தோற்றுவாய் கூறுகின்றார். பரிமேலழகர் இம்முறையைச் சிறிது மாற்றி அதிகாரத்தின் தொடக்கத்தில் முறை வைப்புப் பற்றி ஆராய்ச்சி நிகழ்த்துகின்றார். இவ்வாறு ஒவ்வொரு உரையிலும் காணப்படும் நல்லனவற்றை எல்லாம் மேற்கொள்ளுகின்றார் பரிமேலழகர்.

குறட்பாவுக்கு உரைஎழுதும் போதும், ஏனைய உரைகளை நினைவில்கொண்டே உரை எழுதுகின்றார். பிறர் கொண்ட வேறு பாடங்களைக் குறிப்பிடுகின்றார். பொருத்தமற்ற பாடங்களை விலக்குகிறார். தவறான உரையைக் காரணங்குறி மறுக்கின்றார். தமக்கு உடன்பாடு இல்லாத கருத்துகளைச் சுட்டிச் செல்லுகின்றார். மாறுபட்ட கொள்கையை மதிக்கின்றார். போற்றத்தகுந்த வேறுபாடுகளைப் போற்றுகின்றார்.

எல்லா உரையாசிரியர்கள் கருத்தையும் நெஞ்சத்தில் நிறுத்தி, உரை எழுகின்றார் என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன.

இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்

குலன்உடையான் கண்ணே உள

திருவள்ளுவரைப்பற்றிப் பரிமேலழகர் கூறும் கருத்துகள் மிகச் சிறந்தவை; திருவள்ளுவர் நெஞ்சத்தை அளந்து அறிந்து, புலமை மாண்பை அளவிட்டுக் கூறப்பட்டவை.

“எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுபடக் கூறுதல் இவர்க்கு இயல்பு” (322) என்று திருவள்ளுவரைப் பற்றிக் கூறுகின்றார். இங்கே கூறப்பட்ட ஒவ்வொரு சொல்லும் பொருள் ஆழம் உடையதாகும்.

முரண்பாடு நீக்கல்

ஊழிற் பெருவலி யாவுள (380)

என்று கூறிய திருவள்ளுவர்,

ஊழையும் உப்பக்கம் காண்பர் (620)

என்று கூறுகின்றார். இவை மாறுபட்ட கருத்துகளாக இருப்பதை உணர்ந்தபரிமேலழகர், “ஊழ் ஒரு காலாக இரு காலாக அல்லது விலக்கல் ஆகாமையின், பலகால் முயல்வர் பயன் எய்துவர் (குறள் - 223) என்பார் ‘உப்பக்கம் காண்பர்’ என்றார்” என்று தெளிவுபடுத்துகின்றார்.

இகல்வெல்லும் வேந்தற்கு வேண்டும்பொழுது (481)

என்ற கருத்தும்,

குடி செய்வார்க்கு இல்லை பருவம் (1028)

என்ற கருத்தும் முரண்பட்டவை அல்ல என்பதைப் பரிமேலழகர், “இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது (481) என்றது உட்கொண்டு இவர்க்கும் வேண்டுமோ என்று கருதினும் அது கருதற்க என்று மறுத்தவாறு” என்று விளக்குகின்றார்.

மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு (396)

என்ற கருத்து,

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்

உண்மை அறிவே மிகும் (373)

என்ற கருத்துடன் மாறுடுவதுபோல் தோன்றுவதை அறிந்து, “இஃது ஊழ் மாறுகொள்ளாவழியாகலின் மேல் உண்மை அறிவே மிகும் என்றதனோடு மலையாமை அறிக” என்று உரைக்கின்றார் (396).

தூங்காமை கல்வி துணிவுடமை இம்மூன்றும்

நீங்கா நிலன்ஆள் பவர்க்கு (383)

என்பதும்,

தூங்குக தூங்கிச் செயற்பால (672)

என்பதம் மாறுபாடு உடையவைபோல் உள்ளதை உணர்ந்து, "மேல் தூங்காமை என்றார் (383) ஈண்டு அதனைப் பகுத்துக் கூறினார் (672)" என்று உரைக்கின்றார்.

இத்தகைய அரிய விளக்கம் பல தந்த பரிமேலழகரை,

திருவள்ளுவர் தம் கருத்தமைதி தானேகருதி

விரித்து உரைத்தான் (பெருந் - 1544)

என்று புலவர்கள் போற்றுவர்.

உலகியல் அறிவு

பரிமேலழகர் உலக மக்களிடையே நன்கு பழகி, அவர்களின் பேச்சு, பழக்கவழக்கம் ஆகியவற்றை அறிந்திருக்கின்றார்.

மக்களைக் 'பகைவர், நட்டார், நொதுமலர்' என மூன்றாகப் பிரிக்கின்றார் (752).

வான் புகழ்

திருக்குறளுக்குப் பத்தாவது உரையாகத் தோன்றிய பரிமேலழகர் உரை மற்ற உரைகளைவிடச் செல்வாக்குப் பெற்றுப் பரவியது; ஏனைய உரைகளுக்கு இல்லாத பெருமை ஏற்பட்டது.

பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள

நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ - நூலில்

பரித்தவுரை எல்லாம் பரிமே லழகன்

தெரித்தவுரை யாமோ தெளி

என்று கற்றவர் போற்றும் சிறப்பை அவ்வுரை பெற்றது.

திருவள்ளுவரைப் போலவே பரிமேலழகர் மதிக்கப்பட்டார்; திருவள்ளுவரின் உள்ளக் கருத்தைத் தெள்ளிதின் உணர்ந்த பெரும்புலவராக அவர் கருதப்பட்டார்.

வள்ளுவன் மீளவும் வந்துஉதித்து உலகோர்க்கு

உள்ளிய பொருளை உரைத்தனன் என்ன ...

விழுப்பொருள் தோன்ற விரித்துஇனிது உரைத்தான் ...

பரிமே லழகன் எனப்பெயர் படைத்துத்

தரைமேல் உதித்த தலைமை யோனே.

காலம்தோறும் கற்றவர் போற்றும் சிறப்பைப் பெற்று வந்த பரிமேலழகர் உரை, இக் காலத்திலும் அறிஞர்களின் பாராட்டுதலைப் பெற்றுள்ளது.

"திருக்குறளின் பெருமையை ஆராய்ந்து அதன் கருத்துக்களை நுட்பமாக உணர்ந்து, அதற்கு ஓர் அரிய உரை இயற்றி அதன் புகழை வளர்த்தவர் பரிமேலழகர்".

"திருவள்ளுவரது திருக்குறள், பரிமேலழகியாரது உரையாகிய புணையைக் கொண்டுதான், இடைக்காலமாகிய கருங்கடலைக் கடந்து நம் காலம் எனும் கரைக்குச் செவ்வனே வந்து சேர்கின்றது".2

"திருவள்ளுவர் ஏடும் அதற்குரிய பரிமேலழகர் உரையும் இரண்டுமே தத்தம் கட்டுக்கோப்புடையவையாய் அமைந்துள்ளன. இதுநாள்வரை திருவள்ளுவரின் கட்டுக்கோப்புக்கு ஒப்பான கட்டுக்கோப்புடன் கட்டி எழுதப்பட்ட ஒரே உரை, பரிமேலழகர் உரைதான் என்று கூற வேண்டும்.

வினாக்கள்

1. சங்க இலக்கிய உரைகளை பற்றி எழுதுக.
2. அற இலக்கிய உரைகளை விளக்குக.
3. காப்பிய உரை மற்றும் உரையாசிரியர்களை விளக்குக.
4. புராண, பக்தி இலக்கிய உரைகளை வரையறுக்க.
5. சிற்றிலக்கிய உரைகளை எழுதுக.
6. சமய இலக்கிய உரைகளை விளக்குக.
7. புறநானூறு உரைகள் பற்றிஎழுதுக.
8. சிலப்பதிகார,திருக்குறள் உரை மற்றும் உரையாசிரியர்கள் பற்றி கட்டுரை வரைக.

# அலகு 4

## உரை ஆய்வுகள்

### உரை வளம், உரை கொத்து, தொகுப்புரைகள்

இலக்கியம் என்பது படைக்கப்படுவது. அது ஒரு கலைவடிவம். உரை என்பது அறிவு சார்ந்தது ; இலக்கியத்தைப் பிறர்க்கு விளக்குவது ; இலக்கியம் பற்றிப் பேசுவது. உரை என்ற சொல், வளம் நிறைந்தது. அது, மூன்று நிலைகளில் பயன்படுகிறது அல்லது பொருள்படுகிறது. தமிழின் மிகப் பழைய இலக்கணமாகிய தொல்காப்பியத்திலேயே இதனைக் காணலாம். உரை - உரைத்தல் ; சொல்லுதல் (To tell); இதுதான் அடிப்படையான பொருள். அடுத்து, உரை - உரைநடை (prose) . மூன்றாவதாக உரை - விளக்கம் ; இலக்கியம் அல்லது இலக்கணத்தை விளக்குவது (Commentary).

நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்

- (தொல்காப்பியம்,கற்பியல்-12)

என்று வருகிற இடத்தில் சொல்லு-கூறு என்ற பொருளில் உரை என்ற சொல் இடம் பெறுகிறது. இதுவே பெரும்பான்மையான வழக்கு. அடுத்து, இச்சொல் உரைநடை (prose) என்ற பொருளிலும் தொல்காப்பியரால் பயன்படுத்தப் படுகிறது. செய்யுளியல் என்ற பகுதியில் (சூத்திரம் 157, 158), அடிவரையறையில்லாச் செய்யுள்கள் ஆறு என்று சொல்லி, அவற்றுள் ஒன்றாக, உரை என்பதை அவர் சொல்லுகிறார். பாடல் முழுவதும் பாட்டாக அல்லாமல் இடையிடையே குறிப்பாகவும் விரிவாகவும் இடம் பெறுவது உரை என்பது அவர் கூற்று.

பாட்டிடை வைத்த குறிப்பி னானும்

பாவின் றெழுந்த கிளவி யானும்

பொருள்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்

பொருளாடு புணர்ந்த நகைமொழி யானும்

உரைவகை நடையே நான்கென மொழிப

- (செய்யுளியல்-166)

இவ்வாறு உரை அல்லது உரைநடை அமைகிறது என்பதுதான் உரைநடையின் தொடக்கப் பண்பு ஆகும். சிலப்பதிகாரம், 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்று அதன் பதிகம் கூறுகிறது. உரைநடையின் வரலாறு இவ்வாறு அமைகிறது ; அது தனியாகப் பார்க்கத் தகுந்தது.

அடுத்து, உரை என்பது, விளக்கம் அல்லது புலப்பாடு என்ற பொருளில், மரபியலில் தொல்காப்பியர் பேசுகிறார். சூத்திரத்தின் உட்பொருளைப் பேசுவது உரை ; உட்பொருள் மட்டுமல்லாது, இன்றியமையாத கருத்துகளையும் பேசுவது உரை ; மேலும் 'ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்குவது உரை' என்று தொல்காப்பியர் சொல்கிறார் (மரபியல் 105, 106).

இம்மூன்று பொருள்களையும் தொகுத்து, "உரைத்தல் - உரைநடையில் உரைத்தல் - இலக்கியம் அல்லது இலக்கணத்தின் உட்பொருளையும் அதனைச் சார்ந்த வேறுபொருட்களையும் செவ்விதின் உரைத்தல் அல்லது விளக்குதல்" உரை என்று சொல்லலாம். உண்மையில் இதுதான் திறனாய்வுக்கும் உரிய அடிப்படையான வரையறையாகும்.

நூல் தோன்றியதற்குக் கதை உள்ளதுபோலவே உரை தோன்றியதற்கும் கதை உள்ளது.

சோமசுந்தரக் கடவுள் வழங்கிய அகப்பொருள் இலக்கணத்தைப் பாண்டிய மன்னன் பெற்றபின், சங்கப் புலவர்களை அழைத்து, அதற்குச் சிறந்த உரை ஒன்று எழுதுமாறு வேண்டினான். சங்கத்தில் இருந்த புலவர்கள் எல்லாரும் உரை எழுதி, தாம் உரைத்த உரையே நல்லதென்று கூறினர். அதனால் நல்ல உரையினைத் தேர்ந்தெடுக்கக் காரணிகன் ஒருவனைத் தரவேண்டும் என்று புலவர்கள் பாண்டிய மன்னனை வேண்டினர். மன்னன், அப்புலவர்களுக்கு நிகராவரர் யாரும் இல்லை என்று கூறிக் காரணிகளை நியமிக்க இயலாமல் வருந்தினான். பின்னர் அப் புலவர்கள், எவ்வாறு சிறந்த உரையைத் தேர்ந்தெடுத்தனர் என்பதைப் பின்வருமாறு களவியலுரை கூறுகின்றது.

முப்பாலுக்கு அப்பால் ஒரு நூல் இல்லை" என்று கூறும் அளவிற்கு அனைத்துப் பொருட்களையும் எஞ்சாது உரைத்த பெருமைக்குரியது திருக்குறள். அறம், பொருள், இன்பம் என இந் நூல் பகுத்துரைக்கும் பொருட்கள் இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு மொழிபேசும் மக்களும் படித்துப் பயன்பெறத்தக்கவையாதலால் தேசிய இலக்கியமாகக் கருதத்தகும் சிறப்புடையது.

திருக்குறளுக்கு எழுந்த பழைய உரைகள் பத்தும் இக்கருத்தினை அரண் செய்யும். தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிமேலழகர், பருதி, திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர் என்ற பதின்மரைத் திருக்குறளின் உரையாசிரியர்களாக ஒரு வெண்பா கூறுகின்றது. இவர்களேயன்றி வேறுசில உரையாசிரியர்களும் இருந்துள்ளனர். இக்காலத்தும் பலர் உரை எழுதி வருகின்றனர். குறட்பாவினை அப்படியே எடுத்தமைத்து வேறு இரண்டு அடிகளை விளக்கமாக அமைத்துச் செய்யப்பெற்ற நூல்களும் உண்டு. இவ் வகையில் எழுந்தனவாகப் பதினான்கு நூல்கள் காணப்படுகின்றன. இவையெல்லாம் ம க் க ளு க் குத் திருக்குறளின்பாலுள்ள ஈடு பாட்டினைப் புலப்படுத்துகின்றன.

திருக்குறள் உரையாசிரியர்களுள் பரிமேலழகர் காலத்தால் பிற்பட்டவரெனினும் அவர் உரையினையே பெரும்பான்மையினர் படித்து இன்புறுகின்றனர். அனைத்து உரைகளையும் ஒருசேர ஒப்பிட்டுப்பார்க்கும் நிலையில் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் உரைவளப் பதிப்பினைக் கொண்டு வந்துள்ளார். கள். உரைவளத்தை அடியொற்றி **உரைக் கொத்து**" என்னும் பெயரில் திருப்பனந்தாள் ஆதீனம் ஒருபதிப்பைக் கொண்டு வந்தது.

### மதிப்பீடுகள்

### உரை திறனாய்வு

புலமை நூல் என்னும் சிறந்த ஆய்வு நூலை இயற்றியுள்ள வி.நா. மருதாசலக் கவுண்டர், பண்டைய உரையாசிரியர்களைத் திறனாய்வாளர்கள் என்றும், உரைகள் யாவும் திறனாய்வு நூல்கள் என்றும் விளக்கியுள்ளார்:

உரைகள் வேண்டினர். அவ் வுரைகல்லே தமிழில் மதிப்பீடு அல்லது மதிப்புரை எனப்படுகின்றது."

"உரையாசிரியர்கள் மதிப்பீட்டு முறையில் (திறனாய்வில்) மிக மேம்பாடுற்றனர். அன்னார், பயில்வார்க்குத் தத்தம் கருத்துக்களை அறிவியலாதவழி காட்சியளித்தும், பலவேறு கருத்துக்களில் துணிவான கருத்துக்களைக் கூர்ந்தறியும் நெறிமுறைகளைச் சுட்டிக் காட்டியும் மதிப்பீட்டுக் கோட்பாடுகளை (Principles of criticism) உலகறிந்து வியக்கச் செய்தனர்."

தமிழ் இலக்கணக் கொள்கைகளைத் தமிழ் இலக்கியத்திலிருந்து உருவாக்குவதுபோல், தமிழுக்குத் தேவையான திறனாய்வு நெறிகளைத் தமிழிலிருந்தே எடுத்து உருவாக்க வேண்டும்.3 இக் கருத்துடைய எவரும் பழைய உரைகளில் திறனாய்வுக் கூறுகளைக் கண்டு போற்றுவர்; உரையாசிரியர்களைத் திறனாய்வாளர்கள் என்று மதிப்பர்.

உரையாசிரியர்கள், கவிதையைச் சுவைக்கும் முறை, தாம் சுவைத்த முறை, சுவைத்தபோது தமக்கு ஏற்பட்ட இலக்கிய அனுபவம் ஆகியவற்றைத் தம் உரைகளில் கூறியுள்ளனர். இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்ட புலவர்கள் தம் ஆராய்ச்சி முடிவுகளை, உரைகளின் வாயிலாக வெளிப்படுத்தினர். தம் ஆராய்ச்சிக்கு, அகலவுரை விரிவுரை விருத்தி வியாக்கியானம் முதலிய பெயர்களைச் சூட்டினர். இன்றைய திறனாய்வுத் துறையில் எத்தனை பிரிவுகளும் வகைகளும் உள்ளனவோ அவற்றின் அடிப்படையை - உயிர்ப்பண்பை - மூலவடிவத்தைச் சுருக்கமாக உரைகளில் காணலாம்.

உரையாசிரியர்கள், கற்போரை மேன்மேலும் ஆராயத் தூண்டுகின்றனர்; வினாக்களைத் தாமே எழுப்பிக் கொண்டு விடை கூறுகின்றனர்; ஐயந்தோன்ற வேண்டிய இடங்களைச் சுட்டிக் காட்டுகின்றனர்; ஐயங்களைப் போக்கி அறிவை வளர்க்கின்றனர்.

“உயர்தர நூல்களெல்லாம், அறிவென்னும் செம் பொன்னால் ஆக்கப்பட்டு இயல்பான உரையாணியால் ஒளி வீசப்படுவன. நூலின் மாற்றினைக் காண்பதற்கு நல்லாசிரியர்கள் டாக்டர் மு.வரதராசனார், பண்டைய உரைகளையும் திறனாய்வையும் தொடர்புபடுத்திச் சிறந்த கருத்துக்களைக் கீழ் உள்ளவாறு கூறுகின்றார்:

“இலக்கியம் தோன்றியவுடனே ஆராய்ச்சியும் தோன்றியது. தமிழ் இலக்கிய ஆராய்ச்சி பழமையானது. இலக்கிய விருந்தை நம் முன்னோர்கள் வாரி வழங்கியுள்ளனர். தலைமுறை தலைமுறையாக-வழிவழியாக அதை நாம் பார்த்து நுகர்ந்து வருகிறோம். எழுத்தினால் எழுதிவைக்கும் பழக்கும் பிற்காலத்தில் ஏற்பட்டதே என்றாலும், ஆராய்ச்சி தொன்று தொட்டு இருந்து வருகிறது. பாட்டை, ஆராய்ச்சியாளர் புகழ்ந்தனர். அதை உலகிற்கு விளம்பரப்படுத்த முயன்றனர். உரையாசிரியர்கள் ஒருபடி முன்னே போய் இது தங்கள் கருத்து, இது இதரர் கருத்து என்று காட்டினர்.

விருப்பு வெறுப்பு அற்ற நிலையில் இருந்து, ஆராய்ச்சியில் ஈடுபட்டு, குற்றமும் குணமும் நாடி மதிப்பிட்ட திறனாய்வாளர்கள் உரையாசிரியர்கள். சமயப்பற்று மிகுந்திருந்த காலத்தில்-சமயமே வாழ்வின் உயிர் என்று கருதிய மக்கள் நடுவில்-தம்மை ஆதரிக்கின்ற புரவலர் கருத்திற்கு மாறுபடும் சூழலில் வாழ்ந்து கொண்டு உரையாசிரியர்கள் நடுநிலைமை தவறாமல் திறனாய்வுப் பணியாற்றினர்.

சிலப்பதிகாரத்திற்கு உரை கண்ட அரும்பத வுரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் எல்லாச் சமயத்தையும் ஒரே வகையாய் நோக்கி, அந்த அந்தச் சமயங்களுக்குரிய தெய்வங்களையும் சமயச் சான்றோர்களையும் போற்றி மரபு மாறாமல் உரை எழுதியுள்ளனர். சைவராகிய நச்சினார்க்கினியர்

ஜைன காப்பியமாகிய சீவகசிந்தாமணிக்கு மிகச் சிறந்த உரை எழுதினார். ஜைனப் புலவர் பவணந்தியாரின் நன்னூலுக்குச் சைவராகிய சங்கர நமசிவாயரும் சிவஞான முனிவரும் நல்லுரை கண்டுள்ளனர்.

உரையாசிரியர்கள், தாம் எந்தச் சமயத்தவர் ஆயினும் தாம் உரை எழுத மேற் கொண்ட நூல்களின் சமயக் கருத்துக்களைத் தெளிவாக அறிந்து விளக்கினர்.

உரையாசிரியரின் பல உரைகள் பற்றிய ஆய்வு வரலாறு

இருபதாம் நூற்றாண்டில் டாக்டர் உ,வே. சாமிநாத ஐயர் நடுநிலைமை தவறாதவராய் விளங்கினார். தாம் சைவராய் இருந்தும் பல வேறு சமய நூல்களைப் பதிப்பித்தார். அந் நூல்களில் உள்ள சமயக் கருத்துக்களை அறியப் பெரிதும் முயன்றார்; நன்றாக அறிந்து தெளிவு பெற்ற பின்னரே விளக்கம் எழுதினார். அவர் பதிப்பித்த நூல்களில் சீவக சிந்தாமணி, நன்னூல் மயிலை நாதர் உரை ஆகியவை ஜைன சமயத்தவர் படைத்தவை. மணிமேகலை பௌத்த சமய நூல். இவற்றில் பிற சமயத்தவர் கொள்கைகளை மறுக்கும் இடங்கள் பல உள்ளன. இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல் அவற்றிற்கு விளக்கம் எழுதிப் பதிப்பித்தார். டாக்டர் உ.வே.சா. தலைசிறந்த சைவப் பெரியாரிடம் கல்வி பயின்றவர்;

மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

நூல், பண்பட்ட ஆய்வுத் திறனைப் புலப்படுத்துகின்றது. பெயரை நோக்கும்போது இந்நூல் உரையாசிரியர்களின் வரலாறுகள் எனக் கருதச் செய்கின்றது. உண்ணுழைந்து ஆராய்வார்க்கு இஃது உரையாசிரியர்களின் கருத்துக் கருவூலமாமென்பது புலனாம். இதன் தெளிந்த உரை நடை, நடை பயிலும் கல்லூரி மாணவர்க்கும் பிறர்க்கும் நன்மாதிரியாய் அமைந்துள்ளமை பெரிதும் பாராட்டத் தக்கது.

இதுகாறும் உரையாசிரியர்களின் அளப்பருஞ் சிறப்பினை ஆய்ந்து தெரிவிக்கும் நூல், வெளிவாராப் பெருங்குறையை இந்நூல் நீக்குவதுடன், அரும்பொருள் பலவற்றையும் அள்ளி வழங்கும் வள்ளன்மை யுடையதாயும் திகழ்கின்றது. மலர்தோறும் சென்று மணங்கமழ்தேனைச் சேகரித்துப் பக்குவப்படுத்திப் பலர்க்கும் பயன்படச் செய்யும் தேனீயின் முயற்சியை மானும் செவ்விய முயற்சியை எவ்வயினோரும் போற்றுவர் என்பது திண்ணம்.

சுருங்கக் கூறின், எதிர்கால ஆராய்ச்சியாளர்க்குக் கருவி நூல்களுள் ஒன்றாகத் திகழும் இந்நூலெனல் சாலவும் பொருந்தும்.

மு. சண்முகம் பிள்ளை

தமிழ் நூற்பரப்பில் உரை நூல்கள் சிறப்பிடம் பெறுகின்றன. காலத்தால் முற்பட்ட நூல்களையெல்லாம் வாழவைக்கும் ஓர் அருமருந்தாக இவை திகழ்கின்றன.

இறையனார் களவியல் உரையாசிரியர் முதலாக இன்று வாழும் உரையாசிரியர்கள் வரையில் உள்ள பற்பல வகையான நூலுரையாசிரியர்களையும் இந் நூலாசிரியர் அரிதின் ஆராய்ந்து பற்பல செய்திகளையும் புதிய கோணத்தில் அமைத்துத் தந்துள்ளார். உரையாசிரியர் ஒவ்வொருவருடையவும் உரைகளை இவர் நன்கு ஊன்றிக் கற்று, அவ்வவற்றில் காணும் தனியியல்புகளையும் ஒப்புமைப் பகுதிகளையும் பிறவியல்புகளையும் வகுத்துத் திறம்பட விளக்கிச் செல்கிறார். முந்திய ஆராய்ச்சியாளர் கொண்ட முடிவுகளையும் உரிய இடங்களில் எடுத்துக் காட்டியுள்ளார்.

உரையாசிரியர்கள் என்னும் இவ்வாய்வு நூலைப் பொதுப்பகுதி, சிறப்புப் பகுதி என இரு பகுதியாக ஆய்வாளர் பகுத்துக் கொண்டுள்ளார். பொதுப் பகுதியில் உரை வளர்ந்த வரலாறு, உரையாசிரியர் தந்த உரை வகைகள் அவற்றின் பொதுவியல்புகள் ஆகியவற்றை ஆராய்ந்துள்ளார். சிறப்புப் பகுதியில் உரையாசிரியர் பரம்பரையை முதல் வழி சார்பு நூல் வகையில் பகுத்துக் காட்டத் தக்கனவற்றை வகுத்துணர்த்தியும், உரைவேற்றுமைகளையும் மேற்கோள் பாடல்களையும் விளக்கியும் செல்கிறார்.

**உரைகளைப் பற்றி ஆராய்ந்தவர்கள்**

இலக்கண உரையாசிரியர்கள் இலக்கிய உரையாசிரியர்கள் சமய நூல் உரையாசிரியர்கள் எனப்பாகுபாடு செய்து கொண்டுள்ளமை இந் நூலின் ஒருதனிச் சிறப்பாகும்.

இங்ஙனம் வளர்ச்சி பெற்றுவரும் உரை நூல்களை இயற்றிய ஆசிரியர்கள் மிகப்பலராவர். இடத்தானும் காலத்தானும் வேறுபட்ட இவ்வுரையாசிரியர்களின் வரலாறு முழுமையானதாக இதுகாறும் வெளிவராதது தமிழ் மொழிக்கு ஒரு குறையாகவே இருந்தது. அந்த குறை நீங்கத் திரு மு.வை. அரவிந்தன், 'உரையாசிரியர்கள்' என்ற பெயரால் ஒரு விரிவான அரிய ஆராய்ச்சி நூலைத் தந்துள்ளார்கள். இறையனார் களவியல்

உரையாசிரியர் முதலாக இன்று வாழும் உரையாசிரியர்கள் வரையில் உள்ள பல உரையாசிரியர்களைப் பற்றியும் தம் நுண்மாண் நுழைபுலங் கொண்டு ஆராய்ந்து அரிதின் இயற்றிய இவர், உரையாசிரியர் ஒவ்வொருவரைப் பற்றியும் நன்கு ஆராய்ந்துள்ளார். ஓர் உரையாசிரியரைப் பற்றிக் கூறும் போது அவரைப்பற்றி இதுவரையில் யார் யார் என்னஎன்ன கூறியுள்ளார் என்பதை எல்லாம் பல நூற்சான்றுகள் கொண்டு விளக்கிச் செல்கின்றார். ஒவ்வொருவரைப் பற்றியும் பல கோணங்களில் ஆராய்ந்துள்ளார். உரை எழுதிய ஆசிரியரின் நுட்பமான கருத்துக்கள், பழைய இலக்கியங்களின் கருத்துக்களையுணர்தற்கு எப்படி உதவுகின்றன என்பதையெல்லாம் அரிய மேற்கோளுடன் விளக்கியுள்ளார். உரை நூல்கள் நமக்கு எப்படிச் சிறந்த பயனை அளித்து வருகின்றன என்பதை இவர் ஒன்பது வகைப்படுத்தி விளக்கியுள்ள முறை போற்றுதற்குரியதாகும்.

நச்சினார்க்கினியர் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் "யாத னுருபிற் கூறிற் றாயினும், பொருள் செல் மருங்கின் வேற்றுமை சாரும்" (சொல்-107) என்ற சூத்திரத்தின்கீழ், 'கொக்கினுக்கொழிந்த தீம்பழம்' என்புழியும், கொக்கினின்றும்- என ஐந்தாவதன் பொருளாயிற்று' என்று உதாரணங்காட்டி விளக்கியுள்ளார். இதனால்,

கொக்கினுக் கொழிந்த தீம்பழம் கொக்கின்

கூம்புநிலை யன்ன முகைய ஆம்பல்

தூங்குநீர் குட்டத்துத் துடுமென வீழும

(நற்றிணை - 280)

என்ற செய்யுட்பகுதி எப்படித் தெளிவுபெற்றுள்ளது என்பதை இவர் விளக்கத் தவறவில்லை. 'கொக்கு வந்து இருந்ததனால் கிளை அசைதலின் உதிர்ந்த இனிய மாங்கனியானது ஆழமான நீரிலே துடுமென வீழாநிற்கும்' என்று நற்றிணையுரையில் எழுதியுள்ளதையும் மேற்குறித்த நச்சியனார்கினியரின் இலக்கணக் குறிப்பையும் இணைத்து நோக்கி இவர் கூறும் முடிவு சிறப்பாக அமைந்துள்ளது. "கொக்கு வந்து உட்கார்ந்ததால் மாங்கனி வீழ்ந்தது என்று கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை; கொக்கு என்ற சொல்லுக்கு மாமரம் என்ற பொருள் உண்டு.'மாமரத்திலிருந்து உதிர்ந்த இனிய பழம்' என்ற நச்சினார்க்கினியரின் குறிப்பின்படி பொருள் கொள்வதே பொருத்தமாகவுள்ளது. இத்தகைய சிறந்த பொருள் விளக்கத்திற்கு நச்சினார்க்கினியர் உரை பேருதவி புரிகின்றது" என்ற இவர் விளக்கம் தெளிவுடையதாக - பொருத்தமுடையதாக உள்ளது.

இறையனார் அகப்பொருள் உரையாசிரியரைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ள கருத்துகள் நம்மைமேலும் சிந்திக்கத் தூண்டுகின்றன.

டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர்: "இறையனார் அகப் பொருளுக்கு இப்பொழுதுள்ள உரை நக்கீரரால் இயற்றப் பட்டதன்று. சிலப்பதிகாரப் பாடல்கள் அதில் மேற்கோள்களாக வந்துள்ளன. ஆகையால், நக்கீரர் அதை இயற்றியிருக்க மாட்டாரென்று நினைக்கிறேன். அவர் மாணாக்கர் பரம்பரையில் உரை மட்டும் வந்ததென்று தோற்றுகின்றது. மேற்கோள்கள் பிற்காலத்து ஒருவரால் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்".

தஞ்சை சீனிவாசப் பிள்ளை: "ஊர் பெயர் தெரியாத ஒருவரால் களவியலுரை பிற்காலத்து எழுதப்பட்டது என்றும், நக்கீரர் எழுதியது அன்று என்றும் புலப்படும்"

டாக்டர் மு. வரதராசனர்: "இறையனார் அறுபது சூத்திரங்களில் களவியல் என்ற அகப்பொருள் இலக்கணம் எழுதினார். நக்கீரர் என்னும்

பெயர் பூண்ட பிற்காலப் புலவர் ஒருவர் இதற்கு விரிவான உரைந எழுதியுள்ளார்.

இவ்வுரை, பலவிடங்களில் தான் தோன்றிய காலத்து மக்களின் வாழ்க்கை, நாகரிகம், அரசியல், பழக்கவழக்கம் ஆகியவற்றைக் குறிக்கின்றது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்து, தமிழ்த்தொண்டு ஆற்றிய டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகிய மூன்றிற்கும் ஆராய்ச்சி உரை இயற்றியுள்ளார்.

பின்னங்குடி ச. சுப்பிரமணிய சாஸ்திரியார் சொல்லதிகாரத்திற்கு உரை இயற்றியுள்ளார். இவ்வுரையில் வடமொழி இலக்கணக் கொள்கையை வலிந்து புகுத்திய இடங்களும், தமிழ் மொழி மரபுடன் பொருந்தாத முடிபுகளும் உள்ளன.

தொல்காப்பியத்தையும், உரைகளையும் பதிப்பித்த போது அடிக் குறிப்பாகப் பல அரிய ஆராய்ச்சிக் குறிப்புரைகளைப் பலர் எழுதியுள்ளனர்.

இளவழகனார், சி. கணேசையர் இருவரும் தொல்காப்பியம் முழுமைக்கும் குறிப்புரை எழுதியுள்ளனர். எழுத்ததிகாரத்திற்கு ஞா. தேவநேயப் பாவாணரும், சொல்லதிகாரத்திற்கு ஆ பூவராகம் பிள்ளையும், கு. சுந்தரமூர்த்தியும் குறிப்புரையும் விளக்கமும் எழுதியுள்ளனர்.

இக்காலத்தில் தொல்காப்பிய ஆராய்ச்சி நூல்களிலும் பல உரைவிளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. மு. இராகவ ஐயங்கார் இயற்றிய பொருளதிகார ஆராய்ச்சி, கா. சுப்பிரமணிய பிள்ளை இயற்றிய பழந்தமிழர் நாகரிகம் (பொருளதிகார ஆராய்ச்சி), கி. வா. ஜகந்நாதன் எழுதிய பயப்படாதீர்கள் (எழுத்ததிகார விளக்கம்), வாழும் தமிழ் (சொல்லதிகார ஆராய்ச்சி), வெங்கடராஜீலு ரெட்டியார் எழுதிய எழுத்திகார ஆராய்ச்சி, க. வெள்ளைவாரணனார் எழுதிய தொல்காப்பியம், லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார் இயற்றிய தொல்காப்பியச் செல்வம், சி. இலக்குவனார் இயற்றிய

தொல்காப்பிய ஆராய்ச்சி ஆகிய நூல்கள் குறிப்பிடத் தகுந்தவை. தமிழறிஞர் சுப்பு ரெட்டியாரும் புலவர் குழந்தையும் பொருளதிகாரத்திற்குச் சிறந்த முறையில் ஆய்வுரை எழுதியுள்ளனர்.

இளம்பூரணர் உரை, சேனாவரையரும் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் மிக நயமாகத் தொல்காப்பியத்திற்கு உரை எழுத உறுதுணையாய் அமைந்தது. தொல்காப்பியம் போன்ற பழம்பெரும் இலக்கண நூல்களுக்கு, அவை தோன்றிப் பல நூறு ஆண்டுகள் கழிந்த பின்னர் முதன் முதலில் உரை காண்பது எளிய செயல் அன்று. தகுதி வாய்ந்த ஒருவர் உரை கண்டபின், அவரைப் பின்பற்றி வேறு உரை கண்டு விளக்கம் எழுதுதல் அரிய செயல் அன்று. இளம்பூரணர்க்குப் பின் தொல்காப்பியத்திற்கு உரை கண்ட சேனாவரையர் நச்சினார்க்கினியர் முதலியோர் இவர் உரையினைப் போற்றி, பல முறை பயின்று தெளிவு பெற்று, இவருடைய புலமைச் சிறப்பை நன்கு உணர்ந்துள்ளனர்; இவரிடம் பெருமதிப்புக் கொண்டவராய் இருக்கின்றனர். தொல்காப்பியம், மாபெரும் நூலாக இன்று இத்துணைச் சீரும் சிறப்பும் எய்தித் திகழ இவரது உரை துணை செய்தது என்று கூறுவது வெறும் புகழ்ச்சியன்று.

இளம்பூரணர் ஒருவரே ‘உரையாசிரியர்’ என்ற சிறப்புப் பெயரால் தமிழிலக்கிய உலகத்திற்கு அறிமுகமானவர். இவரது பெயரைக் கூறாமல், உரையாசிரியர் என்றே சேனாவரையர் நச்சினார்க்கினியர் முதலியோர் குறிப்பிடுகின்றனர். அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தில் வேனிற்காதையின் தொடக்கத்தில் “உரையாசிரியரான இளம்பூரண அடிகள்” என்று குறிப்பிடுவதால், இளம்பூரணரே உரையாசிரியர் என்று உணரலாம்

இளம்பூரணர் இரண்டு சூத்திரங்களாக அமைத்தவற்றைப் பின்வந்தோர் ஒன்றாகவே எழுதி உரைகண்டனர்; ஒன்றாகக் கொண்டதைப் பிரித்து இரண்டாக்கியதும் உண்டு.

எழுத்ததிகாரம் பிறப்பியலுள் (19.20),

‘எல்லா எழுத்தும்,’ என்றும் ‘அஃதிவண் நுவலாது’ என்றும் தனித்தனியே இளம்பூரணர் பிரித்து உரை கண்டவற்றை நச்சினார்க்கினியர் ஒரே

சூத்திரமாக்கி, உரை எழுதுகின்றார். இத்தகைய எடுத்துக்காட்டுகள் பலவற்றை தரலாம்.

பல சூத்திரங்களை அடுத்து அடுத்து எழுதிக்கொண்டு "இவை, உரை இயைபு நோக்கி ஒன்றாய் எழுதப்பட்டன" என்று இளம்பூரணர் எழுதிச் செல்வதும் உண்டு. (சொல்: 173-176; 223, 224; 337, 338.) மரபியலில் (35),

'மக்கள் தாமே ஆறறி வுயிரே' என்ற நூற்பாவிற்குப் பின், 'ஒருசார் விலங்கும் உளஎன மொழிப' என்ற நூற்பா இளம்பூரணர் உரையில் மட்டும் உள்ளது.

இளம்பூரணர் தொல்காப்பியத்தின் முதல் உரையாசிரியர் ஆதலின், இவர் கொண்ட சில பாடங்கள், மிகப்பழமையானவை; அப்பாடங்களே சிறந்தவை.

சில சொற்களில் இரண்டொரு எழுத்துகள் மாறிவிடுவதால், சூத்திரங்களின் பொருளே பெரிதும் வேறுபட்டுவிடுகின்றது. எனவே, பாட வேறுபாடுகளில் கருத்துச் செலுத்தி உண்மையான பாடத்தைத் துணியும் கடமை நமக்கு ஏற்பட்டுள்ளது. பாட வேறுபாடுகள், பொருளதிகாரத்தில் மிகுதியாகப் பொருளை வேறுபடுத்திவிடுகின்றன.

இளம்பூரணர், தொல்காப்பியரைப் பற்றிக் கூறும் கருத்துகள் வரலாற்றுக்குப் புதிய ஒளி தரவல்லவை.

அகத்தியர் சூத்திரங்கள் என்று சிலவற்றை இளம்பூரணர் சிலவிடங்களில் காட்டி இருப்பினும் அகத்தியரையும் தொல்காப்பியரையும் இணைத்து எந்தக் கதையையும் புனைந்துரைக்கவில்லை. "தொல்காப்பியர் அகத்தியரின் பன்னிரு மாணாக்கருள் ஒருவர்; பன்னிரு மாணாக்கரும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இயலாக இயற்றித் தொகுத்த நூல், பன்னிரு படலம் என்னும் புறப்பொருள் இலக்கண நூல்; அத்தொகுப்பு நூலுள் முதல் படலமாகிய வெட்சிப் படலத்தை இயற்றியவர் தொல்காப்பியர்" என்பவை போன்ற கதைகளை இளம்பூரணர் நம்பவில்லை. இவர் காலத்தில்

அத்தகைய கதைகள் நாடெங்கும் பரவி இருந்திருக்க வேண்டும். இளம்பூரணர் புறத்திணை இயலின் தொடக்கத்தில் பன்னிரு படலம் தொல்காப்பியத்திற்கு மாறுபட்டது என்பதை விளக்கப் பல காரணங்களைக் கூறுகின்றார். மேலும் தொல்காப்பியர் இயற்றியதாகக் கூறப்படும் வெட்சிப் படலம், தொல்காப்பியர் புறத்திணை இயலோடு முரண்படுவதையும் காட்டி, "பன்னிரு படலத்துள் வெட்சிப் படலம் தொல்காப்பியர் கூறினார் என்றல் பொருந்தாது" (புறத்-2) என்று தெளிவுபடுத்துகின்றார்.

இளம்பூரணருக்குப் பின்வந்த உரையாசிரியர்கள் அனைவரும் தொல்காப்பியரையும் அகத்தியரையும் இணைத்துக் கதைகளைப் புனைந்து கூறிவிட்டனர்.

வினாக்கள்

1. உரை வளத்தை ஆராய்க.
2. உரை மற்றும் உரையாசிரியர்களை மதிப்பிடுக.
3. உரையின் வரலாற்று பின்னணியை எழுதுக.
4. உரையாசிரியரின் உரைகள் பற்றிய ஆய்வை விளக்குக.
5. உரை பற்றிய ஆய்வுகளை மதிப்பிடுக.

## அலகு 5

## உரை ஆளுமைகள் தனித்தன்மைகள்

### இலக்கண உரையாசிரியர்கள்

இறையனார் அகப்பொருளுரை

உரைகளில் காலத்தால் முற்பட்டது 'இறையனார் அகப் பொருளுரை' யாகும். இதுவே தமிழில் தோன்றிய முதல் உரைநூல். பின்னர்த் தோன்றிய மற்ற எல்லா உரைகளுக்கும் இது வழிகாட்டியாய் விளங்குகின்றது. இந்த உரையிலிருந்து, உரைகளைப் பற்றிய பல பொதுவான செய்திகளை அறிந்து கொள்ளலாம். இது மிகச் சிறந்த இலக்கியமாய் அமைந்து, கற்போர்க்குப் பேரின்பம் தருகின்றது.

'இறையனார் அகப்பொருள்' சிறந்த அகப் பொருள் இலக்கண நூல். இதனை இறையனார் களவியல் என்றும் வழங்குவதுண்டு. களவியல் என்பது சிறப்பினாற் பெற்ற பெயர் என்றும், 'களவு கற்பு என்னும் கைகோள் இரண்டனுள் களவினைச் சிறப்புடைத்தென்று வேண்டும் இவ்வாசிரியன்' என்றும் இந்நூலின் உரையாசிரியர் கூறுகின்றார். இந்நூல் களவு கற்பு என்ற இரு பிரிவுகளை உடையது. களவினுள் 33 நூற்பாக்களும், கற்பினுள் 27 நூற்பாக்களுமாக 60 நூற்பாக்கள் உள்ளன. ஒட்டக்கூத்தர், இதனை 'அமுத சூத்திரம் அறுபதாய்ச் சமை நூல்' என்று போற்றியுள்ளார்.*

இந் நூலை இயற்றியவர் இறையனார். இறையனாரை இந் நூலின் உரை, மதுரை ஆலவாய்ச் சோமசுந்தரக் கடவுள் என்று குறிப்பிடுகின்றது. நூல் தோன்றிய வரலாற்றை, "அக்காலத்துப் பாண்டியனும் சங்கத்தாரும் பொருளிலக்கணம் பெறாது, இடர்ப்படுவாரைக் கண்டு ஆலவாயிற்பெருமான் அடிகளால் வெளிப்படுத்தப்பட்டது" என்று சுருக்கமாகக் கூறுகின்றது.

தொல்காப்பியத்திற்கு இளம்பூரணரே முதன்முதலில் உரைகண்டார். இவரது காலம் பதினோராம் நூற்றாண்டு என்பர். இளம்பூரணர் காலம் வரை - தொல்காப்பியம் தோன்றியப் பல நூறு ஆண்டுகள் வரை, உரை இல்லாமலே கற்கப்பட்டு வந்ததா என்ற வினா எழக்கூடியதே. ஆனால்

இந்நாள் வரை, இளம்பூரணரே தொல்காப்பியத்தின் முதல் உரையாசிரியர் என்ற கருந்து நிலவி வருகின்றது. இளம்பூரணர் தம் உரைகளில் பிற உரைகளாகச் சில கருத்துகளைத் தெரிவிக்கின்றார். உரை இயற்றிவர் பெயரைக் குறிப்பிடவில்லை.

இளம்பூரணர் தொடங்கி வைத்த உரைப்பணி, பல வகையாக வளர்ச்சி பெற்றது. இவரது கருத்துகளை ஏற்று, புதிய இலக்கண நூல்களைச் சிலர் செய்தனர். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகிய இரண்டிலும் இவர் கூறிய கருத்துகளைக் கொண்டு, நேமிநாதமும் நன்னூலும் தோன்றியன.

இளம்பூரணர் உரை, சேனாவரையரும் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் மிக நயமாகத் தொல்காப்பியத்திற்கு உரை எழுத உறுதுணையாய் அமைந்தது. தொல்காப்பியம் போன்ற பழம்பெரும் இலக்கண நூல்களுக்கு, அவை தோன்றிப் பல நூறு ஆண்டுகள் கழிந்த பின்னர் முதன் முதலில் உரை காண்பது எளிய செயல் அன்று. தகுதி வாய்ந்த ஒருவர் உரை கண்டபின், அவரைப் பின்பற்றி வேறு உரை கண்டு விளக்கம் எழுதுதல் அரிய செயல் அன்று. இளம்பூரணர்க்குப் பின் தொல்காப்பியத்திற்கு உரை கண்ட சேனாவரையர் நச்சினார்க்கினியர் முதலியோர் இவர் உரையினைப் போற்றி, பல முறை பயின்று தெளிவு பெற்று, இவருடைய புலமைச் சிறப்பை நன்கு உணர்ந்துள்ளனர்; இவரிடம் பெருமதிப்புக் கொண்டவராய் இருக்கின்றனர். தொல்காப்பியம், மாபெரும் நூலாக இன்று இத்துணைச் சீரும் சிறப்பும் எய்தித் திகழ இவரது உரை துணை செய்தது என்று கூறுவது வெறும் புகழ்ச்சியன்று.

இளம்பூரணர் ஒருவரே ‘உரையாசிரியர்’ என்ற சிறப்புப் பெயரால் தமிழிலக்கிய உலகத்திற்கு அறிமுகமானவர். இவரது பெயரைக் கூறாமல், உரையாசிரியர் என்றே சேனாவரையர் நச்சினார்க்கினியர் முதலியோர் குறிப்பிடுகின்றனர். அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தில் வேனிற்காதையின் தொடக்கத்தில் “உரையாசிரியரான இளம்பூரண அடிகள்” என்று குறிப்பிடுவதால், இளம்பூரணரே உரையாசிரியர் என்று உணரலாம்.

தொல்காப்பியம் பயில்வோர், எழுத்ததிகாரத்திற்கு நச்சினார்க்கினியர் உரையையும், சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையர் உரையையும், பொருளதிகாரத்திற்கு நச்சினார்க்கினியர் (முன் ஐந்து இயல்கள்), பேராசிரியர் (பின் நான்கு இயல்கள்) ஆகியோர் உரைகளையும் விரும்பிக் கற்பது வழக்கம். இவ்வழக்கம் பல நூற்றாண்டுகளாக இருந்து வருகின்றது. இவ்வுரைகள் மிகுதியாகப் பயிலப்பட்டு வருவதால், தொல்காப்பியம் முழுவதற்கும் உரை கண்ட இளம்பூரணர் உரை வழக்கிழந்தது; பல ஆண்டுகள் இருக்குமிடம் தெரியாமல் இருந்து வந்தது.

சேனாவரையர்

தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரைகண்ட புலவர் பெருமக்கள்ஐவர்*. இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் ஆகிய ஐவரும் ஒருவர்பின் ஒருவராகக் காலந்தோறும் சொல்லதிகாரத்திற்கு விரிவான உரைஎழுதி, தமிழ்மொழிக்கு தொண்டு புரிந்தனர். ஐவரில் சேனாவரையர் உரையே இன்றுவரை, புலவர்உலகம் போற்றும் பெருமையுடன் விளங்குகின்றது. சேனாவரையர்உரை தோன்றியபின், அதற்குமுன் வழங்கி வந்த இளம்பூரணர்உரை,

செல்வாக்கு இழந்தது. பயில்வார் இன்றிப் போயிற்று. ஆனால், சேனாவரையர் உரைக்குப்பின் தோன்றிய உரைகள் யாவும் அவ்வுரை முன் நிற்கும் ஆற்றலின்றிப் பீடு குறைந்தன; சேனாவரையர்உரை பெற்ற பெருமையும், போற்றுதலும் பெறாமல் நின்றன.

சேனாவரையர் சொல்லதிகாரத்திற்கு மட்டுமே உரை எழுதியுள்ளார். இவர் வேறு நூலோ, உரையோ எழுதியிருப்பதாகத் தெரியவில்லை. சிவஞான முனிவர், “சேனாவரையர் எழுத்ததிகாரத்திற்கு உரைசெய்தார் ஆயின்,

இன்னோரன்ன பொருளனைத்தும் தோன்ற, ஆசிரியர் கருத்துணர்ந்து உரைப்பர். அவர், சொல்லதிகாரம் போலப் பெரும்பயன்படாமை கருதி

எழுத்திகாரத்திற்கு உரை செய்யாது ஒழிந்தமையின் பின்னுள்ளோரும் மயங்குவராயினர்” என்று கூறுகின்றார். மேலும் சேனாவரையர், தம் உரையில், எழுத்ததிகாரத்தை எழுத்தோத்து (சொல். 143, 420) என்றும், பொருளதிகாரம் (250) என்றும், உவமஇயலை அணியியல் (சொல்.440) என்றும் குறிப்பிடுகின்றார். எழுத்ததி காரத்திலிருந்தும் பல சூத்திரங்களை எடுத்து விளக்கிச் செல்லுகின்றார்.

சேனாவரையர் உரை, திட்பமும் நுட்பமும் வாய்ந்தது. சேனாவரையரின் புலமைப் பெருமிதமும் ஆராய்ச்சி வன்மையும் கருத்துத் தெளிவும் உரை முழுவதிலும் உள்ளன. கற்கண்டை வாயிலிட்டு மெல்ல மெல்லச் சுவைத்து இன்புறுவதுபோல், இவர் உரையை நாள்தோறும் பயின்று மெல்ல மெல்ல உணர்ந்து மகிழ வேண்டும். பலமுறை ஆழ்ந்து பயின்றாலும் இவ்வுரையை முற்றும் பயின்று விட்டோம் என்ற மனநிறைவு ஏற்படுவதில்லை. செங்குத்தான மலைமீது ஏற, கல்லும் முள்ளும், மேடும் பள்ளமும் நிறைந்த குறுகிய வழியில் வெயிலில் நடப்பது போன்ற உணர்ச்சியை, இவ்வுரையைக் கற்கத் தொடங்கும் மாணவர் முதலில் அடைவர்; முடிவில், மலையுச்சிக்குப் போய், மர நிழலில் நின்று, தண்ணென்ற காற்று வீச மெய் குளிர்ந்து, அங்கிருந்தபடியே மண்ணும் விண்ணும் வழங்கும் இன்பக் காட்சியைக் கண்டு மகிழும்போது பெறும் இன்ப உணர்வைப் பெறுவர்.

சேனாவரையர் நன்னூலார் கருத்துக்களைத் தம் உரைகளில் ஆங்காங்கே சுட்டிச் செல்லுகின்றார். ‘புதியன தோன்றினாற் போலப் பழையன கெடுவனவும் உள எனக் கொள்க’ (452) என்று சேனாவரையர் கூறுவது,

பழைய கழிதலும் புதியன புகுதலும்

வழுவல கால வகையி னானே

(நன்.-462)

என்ற நன்னூல் சூத்திரத்தை நினைவூட்டுகின்றது.

பேராசிரியர்

பேராசிரியர் என்ற பெயருடன் தமிழிலக்கிய உலகில் பலர் உள்ளனர். தொல்காப்பியம் பொருளதிகாரத்திற்கு உரை வகுத்த பேராசிரியர், பல ஆண்டுகளாக நன்கு அறிமுகமானவர்.

பொருளதிகாரம் பின்னான்கு இயல்களுக்குப் பேராசிரியர் உரை உள்ளது. ஆதலின் தொல்காப்பிய உரையாசிரியர்களுள் ஒருவராக-கற்றவர் நெஞ்சத்தில் நிலையான இடத்தைப் பெற்றவராக இவர் விளங்குகின்றார்.

திருக்கோவையார் உரை எழுதிய பேராசிரியர்

திருக்கோவையாருக்கு உரை எழுதியவர் பேராசிரியர் என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றார். திருக்கோவையார் உரையில் பல இடங்களில் இலக்கண மேற்கோளாக, தொல்காப்பியச் சூத்திரங்களைக் காட்டுகின்றார். அவ்விடங்களில் தொல்காப்பியத்திற்கு உரைசெய்ததாய் எவ்விதக் குறிப்பும் காட்டவில்லை. மேலும், பொருளதிகார உரையாசிரியராகிய பேராசிரியர் செய்யுளியலில் (155) “இனி, கோவையாக்கி எழுத்து எண்ணி அளவியற்படுத்துச் செப்பினும் அவையேயாம்” என்று குறிப்பிட்டு, ‘காண்பான் அவாவினால்’ என்று தொடங்கும் கோவைச் செய்யுள் ஒன்றைக் காட்டுகின்றார். எவ்விடத்திலும் திருக்கோவையார் செய்யுள் ஒன்றையும் மேற்கோள் காட்டவில்லை. ஆதலின் திருக்கோவையார் உரையாசிரியராகிய பேராசிரியர் வேறு ஒருவர் என்று கருத வேண்டியுள்ளது.

தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியர், கடல் போல் பரந்த புலமையுடையவர். இவரது புலமைத் திறனைத் தொல்காப்பியம் பொருளதிகார உரையில் கண்டு வியக்கலாம். இப் பேராசிரியர் தம் உரைகளில் நன்னூல், தண்டியலங்காரம், யாப்பருங்கலம் ஆகிய நூலாசிரிர்களின் கருத்துகளை எடுத்துக் கூறி மறுக்கின்றார். எனவே, இவர் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பிறபட்டவர் என்னலாம்.

தெய்வச்சிலையார்

தெய்வச்சிலையார் சொல்லதிகாத்திற்கு உரை இயற்றிவர். இளம்பூரணர், சேனாவரையர் ஆகியவர்க்குப் பிறபட்டவர். இவர், தம்

உரையில் மற்ற உரையாசிரியர்களையோ, பிறர் கருத்தையோ குறிப்பிடவில்லை.

தெய்வச்சிலை என்ற தொடர், பல பொருளையுடையது. சிலை என்பதற்கு, கல் மலை வில் முதலிய பொருள்கள் உண்டு. போரில் இறந்த வீரர்களுக்கு நினைவாக நட்ட கல்லை, (நடுகல்லை) கொங்குநாட்டவர் தெய்வச்சிலை என்பர். பொதியமலை, தெய்வச்சிலை எனப்படும். திருமால் ஏந்திய வில்லை தெய்வச்சிலை என்பர்.

மேலும், இவர் செய்யுளில் உரையில் (செய். 149),

கொன்றை வேய்ந்த செல்வன் அடியிணை

என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே

என்னும் கொன்றைவேந்தன் செய்யுளை மேற்கோள் காட்டுகின்றார். மூதுரை என்னும் நீதிநூலிலிருந்து, 'அட்டாலும் பால் சுவை' என்ற பாடலையும் மேற்கோள் காட்டுகின்றார்.

கல்லாடர்

கல்லாடர் அல்லது கல்லாடனார் என்ற பெயருடன் பண்டைக் காலத்தில் புலவர் சிலர் இருந்தனர். அவர்களுள் ஒருவர் சொல்லதிகாரத்திற்கு உரைகண்ட கல்லாடர். கல்லாடம் என்பது ஊரின் பெயர். அவ்வூரில் சிவபெருமான் கல்லாடர் எனப்படுகின்றார். அப் பெயரை மக்களுக்கு இட்டு வழங்கினர்.

சொல்லதிகாரத்திற்கு உரை இயற்றியவர் அனைவர்க்கும் பிற்பட்டவர் கல்லாடர். இவர் உரை, முன்னோர் உரைகளிலிருந்து தமக்குப் பிடித்தவற்றை எல்லாம் ஒருங்கு சேர்த்து எழுதப்பட்ட உரையாக உள்ளது. இளம்பூரணர்,

சேனாவரையர் ஆகிய இருவரும் காட்டிய உதாரணங்களைக் கல்லாடர்

அப்படியே மேற்கொள்கின்றார். "பெயர் நிலைக் கிளவி" என்னும் சூத்திர உரை நச்சினார்க்கினியர் உரையின் எதிரொலியாகவே உள்ளது. பரிமேலழகர் "ஒன்றாக நல்லது" (323) என்னும் குறள் உரையில் கூறிய "முற்கூறியதிற்

பிற்கூறியது வலியுடைத்து ஆகலின்" என்னும் தொடரைக் கல்லாடர் 159 நூற்பாவுரையில் மேற்கொள்ளுகின்றார்.

இலக்கிய உரையாசிரியர்கள்

பத்துப்பாட்டு முழுவதற்கும் உரை எழுதியுள்ள நச்சினார்க்கினியர் உரைத்திறன்களை முன்னர்க் கண்டோம். அவருக்கு முன்னும் பத்துப்பாட்டிற்குச் சில பழைய உரைகள் இருந்தன. அவ்வுரைகளை நச்சினார்க்கினியர், பெயர் குறிப்பிடாமல் சுட்டுகின்றார். அந்த உரையாசிரியர் கொண்ட வேறு வேறு பாடங்களைக் காட்டுகின்றார்.

திருமுருகாற்றுப் படைக்கு மட்டும் நான்கு பழைய உரைகள் கிடைத்து வெளிவந்துள்ளன.

பத்துப்பாட்டு முழுவதற்கும் பொ. வே. சோமசுந்தரனார் மிக அருமையான உரை எழுதியுள்ளார். இவர்க்குமுன், வை. மு. கோபால கிஷ்ணமாச்சாரியர் பத்துப் பாட்டில் பெரும்பான்மையான பாடல்களுக்கு உரைகண்டுள்ளார். ஐயம்பெருமாள் கோனார் கல்லூரி மாணவர்கட்குப் பாடமாக வைத்த பாடல்களுக்கு உரையும் விளக்கமும் எழுதியுள்ளார். ந. சி. கந்தையாபிள்ளை எல்லாப் பாடல்களுக்கும் பொழிப்புரை (வசனம்) தந்துள்ளார். பத்துப் பாட்டுச் சொற்பொழிவு நூலைக் கழகம் வெளியிட்டுள்ளது.

டாக்டர் மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டில் வருகின்ற இடப் பெயர்களை விரிவாக ஆராய்ந்து இன்று அவை எங்கெங்கே உள்ளன என்று தக்க சான்றுகளுடன் காட்டியுள்ளார். முற்காலத்து அரசியல் நாகரிகம் மன்னர் வரலாறு மக்கள் வாழ்க்கை ஆகியவற்றை நன்கு விளக்கியுள்ளார்.

பரிமேலழகர் உரை:

சென்னை நகரில் தோன்றிச் சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்க, பல அரிய தமிழ் நூல்களை வெளியிட்டு வருகின்ற சைவ சித்தாந்த மகாசமாஜம், பல ஆண்டுகளுக்கு முன், பரிமேலழகர் உரை என்ற பெயரோடு

திருமுருகாற்றுப் படைக்குப் பழைய உரை ஒன்றினை வெளியிட்டது. இதனை இயற்றியவர் பரிமேலழகர் அல்லர் என்பர் ஆராய்ச்சியாளர். டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர், பத்துப்பாட்டு மூன்றாம் பதிப்பில், அடிக்குறிப்பாக இவ்வுரையைச் சேர்த்து 'வேறுரை' என்று குறிப்பிட்டுள்ளார்.

பரிமேலுழகர் பெயரால் வழங்கிவரும் இந்தப் பழையவுரை பல வகையில் சிறப்புடையது. செறிவும் நுட்பமும் வாய்ந்தது; நல்ல தமிழ் நடையில் ஆனது; அடிதோறும் பதவுரை கூறிக் கீழே அருஞ் சொல் விளக்கம், வினைமுடிபு, இலக்கணக் குறிப்பு ஆகியவற்றைத் தருவது.

நற்றிணை

நற்றிணைக்குப் பழைய உரை இல்லை. இருபதாம் நூற்றாண்டு உரையாசிரியர்களில் ஒருவரான பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் நற்றிணைக்குச் சிறந்த உரையும் ஆராய்ச்சி முன்னுரையும் இயற்றிப் பதிப்பித்தார். அண்மையில் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை, அரியதோர் உரை விளக்கம் எழுதியுள்ளார்.

குறுந்தொகை

குறுந்தொகைக்குப் பேராசிரியர் 380 பாடல்களுக்கும், அவர் உரை எழுதாது விட்ட இருபது பாடல்களுக்கு நச்சினார்க்கினியரும் உரை இயற்றினர் என்ற செய்தியை நச்சினார்க்கினியர் உரைப்பாயிரம் கூறுகின்றது. இருபெரும் உரையாசிரியர்களும் இயற்றிய பழையவுரை மறைந்து போயிற்று.

இருபதாம் நூற்றாண்டில், திருக்கண்ணபுரம் திருமாளிகைச் சௌரிப் பெருமாள் அரங்கன் (1915-ஆம் ஆண்டில்) குறுந்தொகையைப் பதிப்பித்து

உரையும் இயற்றினார். டாக்டர். உ.வே.சாமிநாத ஐயரும், பொ.வே.சோமசுந்தரனாரும் குறுந்தொகைக்கு விளக்கவுரை எழுதியுள்ளனர்.

அகநானூற்றுக்குப் பழைய உரை உண்டு. அதனை இயற்றியவர் பால்வண்ணத் தேவர் என்பவர். அவர் அகவலால் உரை கண்டார் என்று சிறப்புப்பாயிரம் கூறுகின்றது. அந்த அகவல் உரை கிடைக்கவில்லை. மறைந்து போன உரை நூல்களுள் அதுவும் ஒன்று.

அகநானூற்றுக்குக் குறிப்புரைகள் இரண்டு பழங்காலத்தில் தோன்றியுள்ளன. அவற்றுள் ஒன்று, கடவுள் வாழ்த்திற்கும் முதல் தொண்ணூறு பாடல்களுக்கும் குறிப்புரையாய் அமைந்துள்ளது. இவ்வுரையாசிரியர் ஒவ்வொரு செய்யுளிலும் உள்ள அருஞ்சொற்களுக்கும், அரிய தொடர்களுக்கும் பொருள் எழுதுகின்றார். உள்ளுறை உவமம், இறைச்சிப்பொருள் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றார். வேண்டிய இடங்களில் சொல்முடிபு, பொருள்முடிபு, இலக்கணக் குறிப்பு, வரலாற்று நிகழ்ச்சி ஆகியவற்றைத் தருகின்றார்.

இலக்கிய உரையாசிரியர்கள்

நீதி நூல்களில் ஏலாதி நீங்கலாக உள்ள எட்டிற்கும் பழைய உரைகள்முழுமையாய் உள்ளன. ஏலாதியில் சில பகுதிகளுக்கு உரை சிதைந்து விட்டது.

அகப்பொருள் நூல்களில் ஐந்திணை ஐம்பது, திணைமாலை ஐம்பது இரண்டிற்கும் பழைய உரைகள் முழுமையாகக் கிடைத்துள்ளன. திணைமாலை நூற்றைம்பதில், 126 ஆம் பாட்டிற்குமேல் பழைய உரை கிடைக்கவில்லை. ஐந்திணை எழுபதில், முதல் 24 பாடல்களுக்கே உரை உள்ளது. கைந்நிலை, நூல் சிதைந்துள்ளது போலவே உரையும் சிதைந்துள்ளது. கார் நாற்பதில் 23 முதல் 38 வரையுள்ள பாடல்களுக்குப் பழைய உரை இல்லை.

புறப்பொருள் நூலாகிய களவழி நாற்பதுக்கு உரை முழுமையாகக் கிடைத்துள்ளது.

இந்தப் பழைய உரைகள் யாவும் பொழிப்புரையாக உள்ளன; பழையமரபு அறிந்து எழுதப்பட்டுள்ளன. சுருக்கமும் தெளிவும் பெற்றுள்ளன; அருஞ்சொற்பொருளும் இலக்கணக் குறிப்பும் தருகின்றன.

1883-ஆம் ஆண்டில், ஆசாரக் கோவையைப் பழைய உரையுடன், திருத்தணிகை விசாகப் பெருமாள் ஐயர் வெளியிட்டார். தருமர் பதுமனாருக்குப்பின் நாலடியாருக்கு உரை எழுதியவர். உரைப்பாயிரத்தில் இவர் பதுமனாரைக் குறிப்பிடுகின்றார். திருக்குறள் உரையாசிரியர்களில் 'தருமர்' குறிப்பிடப்படுகின்றார். இருவரும் ஒருவரா அல்லது வேறுபட்டவரா என்று அறிய, திருக்குறள் தருமர்உரை கிடைக்கவில்லை.

பதுமனார் உரைக்கு விரிவுரையாகத் தருமர்உரை உள்ளது. பாடலுக்குப் பொழிப்புரை இயற்றியபின் மிகவிரிவாக நயமும் பொருளும் கூறுகின்றார்.

தருமர் உரைப்பாயிரம் நாலடியாரைப் பற்றியும், பதுமனாரைப்பற்றியும்விளக்கமாகக் குறிப்பிடுகின்றது.

நாலடியார் பாடல்கள் இயற்றிய முனிவர்களை,

வளங்கெழு திருவொடு வையகம் முழுதும்
உளங்குளிர் இன்பத்து இன்பம் உவப்ப
வண்பெருஞ் சிறப்பின் மாதவம் புரிந்தாஅங்கு
எண்பெருங் குன்றத்து இருந்தவ முனிவர்

என்று பாயிரம் குறிப்பிடுகின்றது; சமண முனிவர்கள் தவம் புரிந்துகொண்டு எண்பெருங் குன்றத்து இருந்ததைக் கூறுகின்றது. அம் முனிவர்கள் எண்ணாயிரம் வெண்பாக்கள் இயற்றியதாய்ப் பாயிரம் கூறுகின்றது: தருமர் நாலடியாருக்கும் உரை இயற்றியுள்ளார். அவ்வுரை அச்சில் வந்துள்ளது. இவரைப்பற்றி வேறு செய்தி எதுவும் தெரியவில்லை.

நச்சர் என்பவர் நச்சினார்க்கினியர் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் நச்சர், நச்சினார்க்கினியர் என்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை. பெயரில் உள்ள சில எழுத்துக்களின் ஒற்றுமை அவ்வாறு நினைக்க இடம் தருகின்றது. நச்சினார்க்கினியரைப்பற்றிய சிறப்புப் பாயிரம் அவர் திருக்குறளுக்கு உரை இயற்றியதாய்க் குறிப்பிடவில்லை.

திருமலையர் என்பவர் சமணராய் இருத்தல் கூடும். திருமலை என்பது, வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளது; சமணர்க்குரிய இடமாய்த் திகழ்ந்து வருகின்றது. தாமத்தர், மல்லர் ஆகியோரைப்பற்றி எந்தச் செய்தியும் வெளிப்படவில்லை.

பத்து உரைகளே அன்றி, இயற்றியவர் பெயர் தெரியாத இரண்டு உரைகளும் உள்ளன. அவற்றுள் ஒன்றினை ‘திருக்குறள் பழையவுரை’ என்ற பெயருடன் டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம் வெளியிட்டுள்ளது. மற்றோர் உரை பரிதியாரின் உரையைத் தழுவி எழுதப்பட்டுள்ளது. முதல் பதினோரு அதிகாரங்களுக்குமேல் இப் பழைய உரைக்கும் பரிதியார் உரைக்கும் வேறுபாடில்லை. கடவுள் வாழ்த்துப் பகுதியில் சைவ சமயக் கருத்திற்கு ஏற்பக் கடவுளின் தன்மை கூறப்பட்டுள்ளது. வழக்குச் சொற்களும் வடசொற்களும் மிகுதியாக உள்ளன. சைவ சமயச் சார்புடைய புராணங்கள் மேற்கோள் காட்டப்பெறுகின்றன. நடைச் சிறப்பு இல்லாவிட்டாலும் கருத்துச் சிறப்பிற்காகக் கற்று மகிழவேண்டிய இடங்கள் பல உள்ளன.

திருக்குறளுக்குப் பல உரைகள் தோன்றியதற்கு உரிய காரணங்களை ஆராய்ந்த டாக்டர் வ.சு.ப.மாணிக்கம் பின்வரும் காரணங்களைக் கூறுகின்றார்:

பழைய உரைகளில் இன்று பரிமேலழகர் மணக்குடவர் பரிப்பெருமாள்காலிங்கர் பரிதி ஆகிய ஐவர் உரைகள் உரைக்கொத்திலும் உரை வளத்திலும் பரிப்பெருமாள் உரையும் தனித்தனியாய் வெளிவந்துள்ளன. ஏனைய உரைகளும் விரிவான ஆராய்ச்சிமுன்னுரைகளுடன் வெளிவருவது திறனாய்வுக்குப் பயன்தரும்.

1935-இல் பரிதி உரை வெளிவந்துள்ளது. அதனை மீண்டும் வெளியிடவேண்டும்.

திருவள்ளுவமாலை

திருக்குறள் இயல்அமைப்பை அறியத் திருவள்ளுவமாலை துணை செய்கின்றது; உரையாசிரியர்களின் கருத்தை ஒப்பிட்டுக் காண உதவுகின்றது. திருவள்ளுவ மாலையில் உள்ள,

பாயிரம் நான்கு இல்லறம் இருபான் பன்மூன்றே

தூய துறவறம் ஒன்று ஊழாக - ஆய

அறத்துப்பால் நால்வகையா ஆய்ந்துரைத்தார் நூலின்

திறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து

(திருவள்-25)

என்ற வெண்பா அறத்துப்பாலின் இயல்களைக் கணக்கிட்டு உரைக்கின்றது.

அரசியல் ஐயைந்து; அமைச்சியல் ஈரைந்து

உருவல் அரண்இரண்டு; ஒன்றுஒண்கூழ்;-இருவியல்

திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்று

எண்பொருள் ஏழாம் இவை.

(திருவள்-26)

என்ற வெண்பா, பொருட்பாலை ஏழு இயல்களாகப் பிரித்துக் காட்டுகின்றது.

**பரிதியார்**

திருக்குறளுக்கு உள்ள பழைய உரைகளில் மிகவும் எளிமையானது பரிதியார் உரையேயாகும். இவரது உரை பேச்சு நடையில் அமைந்து உலகு வழக்குச் சொற்களை மிகுதியாகக் கொண்டுள்ளது. இருப்பினும் அவற்றில் ஒரு வகை அழகும், எளிதில் பொருள் உணர்த்தும் ஆற்றலும் இருப்பதைக் காணலாம். மிகுதியாக வட சொற்கள் கலந்துள்ளன. இலக்கணச் செறிவு இல்லாத எளிய நடையில் சில இடங்களில் பிழைகளும் உள்ளன. சொற்பொழிவாற்றியதை எழுதி வைத்ததுபோல, பல இடங்கள் உள்ளன.

குறளின் கருத்தை அறிந்து தம் விருப்பம் போல், கூட்டியும் குறைத்தும் பொருள் கூறுகின்றார் பரிதியார். இவர் உரையைப் பொழிப்புரை என்றோ விளக்கவுரை என்றோ கூற இயலாது. சில இடங்களில் குறளைவிடச் சுருக்கமாக உரை உள்ளது. இன்னும் இடங்களில் குறளுக்கும் உரைக்கும் தொடர்பில்லாமல் எழுதிச் செல்கின்றார். 'குறளுக்கும் (பரிதியார்) உரைக்கும் ஒற்றுமைப்படுத்தி, கருத்து அறிந்து கொள்ளுதல் ஒரு கயிற்றலாகிய பாலத்தில்காவிரியைக் கடக்க நினைத்தலை ஒக்கும்.

பரிதியும் பரிமேலழகரும்

பரிதியாரின் கருத்துகளைப் பரிமேலழகர், சில இடங்களில் மறுக்கின்றார்;சில இடங்களில் என்பாரும் உளர் என்று மதித்துச் சுட்டுகின்றார்; பரிதியார்கொண்ட வேறு பாடங்களைக் குறிப்பிடுகின்றார்.

பரிதியாரின் கருத்துகளைப் பரிமேலழகர் அப்படியே ஏற்றுக் கொண்டஇடங்களும் உண்டு.

நகையும் உவகையும் கொல்லும் சினத்திற்
பகையும் உளவோ பிற (304)

என்ற குறளுக்குப் பரிதியார், "முகத்தில் சிரிப்பும் மனத்தில் களிப்பும் கொல்லுகின்ற சினத்திலும்" என்று கூறிய உரைப்பகுதியைப் பரிமேலழகர்,"முகத்தின்கண் நகையையும் மனத்தின்கண் உவகையும் கொன்று கொண்டு எழுகின்ற சினம்" என்று தம் கருத்தாக எடுத்து அமைத்துக் கொள்ளுகின்றார்.

உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வான்என்று
அப்பால்நாற் கூற்றே மருந்து (950)

என்ற குறளுக்குப் பரிதியின் விளக்கத்தைப் பரிமேலழகர் மேற்கொண்டு,சிலவற்றை மாற்றியும் கூட்டியும் குறைத்தும், தம் உரையில் அமைத்துள்ளார்.

காலிங்கர் ஒரு பாலின் தொடக்கத்தில் எழுதும் முகவுரையின் இறுதியில், அடுத்துவரும் பாலுக்குத் தோற்றுவாயும் எழுதுகின்றார்; இயல் ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றார்; ஒவ்வோர் அதிகாரத்தின் இறுதிக் குறளிலும் அடுத்த அதிகாரத்தைத் தொடர்பு படுத்திக் காட்டுகின்றார். ஆனால், அதிகாரத்தின் தலைப்புப் பொருளை விளக்குவதில்லை.

திட்பமும் செறிவும் சுருக்கமும் வாய்ந்த நடையை இவரது உரையில் காணலாம். தனித்தமிழ் நடையில், சிறந்த தமிழ்ச் சொற்களை ஆளுகின்றார். உரை முழுவதும் இவரது தனித்தமிழ் ஆர்வம் மணம் வீசுகின்றது. பழைய நூல்கள் பலவற்றிலிருந்து மேற்கோள் தருவதால், இவர் புலமை மிக்கவர் ஆவார்.

திருக்குறள் உரைகளில், பரிமேலழகர் உரைக்கு அடுத்தபடியாக அச்சேறி மக்களிடத்தில் பரவிச் செல்வாக்குப் பெற்ற பெருமை, மணக்குடவர் உரைக்கு உண்டு. பரிமேலழகர் உரையை மறுப்பவர்களும் அவரது கருத்தை ஏற்காதவர்களும் மணக்குடவர் உரையையே நோக்குவது பல ஆண்டுகளாக இருந்து வரும் வழக்கமாகும்.

மணக்குடவருடைய உரை, தெள்ளிய தமிழில் எளிய நடையில் அமைந்துள்ளது. பொழிப்புரையும், சில இடங்களில் விளக்கமும் உள்ளன. தமிழ்ப் பண்பாடு தழுவி எழுதப்பட்ட தெளிவுரை என்று இவரது உரையைப் போற்றுவர். பிற உரையாசிரியர்களைப்போல வட நூற் கருத்தைத் தம் உரையில் புகுத்துவதில்லை. புதிய பாடங்களைக் கொண்டு. சொற்களைப் பிரிக்கும் முறையில் புதுமை கையாண்டு சிறப்பாக உரை எழுதிச் செல்வது இவரது பண்பாகும்.

எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணைக்குத் தவிர, ஏனைய ஏழு நூல்களுக்கும் பழங்காலத்தில் உரைகள் தோன்றியுள்ளன. குறுந்தொகைக்குப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் எழுதிய உரை இருந்தது. அகநானூற்றுக்குப் பால்வண்ண தேவனார் இயற்றிய அகவல் உரையும் இருந்தது. ஆனால், இவ்விரு நூல்களின் பழையவுரைகள் மறைந்துபோயின.

ஐங்குறுநூற்றிற்குப் பழைய வுரையும் பதிற்றுப்பத்திற்குப் பழையவுரையும், அகநானூற்றுக்குப் பழைய குறிப்புரை இரண்டும் புறநானூற்றுக்கும் பழையவுரையும் உள்ளன. இவ்வுரைகளை இயற்றிய புலவர்களின் பெயரும் தெரியவில்லை. "ஊர் வேண்டேன்!" என்று முற்றத்துறந்த சான்றோர்கள் இவர்கள்.

பரிபாடலுக்குப் பரிமேலழகர் உரையும், கலித்தொகைக்கு நச்சினார்க்கினியர் உரையும் உள்ளன.

நீதி நூல்களில் ஏலாதி நீங்கலாக உள்ள எட்டிற்கும் பழைய உரைகள் முழுமையாய் உள்ளன. ஏலாதியில் சில பகுதிகளுக்கு உரை சிதைந்து விட்டது.

அகப்பொருள் நூல்களில் ஐந்திணை ஐம்பது, திணைமாலை ஐம்பது

இரண்டிற்கும் பழைய உரைகள் முழுமையாகக் கிடைத்துள்ளன. திணைமாலை நூற்றைம்பதில், 126 ஆம் பாட்டிற்குமேல் பழைய உரை கிடைக்கவில்லை. ஐந்திணை எழுபதில், முதல் 24 பாடல்களுக்கே உரை உள்ளது. கைந்நிலை, நூல் சிதைந்துள்ளது போலவே உரையும் சிதைந்துள்ளது. கார் நாற்பதில் 23 முதல் 38 வரையுள்ள பாடல்களுக்குப் பழைய உரை இல்லை.

புறப்பொருள் நூலாகிய களவழி நாற்பதுக்கு உரை முழுமையாகக் கிடைத்துள்ளது. இந்தப் பழைய உரைகள் யாவும் பொழிப்புரையாக உள்ளன; பழையமரபு அறிந்து எழுதப்பட்டுள்ளன. சுருக்கமும் தெளிவும் பெற்றுள்ளன; அருஞ்சொற்பொருளும் இலக்கணக் குறிப்பும் தருகின்றன.

1883-ஆம் ஆண்டில், ஆசாரக் கோவையைப் பழைய உரையுடன், திருத்தணிகை விசாகப் பெருமாள் ஐயர் வெளியிட்டார். சைவ சித்தாந்த கழகம், பல பழைய உரைகளை வெளியிட்டுள்ளது. பதினெண் கீழ்க்கணக்குகளில், திருக்குறளுக்கு அடுத்த படியாக அறிஞர் பெருமக்களின் பாராட்டுதலைப்பெற்ற நீதி நூல் நாலடியாராகும். இந் நூலுக்கும்

காலந்தோறும் பலப்பல உரைகள் தோன்றியுள்ளன. நாலடியாருக்குப் பழைய உரைகள் மூன்று உள்ளன. ஒன்று பதுமனார்

இயற்றியது. மற்றொன்று, தருமர் செய்தது. இன்னொன்று, பெயர் அறியப்படாத ஒருவர் செய்தது.

பதுமனார்

நாலடியாருக்கு முதன் முதலில் உரைகண்டவர் பதுமனார். பத்மம் என்ற சொல்லுக்குத் தாமரை என்பது பொருள். பதுமம் என்ற சொல்லின் திரிபு அது. பதுமம் என்ற பெயரினடியாகப் பிறந்த பெயரே பதுமனார் என்பது.

பதுமனாரின் வரலாறுபற்றி அறியத்தக்க சான்றுகள் கிடைக்கவில்லை.

நாலடியாரில் உள்ள நானூறு வெண்பாக்களையும் பொருள் அறிந்து ஓதி உணர்ந்து, திருக்குறளைப் பின்பற்றி அதிகாரம் தோறும் பத்துப்பாடலை அமைத்து அதிகாரங்களுக்கு ஏற்ற பெயரிட்டவர் பதுமனாரே. மேலும் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பெரும்பகுதியாக்கி, அவற்றில் பல இயல்களை அமைத்து உரை இயற்றிய வரும் இவரே ஆவார்.

வினாக்கள்

1. இலக்கண உரையாசிரியர்கள் குறித்து கட்டுரை வரைக.
2. இலக்கிய உரையாசிரியர்கள் பற்றி விளக்குக.

பார்வை நூல்கள்


1. அரவிந்தன்.மு.வை., உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-2002.
2. மோகன் இரா.சொக்கலிங்கம், உரை மரபுகள், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை-2003.
3. ச.வே.சுப்ரமணியன், அடியார்க்கு நல்லார் உரைத்திறன், ச.வே.மெய்யப்பன் பதிப்பகம்,சிதம்பரம்-2006.
4. அரங்கராசன்,நம் பிள்ளை உரைததிறன், திருவாய்மொழி பேருரையாளர் மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம் 2002.



முனைவர்.ஆ.உஷா,

உதவிப்பேராசிரியர்,தமிழியல்துறை,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி,

9790381487

ushaskv23@gmail.com